2017 மார்ச் 14
செவ்வாய்
விலை: 20/-
■ ஹிஜ்ரி 1438 ஜ.ஆகிர் பிறை 14 ■ பக்கங்கள் 12 ■ மணி 03 ■ ஒளி 042
QD / 154 / NEWS / 2017
NAVAMANI DAILY
நவமணி தினபதா
நவமணி
மக்களின் சுதந்திரமான குரல்

ஜெனீவா நெருக்குதலில் இருந்து இலங்கைக்கு மீட்சிபெற முடியுமா?



04 »



பிரேமதாஸ கொலை பிரபாகரனின் பிழையான தீர்மானம்

09 »

## முஸ்லிம் பெண் மரணம்

## வைத்திய நிபுணருக்கு 2 இலட்சம் சரீர பிணை

■ இக்பால் அலி

கண்டி தனியார் வைத்தியசாலையில் சத்திர சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்ட 25 வயதுடைய பெண் ஒருவர் மரணம் அடைந்த சம்பவம் தொடர்பாக

11 »»»»



# கிண்ணியாவில் தீவிரமடையும் டெங்கு அனர்த்த நிலையை பிரகடனப்படுத்தவும்



## மேலும் பலர் பலியாகும் அச்ச நிலை

## இளைஞர்கள் கிளர்ந்தெழும் அபாயம்

■ எம்.எஸ். முஹம்மது இக்ரிமா

கிண்ணியாவின் டெங்கு பரவும் நிலைமை நாளுக்கு நாள் மோசமாகிக் கொண்டு வருகின்றது. இது வரை 09 மரணங்கள் சம்பவித்துள்ளன. இன்னும் அனேகரது நிலைமை கவலைக்கிடமாக வுள்ளது மரணங்கள் 15 ஐயும் தாண்டும் வாய்ப்புள்ளது. ஊர் மக்கள், அனைத்து அரச, சமூக நிறுவனங்கள் அனைத்தும் களத்தில் நின்று வேலை செய்தபோதும் டெங்கு நோயாளிகளின் வைத்திய சாலை பதிவுகள் குறிப்பிடும் வகையில் குறையவில்லை.

டெங்கு நோயாளர்கள்

11 »»»»

## முன்னாள் அமைச்சர் ரேனுகா ஹேரத் காலமானர்



மத்திய மாகாண சபையின் எதிர்க்கட்சி தலைவரும் முன்னாள் அமைச்சருமான ரேனுகா ஹேரத்(72) நேற்று அதிகாலை காலமானார்.

கண்டி தனியார் வைத்தியசாலையில் சிகிச்சை

11 »»»»

## பார்வை திருடனை தோற்கடிப்போம்; 12 - 18 வரை குளுக்கோமா வாரம்



■ செ.தர்ஷிகா

குளுக்கோமா (கண் விழி அழுத்த நோய்) வாரத்தை மார்ச் மாதம் (12-18) முன்னிட்டு கண்ணுக்குத்தெரியாத 'பர்வைத் திருடனை தோற்கடிப்போம்' என்ற தொனிப்பொருளின் கீழ் மக்களுக்கு விழிப்பூட்டும் வகையில் நடைபவனியொன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக பதில் சுகாதாரப் பணிப்பாளர் ஜயசுந்தர பண்டார தெரிவித்தார்.

11 »»»»

## கிண்ணியாவில் டெங்கை கட்டுப்படுத்த உடன் நடவடிக்கை எடுங்கள்

### ராஜிதவிடம் றிஷாத் கோரிக்கை

கிண்ணியா பிரதேசத்தை டெங்கு பாதிக்கப்பட்ட பிரதேசமாக பிரகடனப் படுத்தி அங்கு பரவி வரும் டெங்குக் காய்ச்சலினால் மக்களுக்கு ஏற்பட்டு வரும்

11 »»»»





## காத்தான்குடியில் 10 பேர் கைது

■ காத்தான்குடி நிருபர்

காத்தான்குடியில் இரண்டு குழுக்களிடையில்

11 »»»»

## இடம்பெயர்ந்த முஸ்லிம் மாணவியின் பரீட்சை முடிவினை வெளியிடுங்கள்

### பிரதம நீதியரசர் உத்தரவு



■ அஸ்லம் எஸ்.மௌலானா

மன்னாரில் இருந்து இடம்பெயர்ந்த முஸ்லிம் மாணவியின் இடைநிறுத்தி

11 »»»»

## 25,000 ரூபா முற்பணம் செலுத்தி ஹஜ் பயணத்தை உறுதி செய்யுங்கள்



### கடிதங்கள் நேற்று அனுப்பி வைப்பு

■ ஆதில் அலி சப்ரி

ஹஜ் விண்ணப்பங்களை உறுதிசெய்வதற்கான கடிதங்கள் நேற்று அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாகவும், முற்கட்டணமாக 25,000 ரூபா செலுத்தி திணைக்களத்தில் பயணத்தை உறுதிசெய்து

11 »»»»

## சபாநாயகர் கருஜயசூரிய உடன் பதவி விலக வேண்டும்

### உதய கம்மன்பில வலியுறுத்து



■ அ. அருண் பிரசாந்த்

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க உள்ளிட்ட அரசதரப்பினருக்கு சார்பாக தொடர்ச்சியாக செயற்படும் சபாநாயகர் கருஜயசூரிய உடனடியாக பதவி விலக வேண்டும் என்று பிவிதுரு ஹெல உறுமயவின் தலைவரும் ஒருங்கிணைந்த எதிரணியின் பாராளுமன்ற உறுப்பினருமான உதய கம்மன்பில தெரிவித்தார்.

11 »»»»

## வெள்ளை சீனி, கோழி இறைச்சி கட்டுப்பாட்டு விலை நீக்கம்




கோழி இறைச்சிக்கும், வெள்ளைச்சீனிக்குமான கட்டுப்பாட்டு விலையை நீக்குவதற்கு நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபை நடவடிக்கை எடுத்து வருவதாக அதிகார சபையின் தலைவர் ஹஸித திலகரத்ன தெரிவித்தார்.

வாழ்க்கைச் செலவுக்கான அமைச்சரவை உப குழுவின் முடிவுக்கிணங்க இந்த இரண்டு பண்டங்களுக்கான கட்டுப்பாட்டு விலையை நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு அக்குழுவின் உறுப்பினர்களில் ஒருவரும் கைத்தொழில் வர்த்தக அமைச்சருமான ரிஷாட் பதியுதீன் நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபைக்கு

11 »»»»

## சைடம் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் நீர்த்தாரை, கண்ணீர் புகை பிரயோகம்

### வீதிகளில் கடும் போக்குவரத்து நெருக்கடி

■ அ. அருண் பிரசாந்த்

மாலபே, சைட்டம் தனியார் வைத்திய கல்லூரியைத் தடை செய்யுமாறு வலியுறுத்தி நேற்றைய தினம் பல்கலைக் கழக மாணவர்களால் மேற்கொள்ளப்பட்ட போராட்டத்தின் மீது நீர்த்தாரை மற்றும் கண்ணீர் புகைப் பிரயோகங்கள் மேற்கொள்ளப்பட்டன.

அத்தோடு, இந்த எதிர்ப்பு போராட்டத்தில் கலந்து கொண்டிருந்த

11 »»»»



## கைருல் பஷீரின் ஜனாஸா நல்லடக்கம்



பேருவளை ஜாமிஆ நளீமிய்யா கலாபீடத்தின் உதவிப் பணிப்பாளர் அஷ்ஷெய்க் எம்.ஐ.கைருல் பஷர் நளீமியின் ஜனாஸா நல்லடக்கம் நேற்று சீனன் கோட்டை பாசியா பெரிய பள்ளிவாயல் மையவாடியில் இடம்பெற்றது.

பெருந்திரலான மக்கள் மத்தியில் நேற்று காலை 10மணிக்கு

11 »»»»

# வடகிழக்கு இணைப்புடன் கரையோர மாவட்ட கோரிக்கையை சிண்டு முடிக்காதீர்

## பிரதி அமைச்சர் ஹரீஸ்



(ஏ.எல்.எம். சலீம்)

முஸ்லிம் காங்கிரஸ் வலியுறுத்தி வரும் அம்பாறை கரையோர மாவட்ட கோரிக்கையுடன் வடக்கு, கிழக்கு இணைப்பு விவகாரத்தை தொடர்பு படுத்தி சிண்டு முடிப்பதற்கு சிலர் முனைந்துள்ளனர். இது விஷமத்தனமான செயற்பாடாகும் என விளையாட்டுத்துறை பிரதி அமைச்சரும் முஸ்லிம் காங்கிரஸின் பிரதித் தலைவருமான எச்.எம்.எம். ஹரீஸ் கூறினார்.

சாய்ந்தமருது லீமெரிடியன் மண்டபத்தில் நடைபெற்ற (ஞாயிற்றுக்கிழமை) 'தாருஸ்ஸலாம் மறைக்கப்படாத உண்மைகள்' எனும் நூல் வெளியீட்டு விழாவில் பிரதம அதிதிகளுள் ஒருவராகக் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் சிரேஷ்ட பிரதித் தலைவரும்முன்னாள் கல்முனை மாநகர சபை பிரதி மேயருமான ஏ.எல். அப்துல் மஜீதின் முன்னிலையிலும் முஸ்லிம் காங்கிரஸின் பிரதிப் பொருளாளரும் கிழக்கு மாகாண சபை உறுப்பினருமான கே.எம்.ஏ. றஸாக் (ஜவாத்) தலைமையில் இந்த நூல் வெளியீட்டு விழா நடைபெற்றது.

விழாவில், பிரதி சுகாதார அமைச்சர் எம். பைஸல் காசிம் பிரதம அதிதிகளுள் ஒருவராக கலந்து கொண்டதுடன் கிழக்கு மாகாண சபை உறுப்பினர்களுட்பட முஸ்லிம் காங்கிரஸ் முக்கியஸ்தர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

முஸ்லிம் காங்கிரஸ் மாகாணசபை உறுப்பினர் கே.எம்.ஏ. றஸாக்கின் பதிப்பாக்கத்திலும் கவிஞர் நவாஸ் சௌபியின் எழுத்தாக்கத்திலும் வெளியிடப்பட்டுள்ள இந்த நூல் முஸ்லிம் காங்கிரஸ் கட்சித் தலைமையகமான தாருஸ்ஸலாம் தொடர்பாக அபாண்டங்களையும் ஊகங்களையும் வெளியிட்ட தாருஸ்ஸலாம் மறைக்கப்பட்ட மர்மங்கள் என்ற திருட்டுப் புத்தகத்திற்கான மறுப்புப் புத்தகம் எனச் சுட்டிக்காட்டப்பட்டிருந்தது.

நூல் வெளியீட்டு விழாவில் பிரதி அமைச்சர் ஹரீஸ் தொடர்ந்து உரையாற்றுகையில் பின்வருமாறு கூறினார்.

முஸ்லிம் காங்கிரஸ் எமது ஸ்தாபகத் தலைவர் மர்ஹூம் அஷ்ரப் காலத்திலிருந்தே தூர திருஷ்டியுடனான கரையோர மாவட்டக் கோரிக்கையை வலியுறுத்தி வருகின்றது.

அம்பாறை மாவட்டத்தில் வாழும் முஸ்லிம் மக்களுக்கும் தமிழ் மக்களுக்கும் பயன் தரும் வகையிலான இக்கோரிக்கையை நாம் என்றும் கைவிடவில்லை. இதனை நாம் பெற்றே ஆக வேண்டும்.

இக்கோரிக்கையின் நியாயபூர்வத்தை தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் ஐயாவே ஏற்றுக் கொண்டுள்ளதாக கல்முனையிலிருந்து சென்ற தமிழர் பிரதிநிதிகளிடம் கருத்து வெளியிட்டுள்ளார்.

அண்மையில் கல்முனை தமிழர் பிரதிநிதிகள் சிலருடன் நாம் நடத்திய சந்திப்பொன்றின் போது தமிழ் இளைஞர் ஒருவர் சம்பந்தன் ஐயாவின் மேற்படி கருத்தை வெளிப்படையாக தெரிவித்தார்.

ஆனால், அம்பாறை மாவட்டத்தில் தமிழ் மக்களின் பிரதிநிதியாகவிருக்கும் பாராளுமன்ற உறுப்பினர் கவீந்திரன் கோடீஸ்வரன் இதற்கு முரணான கருத்துக்களை வெளியிட்டு வருவது கவலையளிப்பதாகவே உள்ளது.

கரையோர மாவட்டத்திற்கு முற்றாக எதிர்ப்புத் தெரிவித்துவரும் அவர், பெரும்பான்மை சமூகத்தவரை அரச அதிபராகக் கொண்ட மாவட்ட நிருவாகத்தின் கீழேயே தமிழ் மக்களை தொடர்ந்தும் வைத்திருக்க விரும்பும் விதண்டாவாதக் கருத்தை வெளியிடுகின்றார்.

முஸ்லிம் சமூகம் திறந்த மனதுடன் செயற்பட்டு வரும் நிலையில் கரையோர மாவட்டம் தொடர்பில் தமிழர் தரப்பு இரட்டைக் கொள்கையுடனிருப்பது பொருத்தமானதல்ல.

அண்மையில் தலைவர் ரவூப் ஹக்கீம் தலைமையில் நாம் கல்முனையில் வைத்து கல்முனை தமிழர் பிரதிநிதிகள் சிலருடன் சந்திப்பொன்றில் கலந்து கொண்டோம்.

இச்சந்திப்பையடுத்து இன்று சிலர் தலைவரும் நாமும் வடக்கு கிழக்கு இணைப்புக்கு சம்மதம் வழங்கி விட்டதாக ஊடகங்களில் சமூக வலைத்தளங்களில் விசமப் பிரசாரங்களை செய்து வருகின்றனர்.

நாம் வலியுறுத்தும் கரையோர மாவட்டத்துடன், வடக்கு, கிழக்கு இணைப்பை சம்பந்தப்படுத்தி சிண்டு முடிக்க இவர்கள் முனைந்துள்ளனர்.

கரையோர மாவட்டத்துடன் கல்முனை தமிழ்ப்பிரதேச செயலகததை தரமுயர்த்த முயற்சித்தலை முடிச்சுப் போடுங்கள்.

ஆனால், வடக்கு, கிழக்கு இணைப்புடன் கரையோர மாவட்டத்தை முடிச்சுப் போடாதீர்கள் என இத்தகையோரைக் கேட்கின்றோம்.

எமது தலைமையும் கட்சியும் இந்த விடயங்களில் தெளிவாகவுள்ளதுடன் மிகப் பக்குவமாகவும் செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றது.

நாடு இன்று முக்கிய காலகட்டம் நோக்கி நகர்ந்து கொண்டிருக்கின்றது. அரசியலமைப்புத் திருத்தம், தேர்தல் முறை மாற்றம், இனப்பிரச்சினைக்கான தீர்வு போன்ற முக்கிய விடயங்கள் நம் முன்னுள்ளன.

இந்த நிலையில் பதவிகள் தேவைப்பட்டும் சுய தேவைகளை நிறைவேற்ற முயன்றும் தோல்வி கண்டவர்கள் கட்சிக்கும் தலைமைக்கும் நெருக்கடி கொடுக்க முனைந்துள்ளனர்.

நம் பேரம் பேசும் சக்தியை பலவீனப் படுத்துவதற்கும் இவர்கள் கனவு காண்கின்றனர். எனினும் இத்தகைய சவால்களை நாம் முறியடிப்போம். இந்த வகையில் முஸ்லிம் காங்கிரஸ் போராளியாகவே நானிருப்பேன்.

இன்று முஸ்லிம் காங்கிரஸால் முகவரி பெற்ற சிலரே கட்சியை சிதைக்க முற்பட்டுள்ளனர். இவர்கள் தலைமைக்கு எதிராகவும் கட்சிக்கு எதிராகவும் குரல் எழுப்புவதற்கு எந்த அருகதையும் அற்றவர்கள்.

தமிழ் சமூகத்தின் விடுதலை வேட்கையையும் சாத்வீகப் போராட்டங்களையும் அவதானித்து வருகிறார்கள் நம் இளைஞர்கள்.

சர்வதேச சமூகத்தின் ஆதரவுடன் ஜெனீவாவில் அவர்களது கை ஓங்கி அரசு கெஞ்சும் நிலைமை ஏற்பட்டுள்ளது.

இந்த அடிப்படையில் முஸ்லிம் சமூகத்தின் உரிமைக்கான விடிவுக்கான வேலைத்திட்டங்களையும ஏன் முன்னெடுக்க முடியாதென நம் இளைஞர்களும் கேட்கும் நிலை இன்று ஏற்பட்டுள்ளது. இவ்வாறு அவர் கூறினார்.

பிரதி சுகாதார அமைச்சர் எம். பைஸல் காசிம் உரையாற்றுகையில்,

இன்று கட்சியுடன் முரண்பட்டு வெளியேறிய சிலர் மேடை போட்டு பேசும் பேச்சுக்கள் கவலையளிப்பதாகவுள்ளது.

இவர்கள் மனச்சாட்சியுடன் பேச வேண்டும். கடந்த காலங்களை இவர்கள் திரும்பிப் பார்க்க வேண்டும்.

பண பலத்தால் முஸ்லிம் காங்கிரஸை அழித்து தலைமை தாங்க முயற்சிக்கும் பெரிய பூதமொன்று இவர்கள் பின்னாலுள்ளது. எந்தப் பூதமும் எம்மிடம் வாலாட்ட முடியாது.

இந்த நூல் வெளியீட்டின் மூலம் மாகாண சபை உறுப்பினர் ஜவாத் பாராட்டத்தக்க பணியைச் செய்துள்ளார் என்றார்.



தேசிய அருங்கலை பேரவையின் ஷில்ப நவோதா 2017 கைப்பணி கண்காட்சி மற்றும் பாடசாலை கைவினைப் பொருட்களை அபிவிருத்தி செய்வதற்கான வேலைத்திட்டம் பத்தரமுல்லை அபேகம வளாகத்தில் பேரவையின் தலைவி ஹேஸானி போகல்லாகம தலைமையில் நடைபெற்றபோது நிகழ்வில் அதிதிகளாக கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம், கைத்தொழில் மற்றும் வாணிப அமைச்சர் றிஷாத் பதியுதீன் மற்றும் மாகாண சபை உறுப்பினர் மொஹமட் பாயிஸ் ஆகியோர்கள் பங்கேற்றிருப்பதையும் கொழும்பு தெமட்டகொடை அல்-ஹிஜ்ரா பாடசாலை மாணவகள் உள்ளிட்ட கலந்து கொண்ட ஏனைய மாணவர்களில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம். (படம்-ஏ.எஸ்.எம்.இர்ஷாத்)

## விவசாய கல்லூரிக்கு மாணவர்களை இணைக்கும் போட்டிப் பரீட்சை

(பி. முஹாஜிரீன்)

விவசாய கல்லூரிக்கு 2017/2018ம் ஆண்டுக்கான ஆங்கில மொழி மூல விவசாய உற்பத்தி தொழில்நுட்பக் கல்வி ஒருவருட தேசிய டிப்ளோமா பாடநெறியை பயில்வதற்கு புதிய மாணவர்களை சேர்த்துக் கொள்வதற்கான போட்டிப் பரீட்சை எதிர்வரும் 19ம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளதாக பாலமுனை விவசாய கல்லூரியின் அதிபரும் உதவி விவசாய பணிப்பாளருமான எம்.எப்.ஏ. சனீர் தெரிவித்தார்.

பாலமுனை, கண்டி, வவுனியா மற்றும் காலி ஆகிய இடங்களில் பரீட்சைகள் நடைபெறவுள்ளதாகவும் அவர் கூறினார்.

கிழக்கு மாகாண பரீட்சை பாலமுனை விவசாயக் கல்லூரியில் நடைபெறவுள்ளதாகவும் இதில் 120 தமிழ் மொழி மூல பரீட்சாத்திகளும் 14 சிங்கள மொழி மூல பரீட்சாத்திகளும் தோற்றவுள்ளதாகவும் அவர் மேலும் கூறினார்.

பாலமுனை விவசாயக் கல்லூரிக்கு 40 மாணவர்கள் அனுமதிக்கப்படவுள்ளனர்.

விவசாயத் திணைக்களத்தினால் கடந்த ஜனவரி மாதம் இதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டிருந்ததாகவும் அதிபர் எம்.எப்.ஏ. சனீர் மேலும் கூறினார்.

## வெலிகம ஜம்மியத்துல் உலமா கைருல் பஷருக்கு அனுதாபம்

(வெலிகம நிருபர்)

பேருவளை ஜாமிஆ நளீமிய்யா கலாபீட உதவிப் பணிப்பாளரும், சிரேஷ்ட விரிவுரையாளருமான அஷ்ஷேக் கைருல் பஷர் (நளீமி) அவர்களின் திடீர் மறைவு குறித்து, அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமாவின் வெலிகம கிளை, மற்றும் ராபிதா நளீமிய்யீன் சங்கம் ஆகியன இணைந்து ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்கின்றன.

இவரது திடீர் மறைவு, பேருவளை வாழ் முஸ்லிம்களுக்கு மட்டுமல்லாது, இலங்கை வாழ் சகல முஸ்லிம்களுக்கும், குறிப்பாக மாணவ சமூகத்துக்கு ஒரு பேரிழப்பாகும்.

நாடறிந்த கல்விமானும், எழுத்தாளருமான இவரது மரணம், ஈடுசெய்ய முடியாததொன்றாகும். இவர் வக்பு சபை உறுப்பினராகவும் சில காலம் பணிபுரிந்து சேவையாற்றியவர், என அவ் அனுதாபச் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இவரது சேவைகளை அல்லாஹ் ஏற்றுக்கொண்டு ஜன்னத்துல் பிர்தௌஸ் எனும் சுவனத்தில் நுழைய வைப்பானாக என பிரார்த்திப்பதோடு, கவலையில் ஆழ்ந்திருக்கும் அவரது குடும்பத்தாருக்கு அனுதாபங்களை தெரிவித்துக் கொள்கின்றது.

## அஷ்ஷெய்க் கைருல் பஷரின் மறைவு கல்வியியல் சமூகத்துக்கு பேரிழப்பு

### அமைச்சர் ஹலீம் அனுதாபம்

(இக்பால் அலி)

எமது முஸ்லிம்களுடைய கல்விப் பணியில் வலுவானதும் வரலாற்று பெறுமதிமிக்க தடயங்களைக் கொண்ட பேருவளை ஜாமியாஹ் நளீமியாவின் உதவிப் பணிப்பாளர்களில் ஒருவரும் சிரேஷ்ட விரிவுரையாளருமான அஷ்ஷெய்க் கைருல் பஷர் (நளீமி) யுடைய வபாத்தான செய்தி கேட்டு ஆழ்ந்த துக்கமும் அதிர்ச்சியும் அடைந்தேன். அன்னாரது இழப்பு முஸ்லிம் கல்வியியல் சமூகத்திற்கு பேரழிப்பாகும் என்று முஸ்லிம் சமயம் கலாசாரம் மற்றும் தபால் துறை அமைச்சர் தெரிவித்தார்.

ஜாமிஆ நளீமியாவின் உதவிப் பணிப்பாளர்களில் ஒருவரும் சிரேஷ்ட விரிவுரையாளரும் சிறந்த எழுத்தாளரும் பேச்சாளருமான அஷ்ஷெய்க் ஹைருல் பஷர் மறைவு தொடர்பாக முஸ்லிம் சமய, கலாசாரம் மற்றும் தபால் துறை அமைச்சர் எம். எச். ஏ. ஹலீம் எகிப்தில் கெய்ரோவில் இடம்பெற்ற சுப்ரின் கவுன்சில் இஸ்லாமிய மாநாட்டில் கலந்து கொள்ளச் சென்ற வேளையில் ஜனாஸா தொடர்பான தகவலை அடுத்து அந்நாட்டில் இருந்து கொண்டு தமது அனுதாபச் செய்தியை ஊடகங்களுக்குத் தெரிவித்தபோது அமைச்சர் ஹலீம் இவ்வாறு இதனைத் தெரிவித்துள்ளார்.



அவர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில்

நளீமிய்யாவின் பணிப்பாளர் கலாநிதி சுக்ரிக்கு பக்க துணையாக இருந்து மாணவர்களின் கல்வி நலனிலும் வளர்ச்சியிலும் எழுச்சியிலும் கைருல் பஷர் ஆற்றிய பங்களிப்பு அளப்பரியது. அதே போன்று சிறந்த எழுத்தாற்றல், பேச்சாற்றல் மிக்கவராகவும் விளங்கினார் இவை போன்று வழிகாட்டல், தலைமைத்துவப் பண்பு. சமூக அங்கீகாரம் உள்ளிட்ட பல சிறப் பம்சங்களைக் கொண்டவர். அன்னாரது இழப்பு எமது முஸ்லிம் சமூகத்திற்கு பேரிழப்பாகும்.

எனவே அவரது இழப்பால் துயரில் ஆழ்ந்துள்ள மனைவி, பிள்ளைகள், குடும்பம் மற்றும். நளீமியா மாணவர் சமூகம் உள்ளிட்ட அனைவருக்கும் பொறுமையையும் மன அமைதியையும் அல்லாஹ் வழங்க வேண்டும் எனவும் அவருக்குஉயரிய சுவனத்தை அடைய எல்லா வல்ல அல்லாஹ்விடம் பிரார்த்தனை புரிகின்றேன் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

## கிண்ணியாவில் குடும்பஸ்தர் டெங்குக்கு பலி

(கந்தளாய் நிருபர் ஐ.எப்.முபாரக்)

கிண்ணியா பிரதேசத்தில் டெங்குக் காய்ச்சலினால் பாதிக்கப்பட்ட குடும்பஸ்தர் ஒருவர் நேற்று திங்கட்கிழமை (13) காலை உயிரிழந்துள்ளார்.

இதற்கமைய கிண்ணியாவில் பிரதேசத்தில் டெங்குக் காய்ச்சலினால் பலியானோரின் தொகை ஒன்பதாக உயர்ந்துள்ளது. நேற்று முன்தினமும் இருவர் உயிரிழந்திருந்தனர்.

திருகோணமலை பொது வைத்தியசாலையின் தீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வந்த மாஞ்சோலைச் சேனை 3ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த கட்ட மிரான் பைசல் (வயது 39) என்ற இரண்டு பிள்ளையின் தந்தையே இன்று உயிரிழந்துள்ளார்.

இவரது சகோதரி பாத்திமா நபியா (வயது 36) டெங்குக் காய்ச்சலுக்கு உள்ளான நிலையில் கடந்த வெள்ளிக்கிழமை (10) உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது.

### வாசகர் கடிதம்

## தென் மாகாண ஆசிரியர் நேர்முகப் பரீட்சையில் தமிழுக்கு புறக்கணிப்பா?

தமிழ் மொழிப் பட்டதாரி ஆசிரியர்களுக்கான நேர்முகப் பரீட்சை எதிர்வரும் 17ஆம் திகதி வெள்ளிக்கிழமை தென் மாகாணக் கல்வி அமைச்சில் நடைபெறவுள்ளது.

அக்கடிதத்தில் மதியம் 12.00 மணிக்கு நேர்முகப் பரீட்சைக்குச் சமூகமளிக்குமாறு கோரப்பட்டுள்ளது. அன்று ஜும்ஆ தொழுகையை முஸ்லிம் பட்டதாரிகள் இழப்பதா? நேர்முகப் பரீட்சைக்குச் சமூகமளிக்காமல் தவிர்ப்பதா? கல்வி அமைச்சில் உள்ள முஸ்லிம் அதிகாரிகள் அங்கு என்ன செய்கிறார்கள்? இவர்களின் திட்டமிடல் எப்படிப்பட்டது என்பது புரியாத புதிர் என பட்டதாரிகள் விஷனம் தெரிவிக்கின்றனர்.

நேர்முகப் பரீட்சைக்கான கடிதம் தனிச் சிங்களத்தில் உள்ள தமிழ் மொழிக்கு சம அந்தஸ்து எங்கே போயிற்று என்பதும் தென் மாகாணத்தில் அதிலும் கல்வி அமைச்சில் தமிழ் மொழி மரணிக்கிறது என்றும் தமிழ்மொழி மூலம் கற்று தமிழ் மொழி கற்பிக்க நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டவர்களும் தமிழ் மொழிக்கு சம உரிமை வேண்டும் என்பவர்களும் இதனை கண்டிருக்கின்றனர்.

நேர்முகப் பரீடசைக்கு அழைக்கப்பட்டவர்கள் பட்டதாரிகளுக்கு நியமனம் வழங்க வேண்டும். குறிப்பாக தமிழ் மொழிப் பாடசாலையில் வெற்றிடங்கள் நிரப்பப்படாமல் சிங்கள மொழிப்பாடசாலைகளுக்கு மட்டும் நியமனங்கள் வழங்கப்பட்டபோது பட்டதாரிகளுக்காக நடைபெற்ற பரீட்சையில் சித்தயடைந்தோர் நேர்முகப்பரீட்சையில் ஓர் அங்கம் 25 புள்ளிகளைப் பெறுவதற்கு கொடுக்கப்படும் தலைப்பில் 5 - 7 நிமிடங்கள் கற்பித்தல் வேண்டும் எனவும் வேண்டப்பட்டுள்ளது. இந்தக் கற்பித்தல் நிகழ்வை மதிப்பீடு செய்பவர்கள் யார் என்பதும் ஒரு கேள்வி. ஆசிரியர்களா? அல்லது கல்வி அதிகாரிகளா? கல்வி அதிகாரிகள் சிலர் கற்பித்தலில் ஈடுபடாதவர்களும் உள்ளனர் எனப் பேசப்படுகின்றது. கற்பித்தலில் நன்கு தேர்ச்சி பெற்றவர்களைக் கொண்டு மதிப்பீடு செய்து நியமனம் வழங்குவதே பொருத்தமானது என்பது நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றுவோர் கருத்து.

## மஹியங்கனை பிரதான வீதி திருத்தப்படுமா?

கண்டி- மஹியங்ளை பிரதான வீதியில் அமைந்துள்ள உண்ணஸ்கிரிய நகரில் இருந்து ஹல்வத்தை வரை செல்லும் பாதை பல்வேறு இடங்களில் பயன்படுத்த முடியாத அளவிற்கு பழுதடைந்து காணப்படுகின்றது. அரசியல் வாதிளோ, அரச அதிகாரிளோ இது பற்றி எவ்வித கரிசணையும் கொள்ளவதில்லை எனப் பிரதேச மக்கள் கூறுகின்றனர். பழுடைந்த நிலையில் பாதையுள்ளதை இங்கு காணலாம்.



(வத்துகாமம் நிருபர்)

**பிரதி செவ்வாய்க்கிழமை நாட்களிலும் வாசகர் கடிதம் பிரசுரமாகும். உங்கள் பிரச்சினைகளை சுருக்கமாகவும் தெளிவாகவும் எழுதி அனுப்பவும்.**

**வாசகர் கடிதம்**
**நவமணி**
**156, ஆஸ்பத்திரி வீதி,**
**தெஹிவளை.**

# தாதிமார் தொழிற்சங்க நடவடிக்கையால் வைத்தியசாலைகளில் பாதிப்பில்லை

## அரச தாதி உத்தியோகத்தர்கள் சங்கம்

அரச சேவையாளர்களின் ஒன்றிணைந்த தாதிமார் சங்கம் நாடளாவிய ரீதியில் முன்னெடுத்துள்ள சுகயீன விடுமுறையின் அடிப்படையிலான தொழிற்சங்க நடவடிக்கை தோல்வியடைந்துள்ளதாக அரச தாதிமார் சங்கம் தெரிவித்தது.

எனினும் தமது தொழிற்சங்க நடவடிக்கை வெற்றிகரமாக இடம்பெறுவதாக அரச சேவையாளர்களின் ஒன்றிணைந்த தாதிமார் சங்கத்தின் தலைவர் முறுதுட்டுவே ஆனந்த தேரர் தெரிவித்தார்.

சம்பள கொடுப்பனவு, மேலதிக கொடுப்பனவு, வருடாந்தம் வழங்கப்படுகின்ற சீருடை கொடுப்பனவு உள்ளிட்ட 8 கோரிக்கைகளை முன்வைத்து இந்த தொழிற்சங்க நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது. எவ்வாறெனினும், அரசியல் பின்னணியின் அடிப்படையில் மேற்கொள்ளப்படும் இந்த போராட்டத்திற்கு தாம் ஆதரவு வழங்கப் போவதில்லையென அரச தாதிமார் சங்கம் குறிப்பிட்டது.



வைத்திய தாதிமார்கள் நேற்றும் இன்றும் நாடளாவிய ரீதியில் தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

இதேநேரம், தாதியர்கள் சுகயீன விடுப்பு போராட்டத்தை முன்னெடுப்பதால், வைத்தியசாலை நடவடிக்கைகளுக்கு பாதிப்பு ஏற்படவில்லை என, அரச தாதி உத்தியோகத்தர்கள் சங்கம் குறிப்பிட்டது. தாதிமார் உத்தியோகத்தர் சங்கத்தினால் எதிர்வரும் ஏப்ரல் மாதம் 6 ஆம் திகதி அனைத்து தாதியர்களும் வேலைநிறுத்தப் போராட்டத்தை முன்னெடுக்கவிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

மேலும் இந்த நடவடிக்கைக்கு தமது சங்கம் ஒத்துழைப்பு வழங்கவில்லை எனவும் அச் சங்கம் மேலும் குறிப்பிட்டது.

# பொருளாதார அமைச்சினால் நிதி ஒதுக்கீடு

(வஹக்கோட்டை ஏ.ஸீ.ஏ.முனாஸ்)

2017 ஆம் ஆண்டுக்கான பொருளாதார அமைச்சின் நிதி ஒதுக்கீடு மாத்தளை மாவட்டத்துக்கு செய்யப்பட்டுள்ளது.

மாத்தளை மாவட்டத்திலுள்ள சுமார் 11 பிரதேச செயலக பிரிவுகளை உள்ளடக்கப்பட்டதாக 510 கிராம அதிகாரி பிரிவுகளுக்கு இந்த ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

2016 ஆம் ஆண்டில் ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகையில் 50 வீதமே, இம்முறை ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.


இந்த நிதி மூலம் கிராமப்புற வீதிகள், சனசமூக நிலையங்கள், கிணறுகள் என்பன கட்டப்படுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

அத்தோடு, கிராமிய குழுக்கள் மூலம் விபரங்கள் சேகரிக்கப்படுகின்றன.



உலக நீதிக்கான இலங்கை ஊடகவியலாளர்கள் அமைப்பின் அங்குரார்ப்பண நிகழ்வும், பலஸ்தீன மக்களின் சமூக நீதிக்கான போராட்டம் என்ற தலைப்பில் வண. துலிப் டீ சீகேராவின் உரையும் நேற்று மாலை சர்வதேச உறவுகளுக்கான லக்ஸ்மன் கதிர்காமர் நிலையத்தின் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. வண. துலிப் டீ சீகேரா உரையாற்றுவதையும் கலந்துகொண்டோரில் ஒரு பிரிவினரையும் படத்தில் காணலாம்.

# சவூதி விஜயம் நிறைவு நாடு திரும்புகிறார் ஹக்கீம்





(பிறவ்ஸ் முஹம்மத்)

ஐந்து நாட்கள் உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு சவூதி அரேபியா சென்றுள்ள ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் இன்று நாடு திரும்புகிறார்.

மக்காவில் புனித உம்ரா கடமையை நிறைவேற்றிய பின்னர், ரியாத் நகரிலுள்ள இமாம் பல்கலைக்கழகத்தில் கல்விபயிலும் இலங்கையர்களைச் சந்தித்து கலந்துரையாடினார்.

நீர் வழங்கல் தொடர்பிலான இருதரப்பு ஒப்பந்தமொன்றில் அமைச்சர் ரவூப் ஹக்கீமும் சவூதி அரேபிய சுற்றுச்சூழல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சர் அப்துல் ரஹ்மான் அல் பெட்லியும் கைச்சாத்திட்டுள்ளனர். அத்துடன் இலங்கை அரசிற்கும் நிதியுதவி பெற்றுக்கொள்வது தொடர்பில் சவூதி அபிவிருத்தி நிதியத்துடனான முக்கிய பேச்சுவார்த்தையொன்றிலும் அமைச்சர் கலந்துகொண்டார்.

ரியாத் நகரிலுள்ள இலங்கை தூதரக அதிகாரிகளுடனான சந்திப்பில் கலந்துகொண்ட ரவூப் ஹக்கீம், சவூதியிலுள்ள இலங்கைவாழ் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்து கலந்துரையாடினார். வீட்டு பணிப்பெண்கள் பிரச்சினை, சம்பள பிரச்சினைகள் மற்றும் தகுந்த ஆதாரமில்லாமல் வாழும் இலங்கையர்கள் அவசரமாக நாடு திரும்புவதற்கான ஏற்பாடுகள் குறித்தும் ஆராயப்பட்டன.

சவூதி அரேபிய முன்னாள் விவசாய அமைச்சர் முஹம்மட் சஹ்லியுடன், இலங்கையில் முதலீடு செய்தல் மற்றும் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்குதல் தொடர்பாக அமைச்சர் ஹக்கீம் கலந்துரையாடினார். இந்நிகழ்வுகளில் பாராளுமன்ற உறுப்பினர்களான எம்.எஸ். தௌபீக், எம்.எச்.எம். சல்மான், அமைச்சரின் சர்வதேச விவகாரங்கள் பணிப்பாளர் எம்.முஹம்மட் ரிஸ்வி ஆகியோரும் கலந்துகொண்டனர்.

# தெற்கு பட்டதாரி நேர்முக தேர்வு சிக்கலுக்கு தீர்வு

தென் மாகாண பட்டதாரி ஆசிரியர்களுக்கான நேர்முகத் தேர்வு நேரங்களில் சிரமங்களை எதிர்கொள்ளும் முஸ்லிம்கள் தமக்கு வசதியான நேரங்களில் நேர்முகத் தேர்வுக்கு சமுகமளிக்கலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

தென் மாகாண பட்டதாரி ஆசிரியர்களுக்கான நேர்முகத் தேர்வு எதிர்வரும் 17ஆம் திகதி 12 மணிக்கு இடம்பெறவுள்ளதால் முஸ்லிம்கள் சிக்கலை எதிர்நோக்கியிருந்தனர்.

முஸ்லிம் கவுன்சில் ஒப் ஸ்ரீலங்காவின் வேண்டுகோளுக்கு இணங்க நல்லிணக்க அலுவலகம் கல்வித் திணைக்களத்துடன் பேசியதைத் தொடர்ந்தே நேர்முகத் தேர்வில் சிக்கலை எதிர்கொள்வோர் மேற்படி தினத்தில் தமக்கு வசதியான நேரத்தில் நேர்முகத் தேர்வில் கலந்துகொள்ளலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

வெள்ளிக்கிழமை தினங்களில் 12 மணிக்கு முஸ்லிம்கள் ஜும்ஆவுக்கு செல்லவேண்டியதே மேற்படி சிக்கலைத் தோற்றுவித்திருந்தது.

நல்லிணக்க அலுவலகம் கல்வித் திணைக்களத்தை தொடர்புகொண்டு மேற்படி விடயம் குறித்து கதைத்தபோது, தவறுதலாகவே மேற்படி நேரம் குறிக்கப்பட்டதாகத் தெரிவித்துள்ளது.

12மணி விடயத்தில் சிக்கலை எதிர்நோக்குவோம் அதற்கு முன்னதாகவோ, ஜும்ஆவின் பின்னரோ நேர்முகத் தேர்வில் கலந்துகொள்ளலாம் என்றும் மேற்படி மாற்றங்கள் குறித்து உரிய அலுவலகத்தை தொடர்புகொண்டு உறுதிசெய்துகொள்ளுமாறும் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். கடந்த வெள்ளி(10) நவமணி பத்திரிகையில் வெளியாகியிருந்த செய்தியைத் தொடர்ந்தே மேற்படி சிக்கலுக்கு சுமுகமான தீர்வு கிடைத்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.



மஹரகம-தெஹிவளை வீதியில் இ.போ.ச டிப்போவுக்கு அண்மித்த பகுதியில் ஞாயிறு இடம்பெற்ற தீ விபத்தினால் பாதிக்கப்பட்ட வீடுகளை முதலமைச்சர் இசுர தேவப்பிரிய பார்வையிட்டு பாதிக்கப்பட்ட மக்களை சந்தித்து விபமறிதலை படத்தில் காணலாம். (படம்-எம்.எஸ்.எம்.முன்தஸிர்)

# தென்கொரிய வெளிவிவகார அமைச்சர் இலங்கையில்

தென்கொரியாவில் வெளிவிவகார அமைச்சர் யுன்க்ஸக்சி இன்றையதினம் இலங்கைக்கு வருகைதரவுள்ளார்.

இரு நாடுகளுக்கிடையிலான இராஜதந்திர தொடர்புகளின் 40வது ஆண்டு நிறைவினை முன்னிட்டு அவர் இந்த விஜயத்தை மேற்கொள்கின்றார்.

இந்த உத்தியோகபூர்வ விஜயத்தின் போது வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் மங்கள சமரவீரவை சந்தித்து இருதரப்பு பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார்.



31 வருடங்களின் பின்னர் தென் கொரிய வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் இலங்கைக்கான விஜயத்தினை மேற்கொள்ளவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

### காத்தான்குடி பள்ளிவாசல் படுகொலை

# குரல் கொடுக்கும் சரத் வீரசேகரவுக்கு பாராட்டு

காத்தான்குடியில் இடம்பெற்ற பள்ளிவாசல் படுகொலை சம்பந்தமாக முஸ்லிம் சமூகத்தின் மீது புலிகளால் கட்டவிழ்த்து விடப்பட்ட சம்பவத்தை பற்றி குறிப்பிட்ட முன்னாள் எம்.பி அட்மிரல் சரத் வீரசேகர விடுத்துள்ள அறிக்கைக்கு முஸ்லிம் முற்போக்கு முன்னணி நன்றி தெரிவித்துள்ளது.

ஜெனிவாவுக்கு முன்பு சென்ற முஸ்லிம் கட்சியின் தலைவர்களும், அரசின் ஏனைய அமைச்சர்களும் இச்செயல் பற்றி இன்று வரையில் குறிப்பிடப்படாமல் இருப்பது பற்றி முஸ்லிம் சமூகம் ஏமாற்றமடைந்துள்ளது.

காத்தான்குடி பள்ளிவாசல் மட்டுமன்றி தொடர்ந்து ஏறாவூர் மற்றம் பொலன்னறுவை மாவட்டவத்திலுள்ள அலுஞ்சிப்பொத்தானை, பள்ளித்திடல் போன்ற இடங்களிலும் புலிகளால் மிக கொடுரமாக முஸ்லிம்கள் கொலை செய்யப்பட்ட வரலாற்றை முஸ்லிம் சமூகம் ஒரு போதும் மறக்காது.

ஒவ்வொரு வருடமும் ஜெனிவாவுக்கு காவடித் தூக்கிச் செல்கின்ற தமிழ் கட்சிகளை சேர்ந்த தலைவர்கள் இது பற்றி ஒரு வார்த்தையேனும் கூறாதிருப்பது அனைவரையும் பிரமிக்கவைத்துள்ளது.

இந்த படுகொலையை சர்வதேச சமூகம் கண்டிக்காதது ஏன்? என்று முன்னாள் எம்.பி சரத் வீசேகர கேள்வி எழுப்பியுள்ளார்.



குறித்த சம்பவங்கள் தொடர்பில் ஜெனிவாவில் உள்ள மனித உரிமை சம்மேளனத்துக்கு நேரடியாக சென்று விளக்கம் சொல்வதற்கு வீரசேகர நடவடிக்கை எடுத்துள்ளமை வரவேற்கத்தக்கது என முன்னணியின் செயலர் ஏ.எச்.எம்.அஸ்வர் அறிக்கையில் தெரிவித்தார்.

அடுத்தவாரம் இவர் ஜெனிவாவுக்கு பயணம் மேற்கொள்ள இருப்பதும் குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, நேற்று(13) கொழும்பு புலஸ் வீதியிலுள்ள ஐக்கிய நாடுகள் சபை மனித உரிமை செயலகத்துக்கு சரத் வீரசேகர ஏற்பாட்டின் கீழ் அங்குள்ள அதிகாரிக்கு தூதுக்குழுவுடன் சென்று மகஜர் ஒன்றை சமர்ப்பித்தார். இக்குழுவில் முன்னாள் முஸ்லிம் விவகார அமைச்சரும், முற்போக்கு முன்னனியின் செயலருமான ஏ.எச்.எம்.அஸ்வர் இடம் பெற்றுள்ளார்.



# நீர்வழங்கல் அமைச்சின் புதிய செயலாளராக சரத் சந்திரசிரி விதான

(நாச்சியாதீவு பர்வீன்)

நகர திட்டமிடல் மற்றும் நீர்வழங்கல் அமைச்சின் புதிய செயலாளராக சரத் சந்திரசிரி விதான கடந்த வெள்ளிக்கிழமை அமைச்சில் தமது கடமைகளை பொறுப்பேற்றுக்கொண்டார். இலங்கை நிர்வாக சேவையில் நீண்டகால அனுபவம் வாய்ந்த இவர் பாதுகாப்பு அமைச்சின் மேலதிக செயலாளராக முன்னர் பதவிவகித்தவர்.

ஜனாதிபதி மைத்திரிபால சிரிசேன, அமைச்சர் ரவூப் ஹக்கீம் ஆகியோரின் வழிகாட்டுதலின் கீழ் அமைச்சின் செயற்பாடுகளை அர்ப்பணிப்புடன் முன்கொண்டு செல்வதாக பதவியேற்பு நிகழ்வின்போது புதிய செயலாளர் தெரிவித்தார்.

இதன்போது இராஜாங்க அமைச்சரின் செயலாளர் திருமதி வீரசிங்க, நீர்வழங்கல் வடிகாலமைப்பு சபையின் தலைவர் பொறியியலாளர் கே .ஏ . அன்சார், அமைச்சரின் இணைப்புச் செயலாளர் ரஹ்மத் மன்சூர் ஆகியோரும் பிரசன்னமாகியிருந்தனர்.

# மோட்டார் வண்டி விபத்து இளைஞர் பலி

(மல்வானை நிருபர்)

பியகம சுதந்திர வர்த்தக வலயத்தில் தொழில் புரியும் இரு இளைஞர்கள் தமது சேவை நேரம் முடிந்து மோட்டார் சைக்கிளில் சென்றுகொண்டிருக்கும்போது கடந்த சனிக்கிழமை (11) புதிய கண்டி வீதியில் தெல்கொடை நகருக்கு அருகாமையில் இடம்பெற்ற விபத்தொன்றில் ஓர் இளைஞர் பலியானார்.

மோட்டார் சைக்கிள் வழுக்கி பாதையின் மறுபக்கத்தில் விழுந்தமையால் எதிர்ப்பக்கத்தில் வந்த பஸ்வண்டியொன்றுடன் மோதி குறித்த இளைஞர் பலியாகியுள்ளார்.

கம்பஹா உடுகம்பல பிரதேசத்தைச் சேர்ந்த நுவன் சிந்தக பெனான்டோ(31) என்ற குடும்பஸ்தர் ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். மற்றையவர் ராகம வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதோடு, மீகஹவத்த பொலிஸார் மேலதிக விசாரணைகள மேற்கொண்டுள்ளனர்.

NAVAMANI DAILY

நவமணி

FREELANKA MEDIA LTD.
156, Hospital Road, Kalubowila, Dehiwala.
Telephone: 011 7393880 - 1/2 Fax: 011 7393883
E-mail: editornavamani@gmail.com
freelankamedia@gmail.com

14TH MARCH 2017 - TUESDAY

# அனர்த்த பிரதேசமாக கிண்ணியா பிரகடனப்படுத்தப்படல் வேண்டும்

கிண்ணியா பிரதேசத்தில் ஒருவகை காய்ச்சல் நோய் காரணமாக நேற்றும் ஒருவர் உயிரிழந்துள்ளதோடு, 2000க்கு மேற்பட்டோர் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

நேற்றுடன் இக்காய்ச்சல் காரணமாக உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை பத்தாக அதிகரித்துள்ளது. மேலும் பலர் உயிருக்காகப் போராடிக்கொண்டிருப்பதாக அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கிண்ணியாவில் பரவியிருப்பது டெங்கு காய்ச்சலா? அல்லது வேறு ஏதாவது ஒரு காய்ச்சலா? என்ற சந்தேகமும் பிரதேசவாசிகளுக்கு ஏற்பட்டுள்ளது.

இந்த நோய் பரவத்தொடங்கி இரு மாதங்களாக கிண்ணியாவில் மேற்கொள்ளப்பட்ட முற் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கு மத்தியிலும் தொடர்ந்து இந்த காய்ச்சல் பரவியவண்ணமுள்ளது.

நேற்று மட்டும் கிண்ணியா வைத்தியசாலையில் 1200க்கு மேற்பட்டோர் சிகிச்சை பெற்றுள்ளனர். இதுதவிர கந்தளாய், திருமலை பிரதேச வைத்தியசாலைகள் மற்றும் தனியார் வைத்தியசாலைகளிலும் அதிகமானோர் சிகிச்சை பெற்றுவருகின்றனர்.

ஆரம்ப வைத்திய அறிக்கைகளின்படி பரவியுள்ள காய்ச்சல் டெங்கு என்றே கூறப்படுகின்றது. மக்கள் இது வேறு ஒருவகை நோயோ என்று சந்தேகம் தெரிவிக்கின்றனர்.

இதுபற்றிய மேலதிக ஆய்வுகளை மேற்கொள்வதற்கு சுகாதார திணைக்களம் நடவடிக்கையெடுக்க வேண்டும்.

கிண்ணியா வைத்தியசாலை தற்போது எதிர்நோக்கியுள்ள நெருக்கடி நிலையைச் சமாளிப்பதற்கு போதிய வசதிகளற்றதாகவே இருக்கின்றது. இங்குள்ள வைத்தியர்களும் பெரும் சிரமங்களுடன் சிகிச்சையளித்து வருகின்றனர்.

சுகாதார அமைச்சு தேவையான வைத்தியர்களை உடன் கிண்ணியாவுக்கு அனுப்பவேண்டும். நிரந்தரமாக வைத்தியர்களை நியமிக்கும்வரை அவசர நிவாரணத் திட்டம் ஒன்றைத் தயாரித்து வெளிப் பிரதேசங்களில் இருந்து வைத்தியர்களை அனுப்பி இந்த நோயிலிருந்து மக்களைப் பாதுகாப்பதற்கு நடவடிக்கையெடுக்க வேண்டும்.

கிண்ணியா மக்களிடம் குடிகொண்டுள்ள அச்ச நிலைமையை அகற்றுவதற்கு சுகாதார அமைச்சு நடவடிக்கையெடுக்க வேண்டும். உடனடியாக இப்பிரதேசம் அனர்த்த பிரதேசமாக பிரகடனப்படுத்தப்பட வேண்டும்.

கிண்ணியா தனித்து விட்டது போன்ற தகவலே எமக்கு கிடைக்கின்றது. இந்நிலை தொடருமாக இருந்தால் பிரதேசத்தில் கலவர நிலைமைகள்கூட ஏற்படலாம். கிண்ணியாவிலும் பல்வேறு அமைப்புகள் இன்று தனித்து செயற்பட்டு வருகின்றன. இப்பணிகள் ஒருங்கிணைக்கப்படுதல் வேண்டும்.

09 மரணங்கள் ஏற்பட்டு, முழுப் பிரதேசத்திலும் ஒருவகை மரண அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ள நிலையில் அர' இப்பிரதேசம் குறித்து கூடுதலான கவனத்தைச் செலுத்தவேண்டும்.

# ஜெனீவா நெருக்குதலில் இருந்து இலங்கைக்கு மீட்சி பெற முடியுமா?

**வசந்தபிரிய ராமநாயக்க**

சிவில் யுத்தமொன்றின் முடிவில் குறிப்பிட்ட நாட்டின் மூலம் வெள்ளை அறிக்கையொன்றை சர்வதேசத்திற்கு வழங்குவது சாதாரண சம்பிரதாயமாகும். சர்வதேச ரீதியாக தனிப்படாத அரசொன்றுக்கு இது அத்தியவசியமாகும். எனினும், 2009 மே 19ஆம் திகதிக்கு பின் எங்களுடைய நாட்டில் அவ்வாறான ஒன்று இடம்பெறவில்லை.

'இலங்கை அரசு இப்போதாவது உடனடியாக வெள்ளை அறிக்கையொன்றை விநியோகிக்க வேண்டும். 2009ஆம் ஆண்டு மே மாதம் அவ்வாறான ஒன்றை செய்யும்படி அவர்களுக்கு நாங்கள் சொன்னோம். அன்று அவ்வாறு செய்திருந்தால் இன்று இவ்வாறு குற்றச்சாட்டுகளை எழுப்ப சந்தர்ப்பம் கிடைத்திருக்காது' பேராசிரியர் ரொஹான் குணரத்ன யுத்தம் தொடர்பான நிபுணர் 24.04.2011 இல்.

நிபுணத்துவ ஆலோசனைகளை அவ்வளவு தூரம் ஏற்றுக்கொள்ளும் தன்மையை எங்களுடைய நாட்டில் காண முடியாதுள்ளது. அந்த நாட்டில் இருக்கும் அரசியல்வாதிகள் தாங்கள் எல்லாம் தெரிந்தது போல் எண்ணிக்கொண்டிருக்கிறார்கள். எனினும், நடந்தது வேறொன்றாகும். அன்று யுத்தம் முடிந்ததும் இலங்கைக்கு வந்த ஐக்கிய நாடுகள் சபையின் பான் கீ மூனுடன் கூட்டு அறிக்கையொன்று கைச்சாத்திடப்பட்டது.


'சர்வதேச பிணைப்பு மற்றும் சர்வதேச மனித உரிமை நியமங்களுக்கு ஏற்ப இலங்கையில் மனித உரிமைகள் மேம்பாட்டுக்கும், பாதுகாப்புக்கும் இலங்கை இணைந்திருக்கின்றது என்று கூறுகிறேன்'.

இங்கு ஐ.நா பொதுச் செயலாளர் சர்வதேச மனித உரிமைகள் தொடர்பான சட்டதிட்டங்களை மீறி இருப்பது தொடர்பாக தேடிப்பார்ப்பது தொடர்பான பொறிமுறையொன்றின் தேவையை வலியுறுத்தியிருந்தார். இலங்கை அரசு அதற்கு நடவடிக்கை எடுப்பதாக இணங்கியிருந்தது. மானசீக செயற்பாட்டின் முடிவில் இடம்பெற்ற காரணிகள் தொடர்பாக செயற்படுவதற்கும், நிலைத்து நிற்கும் சமாதானத்திற்காகவும் அரசியல் தீர்வொன்றை முன்வைத்தல் தொடர்பாக இலங்கை சர்வதேசத்துடன் இணைவது இந்த கூட்டு அறிக்கையின் மூலமாகும். அன்று வெள்ளை அறிக்கையொன்றை சமர்ப்பிக்காத குறையினை ஐக்கிய நாடுகள் சபை நிறைவேற்றியது இந்த கூட்டு அறிக்கையின் மூலமாகும். இதன்மூலம் இலங்கை நாடொன்று என்ற வகையில் பொறுப்புக்கூறும் செயற்பாட்டுக்காக சர்வதேசத்துடன் இணைந்து கொண்டது.

பிற்காலத்தில், தருஸ்மான் குழு நியமிக்கப்படுவதும், அதற்கு சமாந்தரமாக கற்றறிந்த பாடம் மற்றும் மறுசீரமைப்பு ஆணைக்குழு அமைப்பதற்குமான நிலை இலங்கைக்கு ஏற்பட்டது, இந்த கூட்டு அறிக்கையில் உள்ளடக்கியிருந்த விடயங்கள் தாமதமாகும் போது ஏற்படும் சர்வதேச இணக்கப்பாட்டுக்கு ஏற்பவாகும். இறுதியில் தருஸ்மான் அறிக்கை நாட்டில் நிராகரிக்கப்பட்ட ராஜபக்ஷ அரசுக்கு நாட்டுக்கு களவில் ஐ.நா பொதுச் செயலாளருக்கு கள்ளக் கடிதம் எழுதி அதனை ஏற்றுக்கொண்டதாக தென்படுகின்றது. அது சர்வதேச தாக்கத்திற்கும், அன்றைய நேரத்திற்கேற்ற செயற்பாடாகும் என்பது தெளிவானது.

ஐ.நாவின் இலங்கை நிரந்தர பிரதிநிதி பாலித டி. கொஹொன 2010-12-18 - 2010-12.20 ஆகிய திகதிகளில் ஐ.நா பொதுச் செயலாளருக்கு அனுப்பி வைத்த நாட்டுக்கு மறைக்கப்பட்ட இரு கடிதங்கள் மூலம் தருஸ்மான் குழுவின் செல்லுபடியாகும் தன்மை அங்கீகரிக்கப்பட்டுள்ளது. அன்றிருந்த வெளிவிவகார அமைச்சர் ஜி.எல். பீரிஸ் மஹிந்த ராஜபக்ஷவின் ஆலோசனைப்படி பான் கீ மூனுக்கு நாட்டுக்கு களவாக எழுதியது என்ன. கௌரவ ஜனாதிபதி அவர்கள் தனக்கு பணிப்புரை வழங்கியதாக மிக வெற்றிகரமான முறையில் தருஸ்மான் அறிக்கையை பூரணப்படுத்தியதற்காக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நன்றி தெரிவித்ததை அறிவித்துள்ளார்.

இவ்வாறு வெற்றிகரமாக முடித்த வேலை என்ன? எங்களுடைய நாட்டின் படையில் யாருக்காவது எதிராக யுத்த குற்றங்கள் தொடர்பாக வழக்கு தொடர்வதற்கு நடவடிக்கை எடுக்கக் கூடிய வகையில் தருஸ்மான் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டவையாகும். முன்னாள் வெளிவிவகார அமைச்சர் பொதுச் செயலாளருக்கு ஜனாதிபதி சார்பில் நன்றி தெரிவிப்பது அதனை வெற்றிகரமாக நிறைவேற்றியதற்காகவாகும்.



அன்றிலிருந்து ஆட்சியாளர்கள் தருஸ்மான் அறிக்கை தொடர்பாக இவ்வாறு பான் கீ மூனுக்கு கள்ளக் கடிதம் எழுதுவது அந்த அறிக்கைக்கு எதிராக அப்பாவி மக்கள் வீதிக்கு இறங்கி தேசப்பற்று கோஷங்களை எழுப்பும்போதாகும். எங்களுடைய நாட்டில் யாருக்காவது யுத்த குற்றச்சாட்டுக்கள் முன்வைத்தால் அதனை சமர்ப்பிப்பது இந்த கடிதம் மூலம் நாடொன்று என்ற வகையில் நாங்கள் வழங்கியிருந்த இணக்கப்பாடு மற்றும் அனுசரணையின் கீழ் ஆகும். எனினும், அன்று இந்த நாட்டு பொதுமக்கள் இதில் எதனையும் சரியாக அறிந்திருக்கவில்லை. போலி தேசப்பற்றில் ஐசிங் தட்டு மூலம் எல்லாவற்றையும் மூடி மறைப்பதற்கு அவர்களால் முடியுமாக இருந்தது.

எமது போர் வீரர்களுக்கு எதிராக யுத்த குற்றச்சாட்டுக்கள் முன்வைக்க இடமளிப்பதில்லை. அவர்களை சர்வதேச இறுக்குதலுக்கு எடுத்துச் செல்ல இடமளிப்பதில்லை என அன்று குரலெழுப்பியவர்களே பின்கதவால் ஐ.நா பொதுச் செயலாளர் பான் கீ மூனுடன் கொடுக்கல் வாங்கல் செய்த மடத்தனமான முறை இதிலிருந்து தெளிவாகிறது. அவ்வாறானால் பாரிய தேசப்பற்று சால்வை அணிந்து கொண்டு அவர்களை ஏமாற்றியது மட்டுமன்றி அவர்களை பேய்காட்ட முற்பட்டது யார் என்பதை புரிந்து கொள்வதற்கு எவருக்கும் பெரும் மூளை தேவையில்லை. எங்களுடைய நாட்டின் அரசியல் இப்படித்தான். யதார்த்தத்தை மறைத்து எந்தச் சந்தர்ப்பத்திலும் இனவாத, தேசப்பற்றுடன் அரசியல் செய்வதற்கும் தவறு இடம்பெறும்போது களவாக சர்வதேசத்திடம் தலைகுனிவதற்கும் எங்களுடைய நாட்டில் அரசியல் செய்வோர் வெட்கப்படுவதில்லை. தாமதித்து கற்றறிந்தோர் நல்லிணக்க ஆணைக்குழுவை அமைத்து அந்த அந்த அறிக்கையை பெட்டகத்துள் போடுவதும் இறுதியில் களவான முறையில் தருஸ்மான் அறிக்கையை ஏற்றுக்கொள்வதும் இவ்வாறான தவறான அரசியல் பயணத்தினாலாகும். இதற்கு மைத்திரி - ரணில் அரசு பொறுப்புக்கூற வேண்டியதில்லை. எனினும் 2015 ஜனவரி 8ஆம் திகதியின் பின் குறிப்பிட்ட சர்வதேச பொறுப்புக்களை ஏற்கவேண்டியுள்ளது தற்போதைய அரசின் மைத்திரி நிர்வாகத்திற்காகும். வன்னிஹத்பத்துவ, தம்பானை அல்லது ரத்துகல ஆதிவாசிகளுக்கு பொய்யுரைப்பது போன்று எங்களுடைய நாட்டு அரசியல்வாதிகளுக்கு சர்வதேசத்தை ஏமாற்ற முடியாது. அதற்கு காரணம் எங்களையும் உள்ளடக்கிய சர்வதேசத்தில் இலங்கை ஒரு சிறிய நாடாக இருப்பதனாலாகும். எனவே, பெரியவர்கள் செய்கின்ற மனித உரிமை மீறல்கள் தொடர்பாக நாட்டுக்குச் சொல்லி மக்களை ஏமாற்றினாலும் எங்களுக்கு தப்பித்துக்கொள்ள முடியாது. தவறிழைத்தாலும் ஏதோ ஒருவகையில் நீதியை நிலைநாட்ட வேண்டும்.

2009 மே 23ஆம் திகதி கைச்சாத்திடப்பட்ட கூட்டு அறிக்கையில் நாங்கள் ஏற்றுக்கொண்டது என்ன? குறிப்பாக யுத்தத்தின் இறுதியில் ஏற்பட்ட யுத்தக் குற்றங்களும் மனித உரிமை மீறல்களும் தொடர்பாக விசாரணைகளை ஆரம்பிப்பது என்பதாகும். கற்றறிந்தோர் ஆணைக்குழு நியமிக்கப்படுவது அதற்காகவே. பிற்காலத்தில் மெக்ஸ்வல் பரணகம ஆணைக்குழுவை அரசு நியமிப்பது எமக்கிருந்த சர்வதேச நெருக்குதலின் பயனாகவாகும். சர்வதேச நீதவான்களுடைய பங்களிப்புடன் யுத்த நீதிமன்றம் ஒன்று மிகச் சிறந்ததாக இருக்கும் என்று முதன்முதலாக பிரேரிப்பது ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமை ஆணைக்குழு அல்ல. ராஜபக்ஷ அரசு நியமித்த மெக்ஸ்வல் பரணகம ஆணைக்குழுவே. இது தொடர்பாக அமைக்கப்போகும் தனியான உள்நாட்டு பொறிமுறையானது வெளிநாட்டு நீதிபதிகள் கண்காணிப்பாளர்களாக பங்குபற்றுவதற்கு ஊக்குவிக்க வேண்டும் என்று அதில் மேலதிகமாக குறிப்பிடப்பட்டுள்ளது.

ராஜபக்ஷ அரசு மெக்ஸ்வல் ஆணைக்குழுவின் ஆலோசகராக நியமிக்கப்பட்டவர் சேர் டெஸ்மன் சில்வா குறிப்பிடுவது நீதி நிலைநாட்டப்படுவதற்கு நீதிபதிகள் எல்லோரும் வெளியில் இருந்து வரவேண்டும் என்பதாகும். இதன் காரணமாக மனித உரிமை ஆணைக்குழுவின் பிரதான ஹைப்ரைட் நீதிமன்ற முறையை கண்டுபிடித்தது மெக்ஸ்வல் கொமிஷன் மூலமாகவா? என்பது தெரியாது. இந்த வரலாற்றை இன்று அநேகர் மறந்திருக்கிறார்கள். சில பௌத்த பிக்குகளும் அதனை மறந்திருக்கிறார்கள்.

சில சந்தர்ப்பங்களில் தந்திரமாக தவிர்த்துக்கொள்கின்ற மற்ற சந்தர்ப்பங்களில் மடையர்களாக காட்டிக்கொண்டு பல வருடங்களாக விவாதிக்கப்பட்டுக்கொண்டிருக்கும் சர்வதேச தலையீடு தொடர்பாக பொறுப்புக்கூறும் செயற்பாட்டினை கைவிடுவதனை இச்சந்தர்ப்பம் ஆகும்போது தற்போதைய ஆட்சியாளர்களுக்கு முடியாதுள்ளது. எனினும், ஜெனிவா பிரேரணையில் ஹைப்ரைட் நீதிமன்றத்தின் முன்னிலையில் குற்றஞ்சாட்டப்பட்டுள்ள இராணுவ அதிகாரிகள் இருந்தால் அவர்களை சமர்ப்பிக்க இடமளிக்கப்படமாட்டாது என ஜனாதிபதி மைத்திரி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக திறந்த அடிப்படையில் கருத்து தெரிவிப்பதற்கும் இரசகசியமாக இணக்கப்படாதிருப்பதற்கும் முதுகெலும்பு இருப்பது குறிப்பிடத்தக்கது. இவ்வாறான ஒரு நெருக்கடியின் போது தென்னாபிரிக்கா எம்மை விட பாராட்டுக்குரிய நடைமுறைகளை பின்பற்றுகிறது. அவர்கள் முதலில் வெள்ளை அறிக்கை மூலம் சிவில் யுத்தத்தின் தன்மையை சரியாக சர்வதேசத்திற்கு விளங்க வைத்தார்கள். அதன்மூலம் உண்மை ஆணைக்குழுவை பிரேரித்தார்கள். உண்மையை கண்டறியும் ஆணைக்குழுவிற்கு பின் நீதிச் செயற்பாடுகள் முன்வைக்கப்பட்டன. சர்வதேசம் முறையான முறையில் அந்த வேலைத்திட்டத்திற்கு ஆதரவு வழங்க தீர்மானித்தது. இறுதியில் உண்மையை கண்டறியும் ஆணைக்குழுவின் முன்னால் யுத்தத்தில் பங்குபற்றிய இரு தரப்பினரும் யுத்த பிரதானிகள் செய்த தவறுகள், குறைபாடுகள் தொடர்பாக வாய்மூலம் அளித்தார்கள். நடைபெற்ற சில விடயங்கள் குறித்து கவலை தெரிவித்தார்கள். இங்கே ஒவ்வொருவரும் கண்ணீர் விட்டு அழுது முத்தமிட்டு சல்யூட்களை பறிமாறிக்கொண்டதாக கூறப்படுகிறது. உண்மை ஆணைக்குழுவின் இறுதியில் நீதிமன்றம் செல்ல வேண்டிய தேவை இல்லாமல் போனது. இதற்கு ஏற்ற வகையில் வெற்றிகரமாகவும், ஆக்கபூர்வமானதாகவும் அரசியல் யாப்பொன்று நிறைவேற்றப்பட்டது. பொறுப்புக்கூறும் செயற்பாடு அதில் இருந்து முடிவுற்றது.

தாமதித்தே ஆபிரிக்காவின் உப ஜனாதிபதி சிரில் ரம்போஷா இலங்கை அரசின் அழைப்பில் வந்தது இந்த அனுபவங்களை பகிர்ந்து கொண்டு ஆபிரிக்கா இலங்கையின் உதவிக்கு மத்தியஸ்தராக செயற்படுவதற்காகும். ஆனால் அவர் வெறும் கையோடு திரும்பிச் சென்றார். அன்றைய ஊடக அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்லவின் கூற்றுப்படி அவர் வந்தது ஓர் உல்லாசப் பயணியாகவாகும். ஆபிரிக்க காங்கிரஸுக்கும், வெள்ளையாட்சியாளர்களுக்கும் இடையிலான கலந்துரையாடலில் மத்தியஸ்தராக செயற்பட்டது சிரில் ரம்போஷாவாகும். ஆபிரிக்காவில் ஒரு பிரபல நபராகும். இறுதியில் ஆபிரிக்காவின் தலையீடு பயனற்றுப்போனது. இங்கு ரம்போஷா பிரதிநிதித்துவப்படுத்தியது ஆபிரிக்க ஜனாதிபதி ஜக்கோ சுமாயையாகும். அன்றே ஆபிரிக்காவின் மத்தியஸ்தராக செயற்பட்டிருந்தால் ஜெனிவா மனித உரிமை ஆணைக்குழுவின் அமெரிக்காவின் பிரேரணைகள் வருடா வருடம் சமர்ப்பிப்பதற்கு இந்த நிலையில் மாற்றம் ஏற்பட்டிருக்காது.

தற்போதைய அரசு ஆட்சிக்கு வரும்போது ஜெனிவாவின் நெருக்குதல் உருவாக்கப்பட்டிருந்தது. இப்படியான நாட்டுக்கு பாதகமான பின்னணியிலாகும். 2015 ஜனவரி 8ஆம் திகதி வெற்றியின் மூலம் ஜனாதிபதி மைத்திரிக்கு இவை யாவற்றையும் நாட்டுக்கு சாதகமான முறையில் மாற்றிக்கொள்வதற்கு முடிந்துள்ளது. இலங்கை, அமெரிக்க ஒன்றிணைந்த கூட்டுப் பிரேரணை சமர்ப்பிக்கப்படுவது இதன் பிரதிபலனாகும். ஜெனிவாவில் அது தொடர்பான சில மாற்றங்கள் நடைபெற்றாலும் ஹைப்ரைட் நீதிமன்றத்திற்கு எதிராக தேசிய நீதிமன்றம் ஒன்றை அமைப்பது தொடர்பாக அவருடைய நிலைப்பாடு தெளிவானது. சிக்கலற்றது. அது மாறுவதும் இல்லை.

இப்போதாகும்போது ஜனாதிபதியும், பிரதமரும் ஹைப்ரைட் நீதிமன்றம் தொடர்பாக ஒரே நிலைப்பாட்டில் இருக்கிறார்கள். நாட்டின் நேர்மைக்கு முன்னே இவை எவற்றையும் கல்லில் கொத்தப்பட்டதாக நிலைப்பாட்டில் இருப்பது தேவையற்றதாக இருப்பது எதிர்காலத்தில் தெளிவாகும். அதேபோன்று ஜெனிவா அதிகாரிகள் இலங்கையின் பொறுப்புக்கூறல் செயற்பாடு தொடர்பாக நெகிழ்வுத் தன்மையோடு சிந்திக்கிறார்கள் என்பதை அவதானிக்கக்கூடியதாக இருக்கிறது. இலங்கை இது தொடர்பாக மேலும் இரு வருடகால அவகாசம் வழங்குவதற்கு அவர்கள் தயாராகிறார்கள். அது தொடர்பான பிரேரணையை கொண்டு வருவது அன்று எங்களுடைய நாட்டுக்கு எதிராக செயற்பட்ட மகா பிரித்தானியாவாக இருப்பது மாற்றத்தின் புரட்சியை காணக்கூடியதாக உள்ளது.

இதேநேரம், கடந்த ஆட்சிக்கு குற்றம் சாட்டிக்கொண்டு எதுவும் செய்கின்ற நாடாக எங்களுக்கு இருக்க முடியாது. ஜெனிவா சர்வதேச தாக்கம் இல்லாவிட்டால் கூட தற்போது பிரேரிக்கப்பட்டுள்ள சில விடயங்கள் நாடு என்ற வகையில் எங்களுக்கு மிக முக்கியமானது. வடக்கின் பிரச்சினைக்கு அரசியல் தீர்வுடனான அரசமைப்புச் சீர்திருத்தம் காணாமல் போனோர்களை கண்டுபிடித்தல். அதி பாதுகாப்பு வலயத்தில் உள்ள சில கிராமங்களையும், காணிகளையும் விடுவித்தல் போன்ற பொறுப்புக்கூறும் காரணிகள் நாடென்ற வகையில் எமக்கு முக்கியமாக இல்லை என்று வாதிடக்கூடியவர்கள் சந்தர்ப்பவாத அரசியலுக்கு மட்டுமே.

# பள்ளி உடைப்பு பற்றியே விமர்சனம் புனரமைப்பு பற்றி பேசுவதில்லை

## நாமல் ராஜபக்ஷ ஆதங்கம்

எமது ஆட்சிக்காலத்தில் உடைக்கப்பட்ட பள்ளிவாசல்கள் குறித்துமட்டும் விமர்சிக்கிறார்களே ஒழிய, வடக்கு மற்றும் கிழக்கில் புனரமைப்பு செய்யப்பட்ட 48 பள்ளிவாசல்கள் தொடர்பிலெல்லாம் எவரும் வாய் திறப்பதில்லை என்று பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ காட்டம் வெளியிட்டார்.

பத்ரமுல்லை, நெலும் மாவத்தையில் உள்ள கூட்டு எதிரணி காரியாலயத்தில் இடம்பெற்ற முஸ்லிம் முக்கியஸ்தர்களுடனான கலந்துரையாடலின்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் இங்கு தொடர்ந்தும் தெரிவிக்கையில்,

நாம் எப்போதும் முஸ்லிம்களுக்கு எதிராக செயற்படுவதில்லை. மாறாக எமது ஆட்சிக் காலத்தில் முஸ்லிம் மக்களை எம்மிடம் இருந்து பிரிக்க திட்டமிட்டே சில சதி நடவடிக்கைகள் இடம்பெற்றன. பொதுபலசேனா போன்ற அமைப்புகளுக்கு எமது அரசில் அமைச்சர்களாக இருந்து கொண்டு சம்பிக்க ரணவக்க போன்றவர்கள் தான் நேரடியாகவும் மறைமுகமாகவும் உதவினார்கள்.

கண்டி நகரில் இடம்பெற்ற பொதுபல சேனாவின் முதலாவது கூட்டத்துக்கும் ஹெல உறுமய கட்சித் தான் அனுமதி எடுத்துக்கொடுத்தது. அதே ஹெல உறுமய தான் தற்போது நல்லாட்சியில் பங்காளியாக உள்ளது. அதன் பயனாக நாம் உள்ளே அனுமதிக்காத சில குழப்பவாதிகளும் இன்று அரச மரியாதையுடன் வலம் வருகிறார்கள். இதை முஸ்லிம் மக்கள் நன்றாகப் புரிந்துகொள்ளவேண்டும்.

அத்தோடு, முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக்காலத்தில் பள்ளிவாயல்கள் உடைக்கப்பட்டதாகவும் கல்லெறியப்பட்டுத் தாக்கப்பட்டதாகவும் கூறுபவர்கள் நாம் வடக்கு கிழக்கில் புனரமைப்பு செய்த 48 பள்ளிவாயல்கள் பற்றி எல்லாம் வாய் திறப்பதே இல்லை. புதிதாக அனுமதி வழங்கிய பள்ளிவாயல் பற்றியும், புதிதாகக் கட்டப்பட்ட பள்ளிவாயல்கள் பற்றியும் கருத்து வெளியிடுவதில்லை.

தற்போது தம்புள்ளை பள்ளிவாயல் பிரச்சினை பூதாகரமாகியுள்ளது. அந்த பள்ளிவாயலை அங்கிருந்து அப்புறப்படுத்த இணக்கம் தெரிவித்துள்ள முஸ்லிம் அரசியல் தரப்புகள் அன்று பள்ளிவாயலை ஓர் அங்குலமாவது அங்கிருந்து நகர்த்த முடியாது எனக் கூறினார்கள். அன்று தம்புள்ளை பள்ளிக்காக கண்ணீர் வடித்தவர்கள் தான் தற்போது பதவி மோகத்தில் ஒன்றுமே நடக்காதது போல இருக்கிறார்கள். இவர்கள் தொடர்பில் முஸ்லிம் மக்கள் நன்றாகப் புரிந்துகொள்ள வேண்டும் என்றும் தெரிவித்தார்.



## கல்விமான்களின் உருவாக்கத்திற்கு பங்களிப்புச் செய்த கைருல் பஷரின் இழப்பு ஈடு செய்ய முடியாதது

### அமைச்சர் ரவூப் ஹக்கீம்



மறைந்த அஷ்ஷெய்க் ஹைருல் பஷர் (நளீமி) ஆரவாரமின்றி அமைதியாக இஸ்லாமிய சன்மார்க்கப்பணியில் அயராது ஈடுபட்டவர் என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் விடுத்துள்ள அனுதாபச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

அமைச்சர் ஹக்கீம் அந்தச் செய்தியில் மேலும் தெரிவித்துள்ளதாவது

ஜாமிஆ நளீமிய்யா கலாபீடத்தின் சிரேஷ்ட விரிவுரையாளர் அஷ்ஷெய்க் ஹைருல் பஷர் (நளீமி) காலமான போது நான் சவூதி அரேபியாவில் இருந்தேன். அவர் மறைந்த செய்தி எனக்கு கூறப்பட்டதும் நான் மிகவும் கவலையடைந்தேன்.

இலங்கையிலும் சூடானிலும் கற்றுத்தேறிய மர்ஹூம் அஷ்ஷெய்க் ஹைருல் பஷர் (நளீமி) சிறந்த சன்மார்க்க அறிஞராக திகழ்ந்ததோடு, வெள்ளிக்கிழமைகளில் தரமான ஜும்ஆப் பிரசங்கங்களை நிகழ்த்துவதிலும் சிறந்து விளங்கினார். கல்விமான்கள் பலரின் உருவாக்கத்திற்கு பங்களிப்பு செய்த அவர் பல நூல்களையும் ஏராளமான கட்டுரைகளையும் எழுதியுள்ளார்.

எனது அழைப்பை ஏற்று சில நிகழ்வுகளில் அவர் பங்குபற்றியுள்ளதோடு, தேவையான சந்தர்ப்பங்களில் உரிய ஆலோசனைகளையும் வழங்கியுள்ளார்.

இறுதி மூச்சுவரை தாம் கற்றுத்தேறி கல்விப்பணியாற்றிய நளீமிய்யா கலாபீடத்தின் வளர்ச்சியில் அதிக அக்கறை கொண்டவராக அவர் விளங்கினார்.

அவரது பிரிவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கும் உறவினர்களுக்கும் ஜாமிஆ நளீமிய்யா கலாபீடத்தினருக்கும் ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்வதோடு, அன்னாருக்கு மேலான ஜன்னத்துல் பிர்தவ்ஸ் சுவன வாழ்வு கிட்டவும் எல்லாம் வல்ல அல்லாஹ்வை பிரார்த்திக்கின்றேன்.

## கல்வி மற்றும் சமூக வலுவூட்டலுக்கான ஒத்துழைப்பு அமையத்தின் கலந்துரையாடலும் நிதி கையளிப்பும்





(மருதமுனை நிருபர்)

மருதமுனை கல்வி மற்றும் சமூக வலுவூட்டலுக்கான ஒத்துழைப்பு அமையத்தின் உறுப்பினர்களுக்கும், கிழக்கு மாகாண சபை உறுப்பினர் கே.எம்.ஏ. றஸாக்கிற்கும் இடையிலான சந்திப்பும், கலந்துரையாடலும், நிதி கையளிப்பும் 12ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மருதமுனை அல்-ஹம்றா வித்தியாலயத்தில் அமையத்தின் தலைவரும் சப்ரகமுவ பல்கலைக்கழகத்தின் பதிவாளருமான எம்.எப்.ஹிபத்துல் கரீம் தலைமையில் நடைபெற்றது.

அமையத்தின் திட்டமிடல் செயற்திட்டப் பணிப்பாளர் எம்.ஐ.எம். வலீதினின் நெறிப்படுத்தலில் நடைபெற்ற இந்த சந்திப்பின்போது கல்வி மற்றும் சமூக வலுவூட்டலுக்கான ஒத்துழைப்பு அமையத்தின் எதிர்கால நடவடிக்கைகள் பற்றியும்,எதிர்கால செயற்திட்டங்கள் திட்டங்கள் பற்றியும் விரிவாக ஆராயப்பட்டு கிழக்கு மாகாண சபை உறுப்பினர் கே..எம்.ஏ.றஸாக்கிடம் சில கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டன.

அதே போன்று மருதமுனைப் பிரதேச பாடசாலைகளில் சிறு சிறு தேவைகளும் கோரிக்கைகளும் இங்கு சமூகமளித்திருந்த அதிபர்களினால் முன்வைக்கப்பட்டது. இந்த கோரிக்கைகளை ஏற்றுக் கொண்ட கிழக்கு மாகாண சபை உறுப்பினர் றஸாக் ஆறு பாடசாலைகளுக்கும் போட்டோ கொப்பி இயந்திரங்களை இந்த அமையத்தின் ஊடாக உடனடியாக வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என உறுதியளித்தார்.

இதனைத் தொடர்ந்து மருதமுனை கல்வி மற்றும் சமூக வலுவூட்டலுக்கான ஒத்துழைப்பு அமையத்திற்கு ஒரு இலட்சம் ரூபாவுக்கான காசோலையை மாகாண சபை உறுப்பினர் கே..எம்.ஏ.றஸாக் அமையத்தின் நிதிப்பணிப்பாளர் தென்கிழக்குப் பல்கலைக்கழக உதவிப் பதிவாளர் எம்.மர்சூக்கிடம் கையளித்தார்.

இந்த நிகழ்வில் அமையத்தின் ஆலோசகரும்,கிழக்கு மாகாண சபையின் பிரதிப் பிரதம செயலாளருமான ஏ.எச். எம்.அன்சார், மற்றும் அமையத்தின் உறுப்பினர்களும், பாடசாலை அதிபர்களும். ஆசிரியர்களும் கலந்து கொண்டனர்.







எகிப்து கெய்ரோவில் கடந்த 11,12 ஆம் திகதிகளில் நடைபெற்ற கெய்ரோ இஸ்லாமிய விவகார உயர் பீட 27ஆவது மாநாட்டில் முஸ்லிம் சமயம் கலாசாரம் மற்றும் தபால் துறை அமைச்சர் எம். எச். ஏ. ஹலீம் கலந்து கொண்டார்.இதன் போது சமாதானத்திற்கான கலாசார முன்னெடுப்பும் பயங்கரவாதச் சவால்களை எதிர் கொள்ளலும் என்ற தொனிப் பொருளில் அம் மாநாட்டில் அமைச்சர் உரையாற்றுவதையும் அமைச்சர் எகிப்து நாட்டு அமைச்சர்கள் மற்றும் வெளிநாட்டு அரசியல் பிரகமுகர்களுடன் கலந்துரையாடுவதையும் படங்களில் காணலாம். (குருநாகல் இக்பால் அலி)

## தேசிய தௌஹீத் ஜமாஅத்திற்கு எதிராக காத்தான்குடியில் ஆர்ப்பாட்டம்

(காத்தான்குடி ஏ.எல்.டீன்பைரூஸ்)

கடந்த வெள்ளிக்கிழமை காத்தான் குடியில் இடம் பெற்ற இரு குழுக்களுடையிலான மோதலில் போது படுகாயமடைந்து மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுவரும் முஹம்மது முஸப்பிர் என்பவருக்கு நீதி வேண்டியும்,மௌலவி காசீம் ஸஹ்றான் (மஸ்ஊதி) தலைமையில் காத்தான்குடியை தளமாகக் கொண்டு இயங்கும் தேசிய தௌஹித் ஜமாஅத்தினை தடை செய்யுமாறு வேண்டியும் நேற்று காத்தான்குடி பிரதான வீதி தேசியநூதணசாலை முன்பாக மௌலவி அப்துர் றவூபின் (மிஸ்பாஹி) ஆதரவாளர்களினால் அமைதியான முறையில் ஆரப்பாட்டம் ஒன்றுமேற் கொள்ளப்பட்டது.

மேற்படி ஆர்ப்பாட்டத்தில் நூற்றுக்கணக்கான ஆண்கள், பெண்கள், இளைஞர்கள் எனப்பலரும் கலந்துகொண்டதுடன் பல்வேறு வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளையும் ஏந்தியவாறு ஆர்ப்பாட்டக்காரர்கள் தங்கள் எதிர்ப்பினை தெரிவித்தனர்.

## தாராபுரம் தாய்சேய் நிலையத்துக்கு பிளாஸ்டிக் கதிரைகள்

(ஏ.எஸ்.எம்.ஜாவித்)

மன்னார் தாராபுரம் கிராமத்தில் உள்ள தாய் சேய் பாராமரிப்பு நிலையத்திற்கு வடமாகாண சபை உறுப்பினர் எச்.எம். ரயிசின் நிதி ஒதுக்கீட்டில் ஒரு தொகுதி பிளாஸ்டிக் கதிரைகள் வழங்கி வைக்கப்பட்டன.

மேற்படி நிலையத்திற்கு சிகிச்சைக்காக வரும் கர்ப்பிணித் தாய்மார்கள் இருப்பதற்கு எதுவித வசதிகளுமின்றி சிரமப்பட்டுக் கொண்டிருந்த நிலையில் அவற்றை நிவர்த்தி செய்யும் வகையில் மாகாண சபை உறுப்பினரின் சகோதரர் ஹஸ்மத்தி வேண்டுகோளுக்கமைய இவை கையளிக்கப்பட்டன.



## தமிழ் மொழி மூல கலை நிறுவனங்கள் பதிவு செய்ய நடமாடும் சேவை

(ஐ.எம்.ஹம்தான். அஹமட் ஸிறாஜ் இஸ்ஸதீன்)

கலாசார அமைச்சின் கருப்பொருள் திட்டத்திற்கமைவாக காலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் அம்பாறை மாவட்டத்திலுள்ள தமிழ் மொழி மூல கலாசார கலை நிறுவனங்களையும் பதிவு செய்வதற்கான நடமாடும் சேவையொன்று அக்கரைப்பற்று கலாசார மத்திய நிலையத்தில் இடம்பெற்றது.

இதற்கமைவாக அக்கரைப்பற்று கலாசார மத்திய நிலையத்தில் நடைபெற்ற இந் நடமாடும் சேவையில் அக்கரைப்பற்று, ஆலையடிவேம்பு, திருக்கோயில், பொத்துவில் அட்டாளைச்சேனை, இறக்காமம் போன்ற பிரதேச செயலகப்பிரிவுக்குட்பட்ட கிராமங்களில் நடைமுறையிலுள்ள தமிழ் மொழி மூல கலை மன்றங்கள் மற்றும் கலை நிறுவனங்களின் ஆவணங்கள் பரீட்சிக்கப்பட்டு இந்த நடமாடும் சேவை மூலம் பதிவு செய்யப்பட்டன.

மேலும் அம்பாறை மாவட்டத்தில் கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் நடாத்தப்பட்ட நடமாடும் சேவை மூலம் சுமார் 74 தமிழ் மொழி மூல கலை நிறுவனங்களும் கலை மன்றங்களும் பதிவு செய்யப்பட்டுள்ளதாக மாவட்ட கலாசார உத்தியோகத்தர் ரி.எம்.றிம்ஸான் இதன் போது தெரிவித்தார்.

அம்பாறை மாவட்டத்தில் நடைபெற்ற நடமாடும் சேவையில் கொழும்பிலிருந்து வருகை தந்த கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் உத்தியோகத்தர்களான எஸ்.தனசாந், எஸ்.நேசன், உட்பட அம்பாறை மாவட்டத்திலுள்ள பிரதேச செயலகங்களில் கடமை புரியும் கலாசார உத்தயோகத்தர்கள், கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் உத்தியோகத்தர்கள் என பலர் கலந்து கொண்டதாக மாவட்ட கலாசார உத்தியோகத்தர் றிம்சான் மேலும் தெரிவித்தார்.

## புதிய சீருடை அறிமுகமும் வீரர்கள் கௌரவிப்பும்









(றியாஸ் இஸ்மாயில்)

அட்டாளைச்சேனை நியு ஸ்டார் விளையாட்டுக் கழகத்தின் புதிய சீருடை அறிமுகம் செய்து வைக்கும் நிகழ்வும் சென்ற ஆண்டுக்கான சிறந்த வீரர்களைக் கௌரவிக்கும் நியு ஸ்டார் நைட் நிகழ்வும் அட்டாளைச்சேனை கோணாவத்தை கடற்கரை திறந்த வெளி அரங்கில் நேற்று முன்தினம் இரவு இடம் பெற்றது.

நியு ஸ்டார் விளையாட்டுக் கழகத்தின் உபதலைவரும் அட்டாளைச்சேனை சமூக கலாசார அபிவிருத்தி மையத்தின் ஆலோசகருமான ஏ.எம்.அக்பர் தலைமையில் இடம் பெற்ற இந்நிகழ்வில் கிழக்கு மாகாண சபை உறுப்பினரும் அக்கரைப்பற்று உதைபந்தாட்ட லீக்கின் தலைவருமான ஏ.எல்.தவம் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு கழகத்தின் புதிய சீருடையினை அறிமுகம் செய்து வைத்தார்.

இந்நிகழ்வில் அட்டாளைச்சேனை பிரதேச சபையின் முன்னாள் உறுப்பினர் தமீம் ஆப்தீன், சமூக கலாசார அபிவிருத்தி மையத்தின் தலைவர் அதிபர் எம்.ஐ.றியாஸ், செயலாளர் அபிவிருத்தி உத்தியோகத்தர் ஏ.எல்.கியாஸ், பொருளாளர் யூ.எல்.முனாப் அந்-நூர் மகா வித்தியாலய அதிபர் ஏ.எம்.மிஸ்வர், லக்கி, சுப்பர் ஒக்கிட், ஹைலண்ட், பிளக்நைட், மார்க்ஸ்மேன் விளையாட்டுக் கழகங்களின் தலைவர்களான எஸ்.எம். அறூஸ், பீ.முஹாஜீரின், எஸ். அன்சார், எம்.றிபா, எம்.வாஜித் நியு ஸ்டார் கழகத்தின் செயலாளர் ஏ.எல்.றியாஸ், பொருளாளர் எஸ்.பாறுக் உள்ளிட்ட பலர் அதிதிகளாகக் கலந்து கொண்டனர்.

2016ம் ஆண்டின் நியு ஸ்டார் கழகத்தின் சிறந்த வீரராக தெரிவு செய்யப்பட்ட ஏ.எச்.றிசாட் பிரதம அதிதியினால் வெற்றி நாயகன் பட்டம் வழங்கி பொன்னாடை போர்த்தி நினைவுச்சின்னம் வழங்கி இதன் போது கௌரவிக்கப்பட்டார்.

இதன் போது கழகத்தின் வெற்றிக்காக சென்ற வருடம் செயற்பட்ட என்.எம். மபா, ஏ.சீ.எம்.அஸ்லம், ஏ.சீ.எம்.அஸீம், எம்.அஸ்லம், எஸ்.ஏ.றஹீம், ஜே.அர்சாத், எம்.அப்னான் ஆகியோர் அதிதிகளினால் பாராட்டப்பட்டனர்.

இவ்வைபவத்தில் நியு ஸ்டார் விளையாட்டுக் கழகத்தின் வீரர்கள் மற்றும் ஏனைய கழகங்களின் வீரர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

# ஜலதரங்கம்

கலைவாதி கலீல்

கலை - இலக்கியம் - விமர்சனம்



# ஊமையின் பாஷை

சிறுகதை

**- கெக்கிராவ ஸஹானா**

நீ நேத்து வந்துட்டதாகச் சொன்னாங்க. நம்ப முடியல்ல. காலைல மிச்ச நேரம் கழிச்சி உன் குரல் கேக்குது. இப்ப தான் தூங்கி எழும்பினாய் போல. ஆமா நீ வந்துதான் விட்டாய்.

ஐயோ! உன்னோட பேசணும் பேசணும்டு எவ்வளவு நாளா துடிச்சேன்...! எப்படியாவது இந்தப் பிரச்சினையை உன் காதுல போட்டுரணும்டு எவ்வளவு துடிச்சேன்! ஊமையாவது சொல்றதாவது உனக்கு ஒரு கடிதமாவது போட்டுரணும்டு உன் முகவரிய ரொம்ப நாளா தேடினேன். இப்ப நீ வந்துட்ட, நன்றி அல்லாஹ்.

அல்லா நீ எப்பவும் சின்னப் பிள்ளைகளுக்கு இரக்கம் காட்டுவே.... அத்துடன் என்னோடயும் இரக்கமானவன். அதுதான் உள்ளத்துக்குள் நா படுற சித்திரவதைய கண்டு பொறுக்க முடியாம அவன அனுப்பி வச்சிட்டே.

தம்பி கொஞ்சம் இங்க வாயேன்டு சொல்லி உன்ன அழைச்சி பக்கத்துல உக்கார வச்சி நெறய கதைக்க ஆசைதான். எப்படி சாத்தியம்? நா தான் ஊமையாச்சே. அதிலும் உன் மனைவின்ற ராட்சசிக்குப் பயப்படும் ஊமையிலும் ஊமையான எதிர் வீட்டுக்காரியாச்சே.

நீ வெளிநாடு போய் ரெண்டு வருசம் இருக்குமா? இல்ல இல்ல, சரியா போன நோம்புப் பெருநாள் கழிஞ்சித்தான் வேல தேடி கட்டாருக்குப் போன. இப்ப இந்த நோம்புப் பெருநாள் கழிச்சி வந்திருக்க. சரியா ஒரு வருஷம்.

நா என் விட்டு ஜன்னலால பாத்துக்கிட்டுதான் இருக்கேன். எம்மக எப்பவும் புள்ளயும் கையுமா உள் வீட்டுல வேலையா இருப்பா. மருமகன் கெழமைக்கு ஒருநாள் தானே வருவாரு. எனக்கு வேற என்ன வேல? பேத்தியப் பார்த்துக் கொள்ளுவேன். மகளுக்கு கூட மாட கொஞ்சம் ஒத்தாசை செய்வேன். மத்த நேரங்கள்ள வாசல் திண்ணைல வெத்தலத் தட்டத்தோட உக்காந்திருப்பேன். என் வயசு கிழடுகள் யாராவது வந்தா உக்காந்து வெத்தல போடுவோம். மத்தபடி நான் தனியதான்.

உன் வீட்டுல நடக்குறது எல்லாமே எனக்கு நல்லாத் தெரியும். நா வேணும்டு உத்து பாக்குறது இல்ல. இந்தத் தெருட அமைப்பு அப்புடி. நா என் வீட்டு குசினில இருமினா அது உன் வீட்டு நடுக்கூடத்துக்கு கேக்கும்.

அவதான், உம் மனுசி இருக்காவே நீ போயி கொஞ்ச நாள் நல்லா இருந்தா. அதுக்கப்புறம் எப்பவுமே பிரச்சினதான். சிலநேரம் டெலிபோன்ல யாருக்காவது ஏசுவா. சிலநேரம் ஒன்னு அழுவா. சில நேரம் வீட்டு முன்னால நின்னு இந்த ரோட்டுக்கே கேக்குற மாதிரி யாரோடையாவது சண்டை பிடிப்பா. அவட பொழுது போக்கு என்ன தெரியுமா? அந்த மூணு வயசு பாலகனப் போட்டு ஒரே அடிக்கிறதுதான்.

எப்பவுமே நீ போய் கொஞ்ச நாள்ல இதெல்லாம் தொடங்கிரும். அவவ நெனச்சாவே கெதம் கெதம்டு ஆயிரும். சில நேரம் யார் யாரோ வந்து போற மாதிரி இருக்கும். ஆனா நீ வந்துட்டா அப்புறம் படி தாண்டாத பத்தினிதான்.

அவ எப்படின்டாலும் இருந்துட்டுப் போகட்டும். ஆனா தான் பெத்த புள்ளயப் போட்டு இந்த அடி அடிக்கிறாளே. அத மட்டும் என்னால தாங்க முடியல்ல தம்பி.

பக்கத்து வீட்டுக்குப் போனாலும் அடி. பின் வீட்டுக்குப் புள்ளய கூட்டிக்கொண்டு வந்து அவன் விளையாடினாலும் அடி. எங்க வீட்டுக்கு வந்தாலும் கூட அவனுக்கு அடிதான். இதுக்கெல்லாம் காரணம் என்னண்டு தெரியல்ல. நீ பக்கத்துல இல்லாததுதான்டு நான் நெனச்சிக் கொள்ளுவேன். சில நேரம் நீ காசு அனுப்ப லேட்டாயிரிச்சின்டாப் போதும். இந்தக் கோலமெல்லாம் தொடங்கிரும்.

நீயும் எத்தனையோ தடவை வந்துட்டு இருக்கே. இது நடந்துக்கிட்டே இருக்கு. வீட்டுக் கதவ எப்பவும் கேடர் மாதிரி சாத்தி வெச்சிருப்பா. ஒரு நா ஒம் மகன் ஓடி பக்கத்து வீட்டுக்குப் போயிட்டான். உடனே அவனக் கூட்டி வந்து அவன் கெஞ்சக் கெஞ்ச அரை மணித்தியாலம் முஸ்தீபு செஞ்சிட்டு அவனப் போட்டு அடிச்சாளே அடி! என் ஈரல் எல்லாம் கருகிப் போச்சி. என்னண்டு கேட்டா அவ பக்கத்து வீட்டுக்காரியோட பேசுறது இல்லயாம். இன்னொரு நாள் பின் வீட்டுப் புள்ளய கூட்டிக் கொண்டு வந்து விளையாடினான்டு செல்லி தாறுமாறா அடிச்சா. பின்வீட்டுக்காரி வந்து ஏம்மா இப்பிடி அடிக்கிற? ன்டு கேட்டதுதான் கடன். ஒனக்குத் தேவையில்லையே... நா ஓம் புள்ளய அடிச்சனா? ஏம்புள்ளயதானே அடிச்சேன். தேவையில்லாம பேசாதே! ன்டு சொல்லி அவள ஏசி வெரட்டிட்டா.

அதுக்குப்பிறகு அவவும் இவவோட பேசுறத நிப்பாட்டிட்டா. இவவுக்கு அதுவும் வசதியாப் போச்சி. இந்தப் பொம்புளகள் தங்கட ஆத்திரங்கள எல்லாம் கொட்டுறதுக்கு லேசான வழி இதுதானே. புள்ளகள் வாய் தொறந்து பேசாதுதானே. அதுக்கு என்ன வேணுமானாலும் செய்யலாம். வீட்டுக்காரரோட கோவமா? அடுத்த வீட்டுக்காரியோட சண்டையா? எல்லாத் துக்குமே லேசான வடிகாலா இந்தப் பச்சப் புள்ளைகள் கெடச்சிருது.

ஒருநாள் ஒம் மகன் எங்க வீட்டுக்கு வந்தான். பேத்தியோட வெளயாட. கைவிரல் எல்லாம் வீங்கியிருந்திச்சி. என்னன்டு கேட்டா நான் குளிக்கக்குள்ள வம்பு பண்றேன்டு எங்கட உம்மா கை விரலெல்லாம் மறுபக்கமாகத் திருப்பிப் போட்டாங்கன்டு சொன்னான். சின்னப் புள்ளக்கி அப்படி செய்தா எதிர்காலத்துல அவன் ஒரு பிடிவாதக்காரனா ஆகிட மாட்டானா?

அவன் உங்க உம்மா எவ்ளோ நல்லம்! உனக்கு அடிக்கவே மாட்டாங்க இல்லியா?...ன்டு எம் பேத்திக்கிட்ட கேட்டானாம். அவன் மனசுல எவ்ளோ கவல இருந்தா அப்படி சொல்லியிருப்பான்.

இந்த விஷயங்களையெல்லாம் சொல்லி ஒன்ன சீக்கிரமே வரவழைச்சிரணும்டு எனக்கு படும். ஆனா, தப்பித்தவறி நா ஏதாவது ஒனக்கிட்ட சொல்லிட்டேன்டு தெரிஞ்சா அப்பப்பா! உம் மனுசிட பேயாட்டத்தை நெனச்சிக்கூட பார்க்க முடியாது. இந்த ரோட்டுல அவவோட யாருமே பேசுறதில்ல. உனக்கே தெரியுமே. நீ வந்த பின்னால கூட ஒரு குஞ்சு குருமானாவது உன் வீட்ட எட்டிப் பாத்துச்சா?

இவ லண்டன்ல இருந்தான்டா இந் நேரம் ஜெயில்லதான் இருப்பான்டு அன்னக்கி எம்மக சொல்லிக்கிட்டு இருந்தா. அங்க எல்லாம் பெத்த புள்ளயகூட அடிக்க முடியாதாமே? நீ திரும்பவும் வெளிநாடு போயிராத வாப்பா. நீ அங்க வேல தேடி அலைஞ்சு திரிய, இங்க உம் புள்ள அன்பைத் தேடி அலைஞ்சி திரியிது. நீ பணம் கெடைச்சா வாழ்க்கை நல்லா அமையும்னு நெனக்கிறே. ஆனா வாழ்க்கையே போய் முடிஞ்ச பிறகு அந்தப் பணத்தக் கொண்டு வந்து என்ன பிரயோசனம் சொல்லு...?

## ஆய்வாளர் கவனத்துக்கு....



கடந்த சில வாரங்களாக ஜலதரங்கத்தில் சிறுகதை, கவிதை, நாவல் போன்ற ஆக்க இலக்கியங்களைப் பற்றி ஆய்வு செய்யும் ஆய்வறிஞர்களின் வசதி கருதி இத்துறைகளில் ஈடுபாடு காட்டிவரும் எழுத்தாளர் பெயர்ப்பட்டிலைத் தந்திருந்தோம். சிற் சிலருடைய பெயர் விடுபட்டுள்ளன. இது வேண்டுமென்றே செய்யப்பட்டதல்ல. தவறுதலாக நடைபெற்றது. ஆயினும் சிறுகதையெனின் ஒரு ஐந்து சிறுகதைகளையாவது பிரபல பத்திரிகைகளில் எழுதியவர்களதும் கவிதையெனின் பதினைந்து கவிதைகளாவது பிரபல பத்திரிகைகளில் எழுதியவர்களினதும் ஒரு நாவலை பத்திரிகையிலோ நூலாகவோ எழுதி வெளியிட்டவர்களது பெயர்களை மட்டுமே பதிவு செய்திருந்தோம். இப்பத்தி எழுத்தை சென்ற வாரத்துடன் நிறைவு செய்திருந்தோம்.

ஆயினும் தவற விடப்பட்ட இன்னும் சிலரது பெயர்களுடன் ஆய்வாளர்களின் கவனத்துக்கு என்ற இப்பத்தி இன்று நிறைவு பெறுகிறது.

தவற விடப்பட்ட சில எழுத்தாளர்களின் பெயர் விபரங்கள். கவிதை - சித்தீக் காரியப்பர், கொழும்பு பாத்திமா நளீரா, எஸ்.ஐ. நாகூர்கனி, மலைக்குயில் சாஹிரா நாஸிர், காரியப்பர், சரபா அன்பு நிலா.

சிறுகதை - நஸ்புல்லாஹ், கொழும்பு றஹீமா.

**- கலை**

## நறுக் - க - விதை

துருவித் துருவி
ஆராய்கிறது
தேங்காயை...
தேங்காய்த் துருவி

**- வெலிமடை ஜஹாங்கீர்**



கிராமிய மொழி வழக்கில்: திருவலை

## ஹைகூ கவிதைகள்

என் இதயம் உன்னிடம்
இதயநோய் எனக்குவந்தால்
நீ மருந்தெடுப்பாயா?

உனக்கு சுகமில்லா பொழுதுகளில்
நான் மருந்தெடுக்கிறேன்
சீக்கிரம் நீ குணமடைய

நஞ்சுக்கும் விலையேற்றம்
வாள்வதற்குமட்டுமல்ல சாவதர்கும். ஏழை
கடன் வாங்கித்தான் ஆகவேண்டும்

புதியபட்ஜட் விலையுயர்வுக்காய்
கடவுளை பிரார்திக்கிறாள்
விலைமாது

நாணிக் கொண்டிருக்கிறாய் நீ
உனைப் படைக்கும்போது
பிரம்மன் வெட்கப்பட்டிருப்பானோ

திருமணப்பேச்சு
அடக்கமான பெண் கேட்டேன்
சமாதிகளை காட்டினார்கள்

கண்கண்ட தெய்வம்
கணவன் என்றேன்
தான் நாஸ்திகன் எண்கிறாள் மனைவி

திருட்டுப்போன பணத்தை
தேடித்தந்தார்கள் போலிஸ்
கள்ளநோட்டு எனஅறியாமல்

மௌனம் சம்மதமாம்
காதலித்துக் கொண்டிருகின்றான்
நான் ஊமையென்று அறியாமல்

எப்படிச்சொல்வேன் செத்தசேதி
அவன் வருகைக்காய்... வாசலில்
ஆசையோடுவளர்த்த நாய்குட்டி

**- ஒலுவில் பிஸ்ருள்ஹாபி**

## உனக்கொரு தினம் போதாது!....



அன்பை கொடுக்கும்
தாயும் - பெண்ணே!
அன்பை கெடுக்கும்
தேவதையும் - பெண்ணே!
அரவணைப்பை கொடுக்கும்
மனைவியும் - பெண்ணே!
என்னைக் கருவில்
சுமந்தவளும் - பெண்ணே!....

பெண்னென்ற - வார்த்தையது
கண் - போன்றது...
மாணிக்கமான - மாயை!...
பூமியின் - சுழற்சி
சூரியனுக்கென்றால்
ஓர் - ஆணின்
சுழற்சி - பெண்ணிடமே!....

தனக்கு - இல்லையென்றாலும்
தன் - பிள்ளைக்கு
தேடி - உணவளிக்கும்
தாயும் - பெண்ணே!...
தன்னிடமுள்ளதை
பறித்து - உண்ணும்
காதலியும் - பெண்ணே!...
தன்னிடமுள்ளதை
பகிர்ந்து - உண்ணும்
மனைவியும் - பெண்ணே!...
உள்ளதையிரண்டாக்கி
சண்டையிட்டு
முண்டியடித்து - விளையாடும்
சகோதரியும் - பெண்ணே!...

பெண்ணே!
உனக்கொரு - தினம்
போதாதே!....
எந்நாளும் - உன்னலே
உன்நாளே!....

**- கியாஸ் ஏ. புஹாரி**

# இடப்பெயர்வுக் கவிதைகள்

**- மேமன்கவி**

(கடந்த வார தொடர்)



விரட்டப்பட்ட வடபுலத்து முஸ்லிம் சமூகத்தைச் சேர்ந்த படைப்பாளிகள் அவர்தம் இடம்பெயர்வு அனுபவ வாழ்வியலை பற்றி சிறுகதை, நாவல் போன்ற வடிவங்களில் தந்தமை மிக மிக குறைவாக இருக்க, கவிதை வழியாக ஆழமாகவும் உணர்வுபூர்வமாக, உணர்ச்சிபூர்வமாக பதிவுச் செய்துள்ளார்கள். அவர்களில் மன்னாரைச் சேர்ந்த **கலைவாதி கலீல்,** மன்னார் எருக்கலம்பிட்டியைச் சேர்ந்த **எம்.எச். எம்.நிஃமத்**, முல்லைத்தீவைச் சேர்ந்த **முல்லை முஸ்ரிபா** மன்னாரைச் சேர்ந்த **உவைஸ்கனி,** யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த **யாழ் அசீம்,** ஆகியோர் கடந்த காலத்தில் வடபுலத்து முஸ்லிம் மக்களின் குரலை கவிதைத் துறையில் பதிவுச் செய்த, முக்கிய கவிஞர்களாக எமக்கு தெரிகிறார்கள்.

இவர்களில் கலைவாதி கலீல் அவர்கள் நீண்ட காலமாக எழுத்துலகில் இயங்கிக் கொண்டிருப்பவர். இன்ஸான் பண்ணையின் ஒரு முக்கியப் படைப்பாளி. அவரும் மன்னாரிலிருந்து இடப்பெயர்வுக்கு ஆளானவர். வடபுலத்து முஸ்லிம் மக்கள் விரட்டப்பட்ட 1990ஆம் ஆண்டை நினைவு கூரும் வகையில் வருடம் தோறும் தொடர்ந்து கவிதைகள் தந்து கொண்டிருப்பவர்.

இவ்விடத்தில் கலைவாதி கலீல் ஆற்றிய ஒரு பணியை இங்கு பொருத்தம் கருதி நினைவுப்படுத்த விரும்புகிறேன். 80களில் கொழும்பிலிருந்து பாமிஸ் சமூக அமைப்பின் சஞ்சிகையாக வெளிவந்த "**பாமிஸ்**" எனும் சஞ்சிகையில் பலஸ்தீன் கூடார்த்த சித்திர ஓவியரான **நஜீ-அல்-அலி** யின் கூடார்ந்த சித்திரங்களுக்கு **சர்தார்** எனும் புனைப்பெயரில் எழுதிய கவிதைகளுடன் அச்சித்திரங்களையும் சேர்த்து 1999ஆம் ஆண்டு மன்னார் வாசகர் வட்ட வெளியீடாக '**ஓ.பலஸ்தீனமே! நஜீ-அல்-அலியும் ஹன் ஸல்லாவும்**' எனும் தலைப்பில் வெளியிட்டார். இதில் ஹன்ஸல்லா என்பது இஸ்ரேலிய இராணுவத்திற்கு எதிராக கல் எறிந்து போராடிய (Palestinian stone - thrower) சிறுவனின் பெயர்தான் ஹன்ஸல்லா. அவனை நஜீ-அல்-அலி அக்கூடார்த்த சித்திரங்களில் சித்திரித்து இருப்பார்.

கலைவாதி அவர்கள் வடபுலத்து முஸ்லிம்கள் விரட்டப்பட்ட 9ம் ஆண்டு நினைவாக, அத்தொகுப்பை அவர்களுக்கு சமர்ப்பித்து இருந்தமையிலும் ஒரு பொருத்தப்பாடு இருந்தது. ஆக்கிரமிக்கப்பட்ட பலஸ்தீன நிலத்தை மீட்டெடுக்கப் போராடிக் கொண்டிருந்தவர்களின் சித்திரங்களுக்காக எழுதப்பட்ட கவிதைகளின் தொகுப்பாக அத்தொகுப்பு இருந்தமையே அப்பொருத்தப்பாடு ஆகும்.

அத்தொகுப்பிலேயே "தணியுமா இந்த தாகம்?" என்ற தலைப்பில் வட - புலத்து முஸ்லிம்கள் வாழ்ந்த மண்ணிலிருந்து விரட்டப்பட்டதன் நினைவாக ஒரு கவிதையையும் இணைத்து இருந்தார். அக்கவிதையை கலைவாதி கலீல் இவ்வாறாக முடிக்கிறார்.

**தணியாது எங்களின் தாகம் - இந்தத்**
**தரங்கெட்ட வாழ்க்கை மீதெமக்கென்ன**
**- மோகம்**
**இனி மீட்க வேண்டுமெம் பூமி - உடன்**
**எழுந்து வாசோம்பிக் கிடக்காமலே நீ!**

ஆனாலும்! கலைவாதி கலீலின் அத்தகைய கவிதைகள் நூல் உருவம் பெறாதது ஒரு குறையாகும்.

அடுத்த கவிஞராக சொல்வது என்றால் எருக்கலப்பிட்டியை சேர்ந்த, ஏலவே ஈழத்து சிறுகதைத் துறையில் கால் பதிந்திருந்த எம்.எச். எம்.நிஃமத். இவர் 2000 களின் ஆரம்பத்தில் 'வா ஊருக்கு போவோம்' என்ற தலைப்பில் ஒரு நெடுங்கவிதை கொண்ட ஒரு நெடுங்கவிதை கொண்ட ஒரு தொகுப்பை புத்தளத்தில் வெளியிட்டார். அந்த நெடுங்கவிதையில் வட - புலத்து முஸ்லிம்கள் விரட்டப்பட்ட வரலாற்றின் சோகத்தை மிக தர்க்க பூர்வமாக வெளிப்படுத்தி இருந்தார்... அக்கவிதை நூல் அன்றைய நிலையில் மிக கவனத்தை ஈர்த்தது. அத்தொகுப்பை தொடர்ந்து 'வாழ்ந்திடுவோம் வா' எனும் அவரது தொகுப்பிலும் நிலம் இழந்தவர்களின் குரல் தொடர்ந்து ஒலித்தது.

நிஃமத் தனது இழப்புகள் எனும் கவிதையில் வடபுலத்து மண்ணின் வாசனையையும் வாழ்வியலையும் எடுத்துச் சொல்லி, அவை தம்மை இழந்த எங்கள் சோகத்தை விரட்டியவர்களும் புரிந்துக் காள்ளவில்லை. தஞ்சம் புகுந்த முகாம்களும் புரிந்துகொள்ளவில்லை எனச் சொல்லி அக்கவிதையை இப்படியான பெருமூச்சுடன் முடிக்கிறார்.

**'ம்....ஹம்....**
**அந்த முகங்களுக்கும்**
**இந்த முகாம்களுக்கும்**
**எங்கள் இழப்புகள்**
**எங்கே தெரியப்போகின்றன....?"**

சமீப காலமாக அவரது இலக்கிய பங்களிப்பு மௌனத்திற்கு ஆளாகி இருப்பது ஏனோ தெரியவில்லை.

அடுத்த கவிஞர் முல்லை முஸ்ரிபா ஆவார். முல்லைத்தீவு பிரதேசத்தை பிறப்பிடமாய் கொண்டு புத்தளத்தில் அகதியாய் தஞ்சம் புகுந்தவர். இவரை பொறுத்தவரை வட-புலத்து முஸ்லம்கள் மத்தியில் புதிதாய் உருவாக்கம் பெற்ற கவிஞர்களில், 80களுக்கு பின்னான ஈழத்து தமிழ்க்கவிதைப் போக்கோடு இணைத்து பேசும் வகையில் தன்னை வளர்ந்து கொண்டவர். வட-புலத்து முஸ்லிம்கள் விரட்டியடிக்கப்பட்ட துயரத்தை தனக்கான தனித்துவ மொழியில் நுண்ணியமான முறையில் தன் கவிதைகளில் வெளிப்படுத்தி வருபவர். அத்தோடு இன விடுதலைப் போராட்டத்தில் முஸ்லிம்களின் பங்கு பற்றிய ஒரு பிரக்ஞை ஏற்படும் வகையில் எழுதியவர். இருத்தலுக்கான அழைப்பு, அவாவுறும் நிலம், சொல்லில் உறைந்து போதல் ஆகிய முக்கிய கவிதைத் தொகுப்புக்களை தந்தவர். தன் நூல்களுக்கு தேசிய சாகித்திய மற்றும் பிரதேச சாகித்திய, கொடகே போன்ற விருதுகளை பெற்றவர். முல்லை முஸ்ரிபாவின் கவிதை பலவற்றில் நிலம் இழந்தவர்களின் குரல் ஆழமான, அழுத்தமான மொழியில் பதித்திருப்பது மூலம், அவர் ஈழத்து இடப்பெயர்வின் முக்கிய கவிஞர்களில் ஒருவராக வெளிப்படுகிறார்.

(இன்னும் வரும்)



# முஸ்லிம் தேசியக் கூட்டமைப்பு என்ற பொறிக்குள் மக்கள் காங்கிரஸ் சிக்குமா?

**ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் முஸ்லிம் சமூகத்தை வழிநடாத்துவதற்குப் பதிலாக, அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரின் வேகமான வளர்ச்சியை எவ்வாறு தடுக்க முடியுமென்ற தடுப்பு வழிமுறைகள் தொடர்பிலேயேதமது காலத்தை கழித்து வருகின்றனர். அமைச்சர் ரிஷாட்டுக்கு எதிரானவர்களையெல்லாம் உள்வாங்கி தாம் இழந்த செல்வாக்கை இவர்கள் மூலம் நிரப்ப முடியுமென்ற அதீத நம்பிக்கையில் அவர்கள் செயற்பட்டு வருகின்றனர். இந்த விடயத்தில் மு கா தலைமை எவ்வளவு இறங்கிப் போக முடியுமோ அவ்வளவு இறங்கிச் சென்று தமது காரியங்களை சாதிக்க நினைக்கின்றது.**

சுஜப் எம் காசிம்

அண்மைக்காலமாக நமது முஸ்லிம் அரசியல் வானில் முஸ்லிம் தேசியக் கூட்டமைப்பின் அவசியம் குறித்து பரவலாகப் பேசப்பட்டு வருகின்றது. இந்தக் கூட்டமைப்புடன் மக்கள் காங்கிரசையும் அதன் தலைவர் அமைச்சர் ரிஷாட் பதியுதீனையும் தொடர்புபடுத்தி பல்வேறு தரப்பினராலும் கருத்துக்கள் முன்வைக்கப்பட்டு வருகின்றன.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசுக்குள் ஏற்பட்டுள்ள உட்கட்சிப்பூசல் விரிவடைந்து, உக்கிரமடைந்து, சக்களத்தி சண்டையாகி, அது இப்போது உச்சநிலையை அடைந்திருப்பதால் அக்கட்சியில் அதிருப்தியுற்ற முக்கியஸ்தர்கள் முஸ்லிம் தேசியக் கூட்டமைப்பின் உருவாக்கம் தொடர்பில் தற்போது வலுவாகப்பேசி வருகின்றனர்..

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசிலிருந்து வெளியேற்றப்பட்ட அக்கட்சியின் தவிசாளர் பஷீர் சேகுதாவூத், அக்கட்சியின் செயலாளர் நாயகம் ஹஸனலியையும் இணைத்துக் கொண்டு மு கா தவிர்ந்த ஏனைய முஸ்லிம் கட்சிகளின் தலைவர்கள், மு காவில் இருக்கும் அதிருப்தியாளர்கள் மற்றும் இன்னும் சில முக்கியஸ்தர்களையும் உள்வாங்கி முஸ்லிம் கூட்டமைப்பொன்றை உருவாக்குவதற்கான முயற்சிகளில் ஈடுபடுவதாக ஊடகங்கள் வாயிலாக அறிகின்றோம்.

இதற்கு முன்னதாக வேதாந்தி என அழைக்கப்படும் முஸ்லிம் அரசியலின் முன்னோடியாக கருதப்படும் முஸ்லிம் காங்கிரஸின் ஸ்தாபகத் தவிசாளர் சேகு இஸ்ஸதீன்,எழுதிய முஸ்லிம் சமஷ்டி, முஸ்லிம் சுயாட்சி ஆகிய இரு நூல்களிலும் முஸ்லிம் தேசியக் கூட்டமைப்பின் அவசியத்தை வலியுறுத்தி இருந்தார். சில அரசியல் கூட்டங்களிலும் அவர் இக்கருத்தை தொடர்ந்தும் முன்வைத்தும் வருகிறார்.

உத்தேச கூட்டமைப்புக்குள் ஹக்கீம் தவிர்ந்த முஸ்லிம் காங்கிரஸின் முக்கியஸ்தர்கள், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவர் ரிஷாட் பதியுதீன், தேசிய காங்கிரஸ் தலைவர் அதாவுல்லாஹ், பிரதியமைச்சர் ஹிஸ்புல்லாஹ் மற்றும் முன்னாள் தவிசாளர் பஷீர், முன்னாள் செயலாளர் நாயகம் ஹஸனலி ஆகியோரையும் உள்ளடக்கி இந்தக் கூட்டமைப்பு உருவாக்கப்பட வேண்டுமென சுட்டிக்காட்டி வரும் சேகு இஸ்ஸதீன் வடக்குக் கிழக்கு இணைந்த மாநிலத்தில் முஸ்லிம்களுக்கென தனியான, ஏறத்தாழ சமனான அதிகாரங்களைக் கொண்ட ஒரு பிராந்தியத்தைப் பெற்றுக் கொள்ள இந்தக் கூட்டமைப்பின் மூலமே சாத்தியமாகுமென்ற கருத்தையும் தொட்டுக்காட்டியிருந்தார்.

**உத்தேச கூட்டமைப்புக்குள் ஹக்கீம் தவிர்ந்த முஸ்லிம் காங்கிரஸின் முக்கியஸ்தர்கள், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவர் ரிஷாட் பதியுதீன், தேசிய காங்கிரஸ் தலைவர் அதாவுல்லாஹ், பிரதியமைச்சர் ஹிஸ்புல்லாஹ் மற்றும் முன்னாள் தவிசாளர் பஷீர், முன்னாள் செயலாளர் நாயகம் ஹஸனலிஆகியோரையும் உள்ளடக்கி இந்தக் கூட்டமைப்பு உருவாக்கப்பட வேண்டுமென சுட்டிக்காட்டி வரும் சேகு இஸ்ஸதீன் வடக்குக் கிழக்கு இணைந்த மாநிலத்தில் முஸ்லிமகளுக்கென தனியான, ஏறத்தாழ சமனான அதிகாரங்களைக் கொண்ட ஒரு பிராந்தியத்தைப் பெற்றுக் கொள்ள இந்தக் கூட்டமைப்பின் மூலமே சாத்தியமாகுமென்ற கருத்தையும் அவர் தொட்டுக்காடியிருந்தார்.**

பஷீர்சேகுதாவூத் தற்போது உருவாக்கப்போவதாக கூறப்படும் புதிய கூட்டமைப்பு, முஸ்லிம் காங்கிரஸ் தவிர்ந்ததாகவும் சேகு இஸ்ஸதீனின் கருத்தியலுக்கு அப்பாற்பட்டதாகவும் இருப்பது போலவே புலப்படுகின்றது.

இதே வேளை கிழக்கின் எழுச்சி என்ற கோஷத்தை நீண்ட காலமாக முன்வைத்து முஸ்லிம் காங்கிரஸ் தலைவருக்கெதிரான கருத்துக்களை முன்வைத்து வரும் கிழக்கின் எழுச்சியென்ற அமைப்பு இப்போது முஸ்லிம் கூட்டமைப்பு தொடர்பில் ஒரு புதுக் கருத்தை முன்வைத்துள்ளது.

கிழக்கு, வடக்கு முஸ்லிம் தலைமைகளை உள்ளடக்கியதான ஒரு தலைமைத்துவ சபையை உருவாக்கி கிழக்குக்கு அதாவுல்லாவையும், வடக்குக்கு ரிஷாத்தையும் தலைவராக்கி தலைமைத்துவ சபையின் செயலாளராக ஹஸனலியை நியமிப்பதற்கான பேச்சுவார்த்தைகள் வெற்றியடைந்து வருவதாக அந்த இயக்கம் நம்பிக்கை வெளியிட்டுள்ளது.

இவ்வாறானநிலையில் முஸ்லிம் தேசியக் கூட்டமைப்பு தொடர்பில் அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் உத்தியோக பூர்வமான எந்தவிதமான நிலைப்பாடுகளும் இதுவரை வெளிவராத நிலையில், முகநூல்களிலும், பத்தி எழுத்துக்களிலும் முஸ்லிம் கூட்டமைப்பில் மக்கள் காங்கிரஸின் வகிபாகம் தொடர்பில் மனம் போன போன போக்கில்கருத்துக்களும், செய்திகளும் வெளியிடப்படுகின்றன.

அகில இலங்கை மக்கள் காங்கிரஸைப் பொறுத்தவரையில் அக்கட்சி பூச்சியத்திலிருந்து ஆரம்பிக்கப்பட்டு பல்வேறு தியாகங்களின் மத்தியிலே வளர்த்தெடுக்கப்பட்டஒன்று.

நாட்டின் முஸ்லிம் பிரதேசங்களில் கணிசமான ஆதரவையும் செல்வாக்கையும் அக்கட்சியின் தலைவர் அமைச்சர் ரிஷாட் பதியுதீன் பெற்றிருக்கின்றார், பெற்றும்வருகின்றார்.

இக்கட்சியானது ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸிற்கு சவாலாக உருவெடுத்துள்ள காரணத்தினாலே தான் அக்கட்சியின் வளர்ச்சியையும் தலைவரின் செயற்பாடுகளையும் முடக்கும் வகையிலே முஸ்லிம் காங்கிரஸ்காரர்கள் போலி முகநூல்வாயிலாக தலைவர் தொடர்பான ஊடகப் பயங்கரவாதத்தில் ஈடுபட்டுள்ளனர். அதே போன்று முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் உட்பட அக்கட்சியின் உயர்மட்டப் பிரமுகர்கள் பகிரங்க மேடைகளிலே அமைச்சர் ரிஷாட் எதிர்ப்புப் புராணங்களை பாடி வருகின்றனர். ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் முஸ்லிம் சமூகத்தை வழிநடாத்துவதற்குப் பதிலாக, அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரின் வேகமான வளர்ச்சியை எவ்வாறு தடுக்க முடியுமென்ற தடுப்பு வழிமுறைகள் தொடர்பிலேயேதமது காலத்தை கழித்து வருகின்றனர். அமைச்சர் ரிஷாட்டுக்கு எதிரானவர்களையெல்லாம் உள்வாங்கி தாம் இழந்த செல்வாக்கை இவர்கள் மூலம் நிரப்ப முடியுமென்ற அதீத நம்பிக்கையில் அவர்கள் செயற்பட்டு வருகின்றனர். இந்த விடயத்தில் மு கா தலைமை எவ்வளவு இறங்கிப்போக முடியுமோ அவ்வளவு இறங்கிச் சென்று தமது காரியங்களை சாதிக்க நினைக்கின்றது.

முஸ்லிம் தேசியக்கூட்டமைப்புக்குள் முண்டியடித்துக் கொண்டு செல்ல வேண்டிய அவசியமும் அவசரமும் அகில இலங்கை மக்கள் காங்கிரஸுக்கு இப்போதைக்கு தேவையற்ற ஒன்றென்பதே எனது சொந்த கருத்தாகும். (இதனை கட்சித் தலைவரினதோ, கட்சியினதோ கருத்தாக எவரும் கொள்ள வேண்டாம்)

வன்னியில் உதித்த மக்கள் காங்கிரஸ், கிழக்கிலே அம்பாறை , மட்டக்களப்பு, திருகோணமலை ஆகிய மாவட்டங்களில் கால் ஊன்றி வளர்ச்சி பெற்றுவருவதை மழுங்கடிக்கும் வகையிலும் அதனை தட்டி மடக்கும் வகையிலும் இவ்வாறான முயற்சியொன்றைக் கொண்டுவந்து மக்கள் காங்கிரஸை மட்டுப்படுத்தும் நோக்கில்முஸ்லிம் தேசியக் கூட்டமைப்புக்குள் மக்கள் காங்கிரஸை உள்ளீர்க்க செய்ய வைப்பதற்கான இன்னொரு தந்திரமாகவும் இதனை நாம் கருத முடியும்.

**தேசியப்பட்டியலுக்காக போராடித் தோற்றுப் போனவர்கள் உருவாக்க நினைக்கும், தேசியக் கூட்டமைப்புக்குள் அகில இலங்கை மக்கள் காங்கிரஸும் இணைந்து முஸ்லிம் சமூகத்திற்கு எத்தைகைய பணிகளை மேற்கொள்ள முடியுமென்பதில் சரியான தெளிவில்லை.அத்துடன் வடக்கும், கிழக்கும் பிரிந்திருக்க வேண்டுமென்ற நிலைப்பாட்டிலிருக்கும் அதாவுல்லா, ஹிஸ்புல்லாஹ், ரிஷாட் ஆகியோர் வடக்கும் கிழக்கும் இணைந்திருக்க வேண்டுமா? பிரிந்திருக்க வேண்டுமா? என்ற தங்களது உறுதியான நிலைப்பாட்டை இன்னும் தெளிவுபடுத்தாத பஷீருடனும், ஹஸனலியுடனும் எவ்வாறு ஒரே கூட்டமைப்புக்குள் இணைந்து பணியாற்றப் போகின்றார்கள் என்பதும் புரியாத புதிராகவே இருக்கின்றது.**

அம்பாறை முஸ்லிம் பிரதேசங்களில் மக்கள் காங்கிரஸின் செயற்பாடுகளை நீர்த்துப் போகச் செய்யும் வகையிலான ஒரு யுக்தியாகவும் இதனை நாம் கருத முடியும்.தேசியப்பட்டியலுக்காக போராடித் தோற்றுப் போனவர்கள் உருவாக்க நினைக்கும், தேசியக் கூட்டமைப்புக்குள் அகில இலங்கை மக்கள் காங்கிரஸும் இணைந்து முஸ்லிம் சமூகத்திற்கு எத்தைகைய பணிகளை மேற்கொள்ள முடியுமென்பதில் சரியான தெளிவில்லை.அத்துடன் வடக்கும், கிழக்கும் பிரிந்திருக்க வேண்டுமென்ற நிலைப்பாட்டிலிருக்கும் அதாவுல்லா, ஹிஸ்புல்லாஹ், ரிஷாட் ஆகியோர் வடக்கும் கிழக்கும் இணைந்திருக்க வேண்டுமா? பிரிந்திருக்க வேண்டுமா? என்ற தங்களது உறுதியான நிலைப்பாட்டை இன்னும் தெளிவுபடுத்தாத பஷீருடனும், ஹஸனலியுடனும் எவ்வாறு ஒரே கூட்டமைப்புக்குள் இணைந்து பணியாற்றப் போகின்றார்கள் என்பதும் புரியாத புதிராகவே இருக்கின்றது.

அதே போன்று மகிந்தவின் விசுவாசியான அதாவுல்லாவும் நல்லாட்சியிலிருக்கும் ஏனையவர்களும் எவ்வாறு பணியாற்றப் போகின்றார்களோ? இவைகளெல்லாம் சிந்தனைக்குரிய வினாக்களே.

எந்தக் கூட்டமைப்பில் மக்கள் காங்கிரஸ் அங்கம் வகிப்பதென்றாலும் அது முறையான வகையில் கலந்தாலோசனை

(11 ஆம் பக்கம் பார்க்க)




## ஹொனரபல்(கௌரவ) என். எச். எம். அப்துல் காதர்



முஸ்லிம்களின் முன்னோடிகளில் ஒருவரான என். எச். எம். அப்துல்காதர் 1879 பெப்ரவரி 10இல் பிறந்தார். என். டி. எச். அப்துல் கபூரின் சகோதரரான அப்துல் காதர், வெஸ்லி கல்லூரியில் கல்வியில் காட்டிய ஆர்வம் இவரைச் சாதனை வீரராக்கியது.

பழைமைக்கும், புதுமைக்குமிடையில் பாலமமைத்த என். எச். எம். அப்துல் காதர், பழைமையில் ஊறித் திளைத்த சமுதாயத்தில் புதுமை காண விளைந்தார். இளம். - சமுதாயத்தை ஒன்றுபடுத்தி முன்னேற்றப்பாதைக்கு இட்டுச் செல்வதில் ஆர்வம் காட்டினார். சட்டக்கல்வி பயின்று 1907இல் உயர் நீதிமன்றத்தின் முதல் சோனக சட்டத்தரணியாக பதவிப்பிரமாணம் செய்து சட்டத்தரணியாகவும், பகிரங்க நொத்தாரிஸாகவும் பணி புரிந்து பேரும் புகழும் பெற்றதுடன் சமூகப் பணிகளுக்காகத் தன்னை அர்ப்பணித்துக் கொண்டார்.

''மக்கள் நலனே மேல்; நாட்டின் உயர்வே பெருமை'' எனக் கூறிய என்.எச்.எம். அப்துல்காதர், கொழும்பு மாநகர சபையில் முப்பது வருடங்கள் தொடர்ச்சியாக சேவை செய்து மக்கள் நலன் காத்தார். ஆங்கிலேய ஆட்சி நடந்த அக்காலத்தில் பல்வேறு காரணங்களால் தலைநகரின் முதற் பிரஜையாகத் திகழும் வாய்ப்பை இழந்தாலும் தான் நழுவ விட்ட அப்பதவியை தனக்குப்பின் தனது புதல்வன் ஜாபிர் அப்துல் காதர் பெற்றுக் கொண்டமை குறிப்பிடத்தக்கது.

1915இல் இலங்கை சட்ட நிரூபண சபை உறுப்பினராகப் பணியாற்றிய இவர், முஸ்லிம்கள் சம்பந்தப்பட்ட எல்லா விடயங்களிலும், நடு நாயகராக விளங்கினார். நாவன்மையும், முதிர்ந்த அனுபவமும், ஆழ்ந்த அறிவும், வாதத்திறனும், நேர்மையும், உண்மைக்காக வாதாடும்தன்மையும், உறுதியான உள்ளமும், கம்பீரமான தோற்றமும் கொண்ட மாமனிதராக என்.எச்.எம். அப்துல் காதரைக் காண்கிறோம்.

இலங்கையருக்கு வாக்குரிமை பெற்றுத்தரும் போராட்டத்தில் முஸ்லிம்களை வழிநடத்தும் பொறுப்பை மேற்கொண்ட இவரது நடவடிக்கைகள் நன்றியோடு நினைவு கூரப்பட வேண்டியதாகும். வழக்கறிஞர் என்ற ரீதியில் தான் பெற்ற நீதிமன்ற அனுபவங்கள் மூலம் விவாக, விவாகரத்துத் துறைகளில் முஸ்லிம்கள் எதிர்நோக்கிய பிரச்சினைகளை நேரில் கண்டு அது சம்பந்தமான விடயங்களை விதந்துரைத்ததன் விளைவே இலங்கை முஸ்லிம்களின் விவாக, விவாகரத்துச் சட்டங்கள் எனலாம்.

முஸ்லிம் பள்ளிவாசல்கள், தர்மஸ்தாபன நிதி, வக்பு சட்டங்களின் உருவாக்கப்பணிகளில் ஆரம்பகட்ட நடவடிக்கைகளை மேற்கொண்டார். 1927இல் அகில இலங்கை முஸ்லிம் லீக் வாலிப முன்னணியின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட அட்வகேட் அப்துல் காதர், 1930இல் இலங்கையில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கினால் அகதிகளாக்கப்பட்ட முஸ்லிம்களை நேரில் சென்று பார்வையிட்டு அகதிகளாக்கப்பட்ட குடும்பங்களுக்கு நிவாரணப் பணிகளில் ஈடுபட்ட இவரது வரலாறு பதிவாகியுள்ளது.

தனது சகோதரரான கொடை வள்ளல் அப்துல் கபூரோடு இங்கிலாந்து சென்று உலகப் புகழ்பெற்ற 'வெம்பில்' பொருட்காட்சிச் சாலையில் இலங்கையின் பெறுமதி மிக்க மாணிக்கக் கற்களைக் காட்சிப்படுத்திய போது 5ஆம் ஜோர்ஜ் மன்னனை நேரில் சந்தித்துப் பேசிய பெருமை இவருக்குண்டு.

இலங்கை சட்ட சபையில் நேர்மையாக, நற்பண்புகளோடு 15 வருடங்கள் பணி புரிந்தமைக்காக அவரது பெயருக்கு முன்னால் ஹொனரபல்(கௌரவ) என்ற புகழ் நாமம் சேர்க்கப்பட்டது. தலைநகரில் கம்பீரமாகக் காட்சியளிக்கும் மருதானைப் பள்ளிவாசலுக்காக சட்ட நிரூபண சபையில் சட்டமியற்றிய பெருமை ஹொனரபல் அப்துல் காதரைச் சாரும். அதிபர் ரீ.பி. ஜாயா அவர்களது காலத்தில் இவர் ஸாஹிராவின் முகாமையாளராகக் கடமையாற்றினார். முஸ்லிம் பாடசாலைகள் அன்று அரசாங்கத்தின் சிறு உதவியையே பெற்றுக் கொண்டிருந்தன. முஸ்லிம்களின் கல்வி வளர்ச்சிக்காக 150,000 ரூபாவை அரசாங்கம் ஒதுக்க வேண்டுமென அப்துல் காதர் சட்டவாக்க சபையில் பிரேரணை கொண்டு வந்தார். கே.பாலசிங்கம் அதனை ஆமோதித்தார். ஆனால் அப்பிரேரணை தோல்வியுற்றது. எனினும் மருதானை ஸாஹிராக் கல்லூரிக்கு மட்டும் 25,000 ரூபாவைப் பெற்றுக் கொள்வதில் அட்வகேட் அப்துல் காதருக்கு வெற்றி கிடைத்தது.

**''ஹொனரபல் அப்துல் காதர் 1917 சிலோன் இன்டிபென்டனுக்கு அளித்த பேட்டியொன்றில் ''முஸ்லிம்கள் மத்தியில் விரும்பத்தகாததொரு தர்மமுறை நிலவுகின்றது அதுதான் கந்தூரிச் சாப்பாடு அதனால் நன்மையான பயன் ஏற்படப் போவதில்லை உண்மையில் ஏழைகளுக்கு உணவளித்தால் அது தர்மமாகும். ஆனால் இந்தச் சாப்பாடுகளில் நடப்பதென்ன? என்னைப் போன்ற பணக்காதர்களே உபசரிக்கப்படு கிறார்கள்.**

**ஏழைகளுக்கு உணவளிப்பதை நான் எள்ளளவேனும் மறுத்துப் பேசவில்லை. ஆனால் தர்மம் என்று சொல்லிக் கொள்ளும் இந்தக் கந்தூரிச் சாப்பாடுகளில் சிறிதளவேனும் கவனிக்கப்படாதவர்கள் இந்த ஏழைகள் என்பது எனது நேரடி அனுபவமாகும். ஆகவே இச்சாப்பாடுகளுக்குச் செலவழிக்கும் பணத்தில் ஒரு பகுதியைக் கல்வி போன்ற சிறந்த நோக்கங்களுக்காகச் செலவிடலாம். அதுவே நன்மையாகும்.''**

என தனது அனுபவத்தை அறிவுரையாகச் சமுதாயத்திற்குக் கூறியுள்ளார்.

12 ஆண் மக்களதும் ஒரு பெண் மகளதும் தந்தையாகிய ஹொனரபல் என்.எச்.எம். அப்துல் காதர் அறுவை சிகிச்சை யொன்றின்பின் 1938 ஒகஸ்ட் 30 இல் இவ்வுலகை விட்டுப் பிரிந்தார். எல்லாம் வல்ல அல்லாஹ் அன்னவரைப் பொருந்திக் கொள்வானாக!

# சைட்டம் விவகாரம் தொடர்பில் வைத்தியசபை மேன்முறையீடு



சைட்டம் நிறுவன விவகாரம் தொடர்பில் இலங்கை வைத்திய சபை, உயர் நீதிமன்றத்தில் மேன்முறையீடு செய்துள்ளது.

மாலபே வைத்தியக் கல்லூரி மாணவர்கள் சிலர் தாக்கல் செய்த மனுவை விசாரித்த மேன்முறையீட்டு நீதிமன்றம், குறித்த கல்லூரிக்கு மருத்துவப் பட்டத்தை வழங்க அனுமதியுள்ளது என அண்மையில் தீர்ப்பளித்தது.

மேலும், அங்கு பட்டத்தை நிறைவு செய்தவர்களை வைத்தியர்களாக இணைத்துக் கொள்ள நடவடிக்கை எடுக்குமாறும் நீதிமன்றம் உத்தரவிட்டது. இந்தநிலையில், இந்த தீர்ப்பு குறித்து இலங்கை வைத்திய சபை உயர்நீதிமன்றத்தில் மேன்முறையீடு செய்துள்ளது.

இதன்போது நேற்றைய தினம் இடம்பெற்ற பல்கலைக்கழக மாணவர்கள் மேற்கொண்ட ஆர்ப்பாட்ட பேரணியின் மீது கண்ணீர்ப்புகை மற்றும் நீர்த்தாரைப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஆர்ப்பாட்டக்காரர்கள் தடுப்புக் கம்பிகளை உடைத்துக் கொண்டு, ஜனாதிபதி செயலகத்திற்குள் அத்துமீறி நுழைய முற்பட்டதையடுத்தே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக, தெரியவருகிறது. அத்துடன், ஆர்ப்பாட்டப் பேரணி காரணமாக கொழும்பு லோட்டஸ்ட் வீதி சிறிது நேரத்திற்கு மூடப்பட்டிருந்தது.

இதற்கு எதிர்ப்பு தெரிவித்து அழகியல் கற்கை பல்கலைக்கழகத்திற்கு அருகில் இருந்து கொழும்புக் கோட்டை புகையிரத நிலையம் வரை பேரணியாக சென்றனர்.

அத்தோடு இப்போராட்டம் குறித்து அரச நிறுவனங்கள் மற்றும் வைத்தியசாலைகளில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள, சைட்டம் தனியார் மருத்துவ கல்லூரிக்கு எதிரான பதாகைகளை அகற்றுமாறு பொலிஸ்மா அதிபரிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. அதுதொடர்பிலான கோரிக்கை அடங்கிய கடிதத்தை, சைட்டம் தனியார் மருத்துவ கல்லூரி மாணவர்களின் பெற்றோர், பொலிஸ் தலைமையகத்தில் நேற்று கையளித்தமையும் குறிப்பிடத்தக்கது.

# மகளிர் தின நிகழ்வு இன்று

(அஸ்லம் எஸ்.மௌலானா)

சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் கல்முனைப் பிராந்திய பணிமனை ஒழுங்கு செய்துள்ள விசேட நிகழ்வு இன்று செவ்வாய்க்கிழமை காலை ஒன்பது மணி தொடக்கம் கல்முனை கிறிஸ்ட்ரா இல்லத்தில் நடைபெறவிருக்கிறது. பணிமனையின் இணைப்பாளர் இஸ்ஸதீன் லத்தீப் தலைமையில் இடம்பெறவுள்ள இந்நிகழ்வில் கிழக்கு மாகாண கலாசார அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் வி.சிவப்பிரியா பிரதம அதிதியாக கலந்து கொள்ளவுள்ளார்.

இதன்போது முக்கிய சில தொனிப் பொருள்களில் வட்ட மேசை கலந்துரையாடல்களும் இடம்பெறவுள்ளன. இந்த விசேட மகளிர் தின நிகழ்வுக்கு சுமார் இருநூறு பெண் போராளர்கள் அழைக்கப்பட்டுள்ளனர்.

# ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் பிற்போடப்பட்டது

(ஏறாவூர் ஏ.எச்.ஏ. ஹுஸைன்)

மட்டக்களப்பு - ஏறாவூர் நகர பிரதேச செயலகப் பிரிவுக்கான பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் தவிர்க்க முடியாத காரணங்களால் பிற்போடப்பட்டுள்ளதாக பிரதேச செயலாளர் எஸ்.எல். முஹம்மத் ஹனிபா தெரிவித்தார்.

ஏறாவூர் நகர பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் இன்று பிற்பகல் 2.30 மணிக்கு இடம்பெறவிருந்த மேற்படி கூட்டம் வியாழக்கிழமை (16) காலை 9.30 மணிக்கு இடம்பெறும்.

வழமை போன்று பிரதேச அரசியல்வாதிகள், அதிகாரிகள் உட்பட கூட்டுத்தாபன மற்றும் திணைக்களத் தலைவர்களும் இக் கூட்டத்தில் கலந்துகொள்ளுவார்கள்.

# தரமற்ற தீப்பெட்டிகளை தயாரித்த தொழிற்சாலைகளுக்கு சீல் வைப்பு



இலங்கை கட்டளைகள் நிறுவனத்தின் தர நிர்ணய சான்றிதழ் பெறாது தயாரிக்கப்பட்ட, சுமார் 95 இலட்சம் ரூபாய் பெறுமதியான, 1,590,000 தரமற்ற தீப்பெட்டிகளை, கண்டியின் இரு வேறு தொழிற்சாலைகளிலிருந்து கைப்பற்றியுள்ளதாக, நுகர்வோர் அதிகார சபையின் உதவிப் பணிப்பாளர் ஒருவர் தெரிவித்தார்.

பேராதனை, அலதெனிய பிரதேசத்திலுள்ள தீப்பெட்டித் தொழிற்சாலையிலிருந்து எஸ்.எல்.எஸ். தரச் சான்றிதழ் அற்ற 720 தீப்பெட்டிகளைக் கொண்ட 2,000 பொதிகள் கைப்பற்றப்பட்டுள்ளன. இப்பொதிகளில், 1,440,000 சிறிய தீப்பெட்டிகள் இருந்ததாக அவர் மேலும் தெரிவித்தார். அவற்றின் சந்தைப்பெறுமதி 8,640,000 ரூபாய் என மதிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை. கண்டி - பல்லேகலையிலுள்ள தீப்பெட்டித் தொழிற்சாலையிலிருந்து, 9 இலட்சம் ரூபாய் பெறுமதியான 150,000 தீப்பெட்டிகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

இது தொடர்பில் கைத்தொழில் வர்த்தக அமைச்சர் ரிஷாட் பதியுதீன் கருத்துத் தெரிவித்த போது,நுகர்வோரின் நன்மை கருதி அநேகமான பொருட்கள் தரச்சான்றிதழ் அனுமதி பெற்ற பின்னரே தயாரிக்கப்பட வேண்டுமென்பதில் நுகர்வோர் அதிகார சபை உறுதியாக உள்ளது. நுகர்வோர் பாதுகாப்பு அதிகாரசபையின் சட்ட விதி முறைகளை மீறி தரச்சான்றிதழ் பெறாது உற்பத்தி செய்யப்படும் பொருட்களைக் கண்டுபிடித்து உரிமையாளர்களுக்கெதிராக தீவிர சட்ட நடவடிக்கை எடுக்குமாறு பணித்துள்ளோம் என்றார்.நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபையின் தலைவர் ஹஸித திலகரத்ன கருத்து தெரிவிக்கும் போது,சட்டத்தை மீறிய தீப்பட்டி உரிமையாளர்களுக்கு எதிராக உரிய சட்ட நடவடிக்கை எடுக்கவுள்ளதாக தெரிவித்தார்.



வெலிகம அல்-கலம் பாலர் பாடசாலையில் ஏற்பாடு செய்யப்பட்ட போசாக்கு உணவுத் திட்டத்தின் கீழ் பெற்றோரின் அனுசரணையுடன் சிறுவர்களுக்கு காலை உணவு வழங்கப்பட்டது. பாடசாலைசிறுவர்கள் போசாக்கு உணவுகளை உண்பதைப் படங்களில் காணலாம். (எம்.ஏ. ஹபீபுர் ரஹ்மான் வெலிகம)

# தமிழ் மொழிமூல கலை நிறுவனங்கள் பதிவு செய்ய நடமாடும் சேவை



(ஐ.எம்.ஷம்தான். அஹமட் ஸிறாஜ் இஸ்ஸதீன்)

கலாசார அமைச்சின் கருப்பொருள் திட்டத்திற்கமைவாக காலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் அம்பாறை மாவட்டத்திலுள்ள தமிழ் மொழி மூல கலாசார கலை நிறுவனங்களை பதிவு செய்வதற்கான நடமாடும் சேவையொன்று அக்கரைப்பற்று கலாசார மத்திய நிலையத்தில் இடம்பெற்றது.

இந் நடமாடும் சேவையில் அக்கரைப்பற்று, ஆலையடிவேம்பு, திருக்கோயில், பொத்துவில் அட்டாளைச்சேனை, இறக்காமம் போன்ற பிரதேச செயலகப்பிரிவுக்குட்பட்ட கிராமங்களில் நடைமுறையிலுள்ள தமிழ் மொழி மூல கலை மன்றங்கள் மற்றும் கலை நிறுவனங்களின் ஆவணங்கள் பரீட்சிக் கப்பட்டு இந்த நடமாடும் சேவை மூலம் பதிவு செய்யப்பட்டன. மேலும் அம்பாறை மாவட்டத்தில் கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் நடாத்தப்பட்ட நடமாடும் சேவை மூலம் சுமார் 74 தமிழ் மொழி மூல கலை நிறுவனங்களும் கலை மன்றங்களும் பதிவு செய்யப்பட்டுள்ளதாக மாவட்ட கலாசார உத்தியோகத்தர் ரி.எம்.றிம்ஸான் தெரிவித்தார்.

இந்நடமாடும் சேவையில் கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் உத்தியோகத்தர்களான எஸ்.தனசாந், எஸ்.நேசன், உட்பட அம்பாறை மாவட்டத்திலுள்ள பிரதேச செயலகங்களில் கடமை புரியும் கலாசார உத்தயோகத்தர்கள், காலாசார அபிவிருத்தி உத்தியோகத்

# கல்விநிலை ஆய்வுக்கொத்தை உடன் அனுப்ப வேண்டுகோள்

(யு.எல்.முஸம்மில் குருநாகல்)

குருநாகல் மாவட்ட தமிழ் மொழிப் பாடசாலைகளின் கல்வி நிலை பற்றிய ஆய்வு ஒன்றை மேற்கொண்டு நடவடிக்கைகள் எடுக்கும் நோக்குடன் பாடசாலைகளுக்கு அனுப்பப்பட்ட கேள்விக் கொத்தை இதுவரை பூரணப்படுத்தி அனுப்பாத பாடசாலைகள் அவற்றை உடன் நிரப்பி அனுப்புமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றார்கள்.

மேற்படி கேள்விக் கொத்தை பூரணப் படுத்தி ஜனவரி 20ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்குமாறு கோரி 2016 டிசம்பர் மாதம் அக்கேள்விக் கொத்து குருநாகல் மாவட்ட சகல தமிழ் மொழிப் பாடசாலைகளுக்கும் அனுப்பப்பட்டன. இது தொடர்பாக இரண்டு கடிதங்கள் அனுப்பப்பட்ட போதும் சில பாடசாலைகள் பாராமுகமாக இருக்கின்றார்கள் இது மிகவும் கவலைக்குரிய விடயமாகும்.

அகில இலங்கை முஸ்லிம் லீக் வாலிப முன்னணிகள் சம்மேளனத்தின் தேசிய தலைவரும் குருநாகல் மாவட்ட முஸ்லிம் சமூக நல கல்வி அபிவிருத்தி ஒன்றியத்தின் கல்வி உபகுழுத் தலைவருமான கலாநிதி பீ.எம்.பாரூக்கிடம் குருநாகல் மாவட்ட கல்வி ஆய்வு அறிக்கையின் தற்போதைய நிலை பற்றி வினவியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

பல சிரமங்களுக்கு மத்தியில் அனுபவம் வாய்ந்த பல துறைசார் அதிகாரிகளைக் கொண்டு தயாரிக்கப்பட்ட இக்கேள்விக் கொத்தின் மூலம் பெறப்படும் தகவல்களைக் கொண்டு தயாரிக்கப்படவிருக்கும் ஆய்வு அறிக்கையை நிறைவு படுத்துவதில் பெரும் தடையும் கால தாமதமும் ஏற்பட்டுள்ளது. அதனால் சமூக நலன் கருதி பாடசாலை அதிபர்கள் இவ்விடயத்தில் தம்முடன் ஒத்துழைக்க வேண்டும் என்றார்.

# ஆளுமை மிக்க ஆசானை இழந்துவிட்டோம்!

## இராஜாங்க அமைச்சர் ஹிஸ்புல்லாஹ் அனுதாபம்



ஜாமியா நளீமியா கலாபீடத்தின் சிரேஷ்ட விரிவுரையாளர் உஷ்தாத் ஹைருல் பஷர் நளீமியின் இழப்பு முஸ்லிம் சமூகத்துக்கு ஈடு செய்ய முடியாத பேரிழப்பாகும். அதே வேளை, ஆளுமை மிக்க சிறந்த ஆசானை முஸ்லிம் சமூகம் இழந்துள்ளது என புனர்வாழ்வு மற்றும் மீள்குடியேற்ற இராஜாங்க அமைச்சர் எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லாஹ் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அனுதாபச் செய்தியில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது,

ஜாமியா நளீமியா கலாபீடத்தின் முதலாவது தொகுதி பட்டதாரியாக வெளியேறி, அங்கு சிரேஷ்ட விரிவுரையாளராகவும், உதவிப் பணிப்பாளராகவும் தனது வாழ்நாளை அர்ப்பணித்த உஷ்தாத் ஹைருல் பஷர் நளீமியின் ஜனாஸா செய்தி கேட்டு மிகவும் கவலையடைந்தேன்.

மாணவர்களது அன்பை பெற்ற சிறந்த ஆசானாகவும், வழிகாட்டியாகவும், ஆளுமை மிக்க நிர்வாகியாகவும், நல்ல மனிதராகவும் சமூகத்தால் இனங்காணப்பட்ட இவர் ஜாமியா நளீமியா ஊடாக சமூகத்துக்கு அரும்பெரும் சேவையாற்றிய மாமனிதர். அவரது இழப்பினால் வாடும் குடும்பத்தினருக்கும், அவரிடம் கற்ற ஆயிரக்கணக்கான மாணவர்களுக்கும் எனது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றேன்- எனக்குறிப்பிட்டுள்ளார்.

# தனியார் பஸ் வண்டி மீது கல்லெறி தாக்குதல்

(திகாமடுல்ல நிருபர்)

கொழும்பிலிருந்து மட்டக்களப்பினூடாக அக்கறைப்பற்றை நோக்கி பயணித்த (அல் ராஷித்) தனியார் பஸ் வண்டி கடந்த சனிக்கிழமை அதிகாலை சம்மாந்துறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட காரைதீவில் வைத்து கல்லெறி தாக்குதலுக்குள்ளானது.

இத் தாக்குதலினால் இடது பக்க இரண்டு கண்ணாடிகள் சேதமடைந்துள்ளதுடன் கல்வீச்சுக் காரணமாக பாரிய சத்தத்துடன் கண்ணாடிகள் வெடித்துச் சிதறின.இதனால் பயணிகளில் சிலர் சிறு காயங்களுக்குள்ளாகினர். இந்த பஸ்ஸில் ஆண், பெண், சிறுவர்கள், கைக்குழந்தைகள் எனப் பலர் பயணித்தனர். அக்கரைப்பற்று மட்டக்களப்பினூடாக கொழும்பு இரு வழிப் பாதை பயணத்தில் தனியார் பஸ் உரிமையாளர்களுக்கிடையில் ஏற்பட்டு வரும் தீவிர தொழில் போட்டியினால் பயணிகளின் உயிர்களுக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது.

தொடர்ச்சியாக நடை பெற்றுவரும் இத் தாக்குதல்களினால் அச்சமடைந்துள்ள பொது மக்கள் இப் பாதையூடாக பயணிப்பதை தவிர்த்து வருகின்றனர்.பஸ்கள் எவ்வகையிலாவது பாதிக்கப்படும் போது பஸ் உரிமையாளர்களுக்கு இன்சூரன்ஸ் மூலம் நஷ்டஈடு கிடைக்கும் ஆனால் பாதிக்கப்படும் பொது மக்களுக்கு எவ்வித நஷ்டஈடும் கிடைப்பதில்லை என பயணிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

# வடமாகாண பட்டதாரிகளுக்கு ஆசிரியர் நியமனம்





(யாழ் பாறுக் ஷிஹான்)

வடமாகாண பட்டதாரிகள் 549 பேருக்கும், 480 ஆசிரியர் கலாசாலை மாணவர்களுக்கும் ஆசிரியர் நியமனம் வழங்கப்பட்டது.வடமாகாண ஆசிரியர் சேவையில் பட்டதாரிகளையும், ஆசிரியர் கலாசாலை ஆசிரியர்களையும் வடமாகாண ஆசிரியர் சேவையில் உள்ளீர்ப்பு செய்வதற்கான நியமனம் வழங்கும் நிகழ்வு நேற்று யாழ். இந்து மகளிர் கல்லூரியில் வடமாகாண பிரதம செயலாளர் அ.பத்திநாதன் தலைமையில் நடைபெற்றது. இதன்போது 549 பட்டதாரிகளுக்கும் 480 ஆசிரியர் கலாசாலை ஆசிரியர்களுக்கும் நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

இதில் வடமாகாண சபையின் அவைத் தலைவர் சி.வி.கே சிவஞானம்,மற்றும் கல்வி அமைச்சர் த.குருகுலராஜா,ஆகியோர்கள் கலந்து கொண்டு இவ் நியமனங்களை வழங்கி வைத்தனர். இங்கு வடமாகாண ஆளுநரின் செயலாளர் இளங்கோவன், மற்றும் கல்வி அமைச்சின் செயலாளர் ரவீந்திரன் மற்றும் கல்விப்பணிப்பாளர் உதயகுமார், மற்றும் மாகாண சபை உறுப்பினர்கள் வலயக்கல்விப் பணிப்பாளர்கள், ஆசிரியர் கலாசாலை ஆசிரியர்கள் பலரும் கலந்துகொண்டனர்.

# சர்வதேச நுகர்வோர் உரிமைகள் தினம்; தாமரைத் தடாகத்தில் பிரதான நிகழ்வு

உலக நுகர்வோர் உரிமைகள் தினம் இவ்வருடம் டிஜிட்டல் யுகத்தில் நுகர்வோர் உரிமை என்ற கருப்பொருளில் கொழும்பு தாமரைத் தடாக அரங்கில் நாளை 3 மணிக்கு கொண்டாடப்படவுள்ளது.

கைத்தொழில் மற்றும் வணிக அமைச்சின் கீழ் பாவனையாளர் அதிகார சபையினால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ள இந் நிகழ்வில் அமைச்சர் ரிஷாட் பதியுதீனின் அழைப்பின் பேரில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பிரதம அதிதியாகக் கலந்துகொள்கிறார். அதிதிகளாக தொலைத்தொடர்பாடல் மற்றும் டிஜிட்டல் உட்கட்டமைப்பு அமைச்சர் ஹரின் பெர்ணாண்டோவும் கைத்தொழில் மற்றும் வணிக இராஜாங்க அமைச்சர் சம்பிக்க பிரேமதாசவும் கலந்துகொள்வதாக பாவனையாளர் அதிகாரசபையின் தலைவர் ஹஸித திலகரத்ன தெரிவித்தார்.

# பிரேமதாஸ கொலை

## பிரபாகரனின் பிழையான தீர்மானம்

எம்.ஏ. முஹம்மட் உவைஸ்

சிங்கள தொலைக்காட்சி ஒன்றுக்கு முன்னாள் அமைச்சரும், புலிகள் இயக்க தளபதிகளில் ஒருவருமான கருணா அம்மான் வழங்கிய செவ்வியின் முழு விவரம்

(நேற்றைய தொடர்)



**கே: உங்களை புலிகள் இயக்கத்தில் இருந்து பிரித்தது ரணில் விக்கிரமசிங்க என்று பிரபலமாகப் பேசப்படுகின்றது. அது உண்மையா?**

**ப:** அது பிழை.யுத்த நிறுத்த காலத்தில் புலிகளுக்கும் அரசுக்குமிடையில் வெளிநாடுகளில் இடம்பெற்ற பேசசுவார்த்தைகளில் நானும் கலந்துகொண்டேன். ஆனால்,ஒரு நாள்கூட நான் அவரைச் சந்தித்தது இல்லை.

பேச்சுக்களின்போது சமஷ்டி அடிப்படையில் தீர்வை வழங்குவதற்கு பிரதமர் ரணில் விக்ரமசிங்க உடன்பட்டார். அந்த இணக்கப்பாட்டில் அரச சார்பில் ஜீ.எல்.பீரிஸும் புலிகளின் சார்பில் அன்டன் பாலசிங்கமும் கையெழுத்திட்டனர்.பிரபாகரன் அதை ஏற்கவில்லை. இதனால்தான் எனக்கும் பிரபாகரனுக்கும் இடையில் பிரச்சினை தோன்றியது.

அந்த ஒப்பந்தத்தை கொண்டு போய்க் கொடுப்பதற்கு அன்டன் பாலசிங்கம் பயந்தார்.நான் லண்டன் போகிறேன்.நீங்கள் கொண்டு போய்க் கொடுங்கள் என்று அவர் என்னிடம் தந்துவிட்டுப் போய்விட்டார்.நான்தான் கொண்டு போய் பிரபாகரனிடம் கொடுத்தேன்.

உண்மையில்,புலிகளுக்கு அதில் விருப்பம் இருக்கவில்லை. நான்தான் கட்டாயப்படுத்தி புலிகள் தரப்பில் கையெழுத்திட வைத்தேன்.பிறகுதான் அன்டன் பாலசிங்கம் கையெழுத்திட்டார்.அந்த ஆவணத்தை பிரபாகரனிடன் கொண்டு போய்க் கொடுத்ததும் அவர் கிழித்து வீசினார்.நாம் துரோகம் செய்துவிட்டதாகக் கூறினார்.

ஆனால்,நான்தான் கட்டாயப் படுத்தி அன்டன் பாலசிங்கத்தை கையெழுத்துப் போட வைத்தேன் என்று சிலர் பிரபாகரனிடம் போட்டுக் கொடுத்தனர்.

பிறகு மத்திய குழுவைக் கூட்டி பிரபாகரன் எனக்கு ஏசினார். இது தொடர்பில் அன்டன் பாலசிங்கத்திடம்தான் கேட்க வேண்டும் என்று நான் சொன்னேன். மறுநாள் நான் மட்டக்களப்புக்குச் சென்றுவிட்டேன்.

**கே: நீங்கள் இலங்கைக்கு வந்து மஹிந்தவுக்கு உதவுவதற்கு ஏதாவது நிபந்தனை விதித்தீர்களா?**

**ப:** உண்மையில் இந்த போரால் அதிகமான தமிழர்கள் இறந்துகொண்டு போனார்கள். இது நிறுத்தப்பட வேண்டுமென்றால் போர் முடிவுக்கு கொண்டு வரப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டில் நான் இருந்தேன்.அப்போது தமிழர்கள் என்னை துரோகிகள் என்றே அழைத்தனர்.இப்போதுதான் அவர்களுக்கு உண்மை விளங்கியுள்ளது.

பிரபாகரன் அப்போதே அந்த ஒஸ்லோ உடன்படிக்கையை ஏற்று வந்திருந்தால் முள்ளிவாய்க்கால் உள்ளிட்ட பேரவலத்தைத் தடுத்து இருக்கலாம்.

**கே: மஹிந்தவின் அழைப்பை ஏற்பதற்கு ஏதாவது நிபந்தனைகள் முன்வைத்தீர்களா?**

**ப:** நிபந்தனைகள் எவற்றையும் முன்வைக்கவில்லை.ஒரேயொரு கோரிக்கையை முன்வைத்தேன். யுத்தம் முடிந்த பிறகு தமிழருக்கு தீர்வு ஒன்றைக் கொடுக்க வேண்டும் என்று கேட்டேன்.கோட்டப்பே மஹிந்தவுக்கு தொலைபேசி அழைப்பை எடுத்து இதைக் கூறினார்.

மாகாண சபைத் தேர்தலின் ஊடாக தமிழருக்கு உதவுவதாகவும் முதலமைச்சர் பதவியை தமிழருக்கே வழங்குவதாகவும் மஹிந்த உறுதியளித்தார். அதன்பிறகே நான் இலங்கை வந்தேன்.

மஹிந்த கூறியதுபோல் செய்தார்.கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் தமிழருக்கு நான்கு ஆசனங்களே கிடைத்தன.முஸ்லிம்களுக்கு அதைவிட அதிகம் கிடைத்தது. இருந்ததும்,தமிழர் ஒருவருக்கே முதலமைச்சர் பதவியை மஹிந்த வழங்கினார்.

**கே: இலங்கை வந்த பிறகு உங்களின் செயற்பாடுகள் எவ்வாறு அமைந்தன? யுத்த வெற்றிக்கு நீங்கள் எந்த வகையில் உதவினீர்கள்?**

**ப:** அதிகமான செயற்பாடுகளில் ஈடுபட்டேன்.அவை ரகசியங்கள்.நாட்டின் பாதுகாப்பு-நலன் போன்றவற்றைக் கருத்தில் கொண்டு அவற்றை வெளியில் சொல்ல முடியாது.

**கே: உங்கள் தலைமையிலான ஆயுதக் குழு இராணுவத்துடன் இணைந்து புலிகளுக்கு எதிராகத் தாக்குதல் நடத்தியதாக சொல்லப்படுகிறதே?**

**ப:** நாங்கள் புலிகள் இயக்கத்தில் இருந்து பிரிந்து வந்ததும் அதிகமான எனது ஆதரவாளர்களை அதாவது என்னுடன் வந்த கிழக்கு மாகாண புலி உறுப்பினர்களை பிரபாகரனின் புலிகள் கொன்றனர். இதனால் எனது ஆட்கள் பாதுகாப்பின்றி இருந்தனர்.

அவர்களின் உயிரைக் காப்பாற்றுவதற்காக இராணுவத்துடன் இணைந்து செயற்படுமாறு நான் கூறினேன். அவர்களும் அவ்வாறே செய்தனர். அவர்களுக்கு சம்பளமும் வழங்கப்பட்டது. அவர்கள் ஆயுதக் குழுவாக இல்லாமல் இராணுவம் போன்றே செயற்பட்டனர்.

**கே: இராணுவ உயர் அதிகாரிகள் டென்சில் கோப்பேக்கடுவை மற்றும் விஜய விமலரத்ன போன்றவர்களின் கொலையின் பின்னணியில் முன்னாள் ஜனாதிபதி பிரேமதாஸா இருந்தார் என்று சொல்லப்படுகிறதே?**

**ப:** அது பொய். பிரேமதாஸ நல்ல தலைவர். அவர் இல்லையென்றால் இந்திய இராணுவம் இப்போதும் இங்கு இருந்திருக்கும். அவர்கள் திருகோணமலையைப் பிடித்திருப்பார்கள். அவர்தான் இந்திய இராணுவத்தை விரட்டினார்.

இந்த இரண்டு உயர் அதிகாரிகளும் கொல்லப்பட்டமை ஒரு தற்செயல் நிகழ்வாகும். ஒரு தீவில் இருந்து யாழ்ப்பாணத்தில் இருந்த புலிகள் மீது தாக்குதல் நடத்துவதற்கு இராணுவம் திட்டமிட்டிருந்தது. அந்தச் சந்தர்ப்பத்தில் வீதியில் வந்த இராணுவ ஜீப் மீது புலிகள் தாக்குதல் நடத்தினர்.

அப்போது அந்த ஜீப்பில் இவர்கள் இருவரும் இருந்தனர், கொல்லப்பட்டனர்.உண்மையில், புலிகள் இவர்கள் இருக்கின்றார்கள் என்று அறிந்து இந்தத் தாக்குதலை நடத்தவில்லை. வழமை போல் இராணுவ வாகனம் ஒன்றின்மீது தாக்குதல் நடத்தினார்கள். அதில் இவர்கள் இருவரும் இருந்தமை பிறகுதான் எங்களுக்குத் தெரிந்தது.

**கே: பிரேமதாஸா மட்டக்களப்பு கிரானிலும் வெலிஓயாவிலும் புலிகளுக்கு ஆயுதங்கள் அனுப்பி வைத்தார் என்று இராணுவ அதிகாரி கமால் குணரத்ன வெளியிட்டுள்ள புத்தகத்தில் குறிப்பிட்டுள்ளார். இது உண்மையா?**

**ப:** இது உண்மை. அவர் ஆயுதங்கள் மாத்திரமன்றி பணமும் தந்தார். இதைப் பிழையாகப் பார்க்கத் தேவையில்லை. இவ்வாறு தந்தமைக்கு ஒரு காரணம். உண்டு.

பிரேமதாசா ஆட்சிக்கு வந்ததும் இந்திய இராணுவத்தை விரட்டுவதற்குத் திட்டமிட்டார். உடனடியாக நாட்டை விட்டு வெளியேறுமாறு உத்தரவிட்டார். இதனால் அவர்கள் அதை விரும்பாது தமிழ் இளைஞர்களைக் கொண்டு தமிழ் தேசிய இராணுவம் என்ற ஓர் ஆயுதக் குழுவை உருவாக்கினர்.அதில் 20 ஆயிரம் பேர்வரை இணைந்துகொண்டனர்.

தெற்கில் ஜேவிபி பிரச்சினை இருந்ததால் இவர்களை அடக்கும் வல்லமை பிரேமதாஸாவிடம் இருக்கவில்லை. இதனால் இவர்களை அடக்குவதற்காகவே பிரேமதாசா எமக்கு ஆயுதங்களையும் பணத்தையும் வழங்கினார்.

இந்திய இராணுவம் இருந்தபோது புலிகளின் பலம் குறைந்தே இருந்தது. 2800 உறுப்பினர்கள் மாத்திரமே இருந்தனர். பிரேமதாசா எமக்கு ஆயுதங்கள் வழங்கிய பின்னர் மூன்று மாதங்களுக்குள் மேலும் மூவாயிரம் பேரை இணைத்து எம்மால் பயிற்சி வழங்க முடிந்தது. இவர்களைக் கொண்டே தமிழ் தேசிய இராணுவத்தை நாம் கட்டுப்படுத்தினோம். இதற்கு பிரேமதாஸாவே சக்தி வழங்கினார்.

**கே: அப்படி இருந்தும், ஏன் பிரேமதாசாவை கொலை செய்தீர்கள்?**

**ப:** இது பிரபாகரனின் பிழையான தீர்மானம்.உண்மையில், பிரேமதாசாவைப் பயன்படுத்துவதற்கு பிரபாகரனுக்கு மூளை இருக்கவில்லை. முட்டாள்தனமாக அவர் பிரேமதாசாவை கொலை செய்தார். நாட்டை அபிவிருத்தி செய்ய வேண்டும் என்பதே பிரேமதாசாவின் திட்டம்.அதற்காகவே அவர் புலிகளுக்கு உதவி செய்தார்.

பிரபாகரன் மூளையை பயன்படுத்தி இருந்தால் பிரேமதாசாவை நன்றாக பாவித்திருக்கலாம் அவரிடமிருந்து அதிக நன்மைகளை பெற்றிருக்கலாம்.

**கே: லலித் அத்துலத் முதலியை கொலை செய்தது யார்?**

**ப:** புலிகள்தான். இந்த நாட்டின் தலைமைத்துவத்தைப் பலவீனப்படுத்தி அதனூடாக தாம் பலமடைய வேண்டும் என்பதே பிரபாகரனின் திட்டமாக இருந்தது. இதனால்தான் அவர் பிரேமதாசா, காமினி திஸாநாயக்க மற்றும் லலித் அத்துலத் முதலி ஆகியோரை கொலை செய்தார்.

**கே: ஒரு காலத்தில் உங்களுக்கு எதிராகப் போராடிய இராணுவ அதிகாரி ஜனக பெரேரா ஓய்வுபெற்று ஐக்கிய தேசிய கட்சியுடன் வடமத்திய மாகாண சபைத் தேர்தலில் போட்டியிட்ட சந்தர்ப்பத்தில் அவர் கொல்லப்பட்டார்.அவரை யார் கொன்றது?**

**ப:** அந்தச் சந்தர்ப்பத்தில் நான் புலிகள் அமைப்பில் இருந்து விலகி இருந்தேன். ஆனால்,அவர் புலிகளின் கொலைப் பட்டியலில் இருந்தார்.வெலிஓயா சண்டையின் போது அதிகமான பெண் புலிகள் கொல்லப்பட்டனர்.அந்தச் சண்டையை ஜனக பெரேராவின் தலைமையிலேயே படையினர் முன்னெடுத்தனர்.

இதனால் பிரபாகரன் அவர்மீது அதிக கோபம் கொண்டிருந்தார்.இவரை எப்படியாவது கொல்ல வேண்டும் என்று பிரபாகரன் அப்போது என்னிடம் கூறி இருந்தார். இதுதான் பிரபாகரன்.குறி வைத்தால் 20 வருடங்கள் கழித்தாவது கொல்வார்.வேறு ஆட்கள்போல் கோபத்தை அடக்குபவர் அல்ல அவர்.

**கே: புலிகள் ஆயுதங்கள் கொள்வனவு செய்வதற்கு பணம் எங்கிருந்து?**

**ப:** புலம்பெயர் தமிழர்களிடம் இருந்தே பெற்றோம்.10 லட்சத்துக்கு மேற்பட்டவர்கள் உள்ளனர்.அவர்களுள் அதிகமானவர்கள் பணக்காரர்கள் உள்ளனர். இருந்தும், அவர்கள் விருப்பத்துடன் பணம் கொடுத்ததில்லை. இப்போது அவர்கள் சந்தோசமாக உள்ளனர்.

அவர்கள் வெளியில் புலிகளுக்கு ஆதரவாகப் பேசினாலும் உள்ளத்தால் அவர்கள் ஆதரவு வழங்கவில்லை. புலிகள் அழிந்தமையையிட்டு அவர்கள் மகிழ்ச்சியடைகின்றனர். இன்று ஒரு தமிழர் வெளிநாடு சென்றால் நாளை பணம் கேட்டு புலிகள் அவர்களின் வீடு தேடிச் செல்வர். உக்ரைன் போன்ற நாடுகளில் இருந்தே ஆயுதங்களை வாங்கினோம்.

**கே: 2001 போர் நிறுத்த ஒப்பந்தம் புலிகளை பலவீனப்படுத்தியதா பலப்படுத்தியதா?**

**ப:** அந்தக் காலப் பகுதியை புலிகள் நன்கு பயன்படுத்தினர்.ஆயுத விநியோகங்கள் சீராக இருந்தன.அந்தக் காலப் பகுதியில்தான் புலிகள் அதிக ஆயுதங்களை வாங்கினர்.போர் உடன்படிக்கையில் புலிகளுக்கு சாதகமான சரத்துக்கள் இருந்தன. அதை இலங்கை ஆட்சியாளர்கள் கவனிக்கவில்லை.

அதில் ஒரு சரத்து உள்ளது.புலிகள் கடலில் மூன்று மைல் தொலைவிற்குச் சென்று மீன் பிடிக்க முடியும் என்று.புலிகள் ஏன் மீன் பிடிக்க வேண்டும் என்று இலங்கை ஆட்சியாளர் யோசிக்கவில்லை.

அடுத்தது ஒரு மாதத்துக்குள் புலிகள் உறுப்பினர் 100 பேர் நாடு பூராகவும் செல்லமுடியும்.அதேபோல், இரண்டு மாதங்களில் 200 பேரும் 3 மாதங்களில் 300 பேரும் வெளியில் செல்ல முடியும். மூன்று மாதங்களின் பின் எல்லா புலிகளும் எல்லா இடங்களுக்கும் செல்ல முடியும்.

அதன்பிறகுதான் புலிகள் எல்லா இடங்களுக்கும் வெடி பொருட்களையும் ஆயுதங்களையும் கொண்டு சென்றனர். அந்த ஒப்பந்தம் அதற்கு வழிவகுத்தது. புலிகள் கடலில் மீன்பிடிக்க முடியும் என்ற வாசகம் புலிகள் கடல் வழியாக ஆயுதம் கடத்துவதற்காகப் புகுத்தப்பட்டதாகும். அது புலிகளுக்கு வெற்றியளித்தது.

உண்மையில், அந்த ஒப்பந்தம் முழுமையாக புலிகளுக்கே சாதகமாக இருந்தது. அரசுக்கு அது சரியான பின்னடைவாகும். அந்தக் காலத்தில்தான் புலிகள் பெங்கொக் போன்ற இடங்களுக்குச் சென்று விமானம் ஓட்டும் பயிற்சியைப் பெற்றனர். அதன்பிறகுதான் விமானப் படையும் உருவானது.

**கே: நீங்கள் புலிகள் அமைப்பிலிருந்து விலகியதும் உங்களை கொழும்புக்கு அழைத்து வந்தவர் நாடாளுமன்ற உறுப்பினர் அலி சாகிர் மௌலானாவாகும். அவரின் இந்த உதவி எந்தவகையைச் சார்ந்தது?**

**ப:** மௌலானா என்பவர் எனது பாடசாலைக் கால நண்பர். நான் புலிகள் இயக்கத்தில் இருந்தபோதுகூட இருவரும் நட்பாகவே இருந்தோம்.அந்த நட்பின் அடிப்படையில் நான் கொழும்பு செல்வதற்கு அவரின் உதவியை நாடினேன்.

அவர் ஒரு நண்பராக இந்த உதவியைச் செய்தாரே தவிர புலிகளுக்கு எதிராகவோ அல்லது ஐக்கிய தேசிய கட்சிக்கு ஆதரவாகவோ இதைச் செய்யவில்லை. எனக்கு உதவி செய்ததன் காரணமாகவே அவர் எம்.பிப் பதவியை இழந்து பாதுகாப்புக்காக அமெரிக்காவுக்குச் சென்றார்.

நான் புலிகள் அமைப்பில் இருந்து விலகுவதாக அப்போதைய ஜனாதிபதி சந்திரிக்கா,அமைச்சர்கள் லக்ஸ்மன் கதிர்காமர் மற்றும் ஜெயராஜ் பெர்ணாண்டோபுள்ளே ஆகியோருக்குத் தகவல் கொடுத்தேன்.சந்திரிக்கா என்னை இராணுவத்திடம் ஒப்படைத்து பாதுகாப்பு வழங்கினார்.

**கே: நாடாளுமன்ற உறுப்பினர்கள் ரவிராஜ்,மஹேஸ்வரன் மற்றும் ஜோசப் பரராஜசிங்கம் போனவர்களின் கொலைக்கும் உங்களுக்கும் தொடர்பு உண்டா?**

**ப:** அப்போது நான் இந்தியாவில் இருந்தேன். இதுபற்றி எனக்கு எதுவும் தெரியாது.

**கே: பிரபாகரன் கொல்லப்பட்டது உண்மையா?**

**ப:** உண்மை. சம்பவ தினத்தன்று காலை மஹிந்த ராஜபக்ஸ எனக்கு தொலைபேசி அழைப்பு எடுத்து பிரபாகரன் கொல்லப்பட்டுவிட்டதாகச் சொன்னார். நந்திக்கடலுக்குச் சென்று அடையாளம் காணுமாறு என்னிடம் கூறினார். நான் சென்று அடையாளம் கண்டேன்.

அவர் பிரபாகரனேதான். 28 வருடங்கள் நான் அவருடன் இருந்திருக்கின்றேன். அதனால் என்னால் மிக இலகுவாக அவரை அடையாளம் காண முடிந்தது. ஆனால்,சிலர் பிரபாகரன் உயிருடன் உள்ளார் என்று கூறுகின்றனர். அது பொய்.

**கே: உங்களது புதிய கட்சி உருவாக்கம் பற்றி?**

**ப:** இது இரண்டு வருடங்களுக்கு முன் தீர்மானிக்கப்பட்டது.இப்போதுதான் அதற்கான காலம் கனிந்து வந்துள்ளது. தமிழர்கள் இப்போது தமிழ் தேசிய கூட்டமைப்புமீது அதிருப்தியில் உள்ளனர். கூட்டமைப்பு மக்களுக்கு வழங்கிய எந்தவொரு வாக்குறுதியும் இன்னும் நிறைவேற்றப்படவில்லை.

இந்த அரசுக்கு ஆதரவு வழங்குமாறு கூட்டமைப்பு தமிழர்களிடம் கோரியது. இந்த அரசின் ஊடாக தமிழர்களின் அனைத்துப் பிரச்சினைகளையும் தீர்த்துத் தருவோம் என்று அவர்கள் வாக்களித்தனர். தமிழர்களும் அதை நம்பி வாக்களித்தனர். எதுவும் நடக்கவில்லை.

கிழக்கு மாகாணத்தில்கூட தமிழ் முதலமைச்சர் ஒருவரே இருக்க

> **கே: அப்படி இருந்தும், ஏன் பிரேமதாஸவை கொலை செய்தீர்கள்?**
>
> **ப: இது பிரபாகரனின் பிழையான தீர்மானம். உண்மையில், பிரேமதாசாவைப் பயன்படுத்துவதற்கு பிரபாகரனுக்கு மூளை இருக்கவில்லை. முட்டாள்தனமாக அவர் பிரேமதாசாவை கொலை செய்தார். நாட்டை அபிவிருத்தி செய்ய வேண்டும் என்பதே பிரேமதாசாவின் திட்டம்.அதற்காகவே அவர் புலிகளுக்கு உதவி செய்தார்.**
>
> **பிரபாகரன் மூளையை பயன்படுத்தி இருந்தால் பிரேமதாசாவை நன்றாக பாவித்திருக்கலாம், அவரிடமிருந்து அதிக நன்மைகளை பெற்றிருக்கலாம்.**

வேண்டும். ஆனால், கூட்டமைப்பு அதை முஸ்லிம்களுக்கு விட்டுக்கொடுத்தது. முஸ்லிம்களிடம் அதிகமான அமைச்சர்கள் உள்ளனர். தமிழர்களிடம் இல்லை. கூட்டமைப்பு வெறுமனே அரசைப் பாதுகாத்துக்கொண்டு செல்கின்றது. இதனால் தமிழர்களுக்கு எந்த நன்மையும் இல்லை.

இப்போது தமிழருக்கு மாற்றுக் கட்சி ஒன்று அவசியம். அதற்கான தலைமைத்துவத்தை என்னால் வழங்க முடியும். இனவாதத்துடன் செல்ல முடியாது.மிதவாதமே தேவை. எனது கட்சி இனவாதக் கட்சி அல்ல. எழுக தமிழ் போன்ற நிகழ்வுகள் காலத்துக்குப் பொருந்தாதவை.அது இப்போது தேவை இல்லை.

**கே:மஹிந்தவின் நுகேகொடை கூட்ட மேடையில் நீங்களும் ஏறினீர்கள்.இது எந்த அடிப்படையில்?**

**ப:** முன்னாள் அமைச்சர் குமார வெல்கமகே என்னை அழைத்தார்.அந்த அழைப்பை ஏற்று அதில் கலந்துகொண்டேன். இதில் எந்தப் பிரச்சினையும் இல்லை.

**கே: அந்த மேடையில் இருந்தவர்கள் சமஷ்டி மற்றும் வடக்கு-கிழக்கு இணைப்புக்கு எதிரானவர்கள்.ஆனால்,நீங்கள் இந்த இரண்டையும் ஆதரிக்கின்றீர்கள். இதை நீங்கள் எப்படிப் பார்க்கின்றீர்கள்?**

**ப:** இது நல்லமுறையில் பேசப்பட வேண்டும். சிங்கள மக்களின் மனங்களை முதலில் வெல்ல வேண்டும். சிங்கள மக்களை பகைத்துக்கொண்டு இதைச் செய்ய முடியாது. இனவாதம் பேசி வெல்ல முடியாது. புலிக்கொடியை ஏந்தி வந்து எதைக்கேட்டாலும் சிங்கள மக்கள் பயப்படுவார்கள். நாம் அப்படிச் செய்ய முடியாது.

மக்களின் இடங்களை இராணுவம் பிடித்திருப்பது தவறுதான்.ஆனால்,அதை நல்லமுறையில் பேசிப் பெறலாம். மட்டக்களப்பில் இராணுவம் மக்களின் இடங்களை பிடித்து இருந்தபோது இராணுவ அதிகாரியுடன் பேசினேன். மக்கள் வாழ்வதற்கு வீடுகள் இல்லாமல் உள்ளனர். அரச காணியில் இராணுவம் இருக்கலாம் என்று கூறினேன்.

உடனே பிரச்சினை தீர்ந்தது. இப்போது அந்த இராணுவ முகாம் இருந்த இடத்தில் 200 குடும்பங்கள் வாழ்கின்றன. இப்படித்தான் பிரச்சினையைத் தீர்க்க வேண்டும். தமிழ் தேசிய கூட்டமைப்பு கூறுவதுபோல் வடக்கு-கிழக்கில் இருந்து இராணுவத்தை முழுமையாக அகற்ற முடியாது. நாட்டின் பாதுகாப்புக்காக இராணுவம் நாடு பூராகவும் இருக்க வேண்டும்.

**கே: எதிர்வரும் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் உங்களது கட்சி போட்டியிடுமா?**

**ப:** ஆம். இதில் ஒரு முக்கிய விடயம் ஒன்றைக் கூற வேண்டும். சிங்கள மக்கள் இந்தக் கட்சியை பிழையாகப் பார்க்கக் கூடாது. இது இனவாதக் கட்சி அல்ல. இதற்கு சிங்கள மக்கள் ஆதரவு வழங்க வேண்டும்.

**கே: முன்னாள் புலிகளும் இதில் இணைத்துக்கொள்ளப்படுவார்களா?**

**ப:** நிச்சயமாக. அவர்கள் அரசியலில் ஈடுபட விரும்பினால் நாம் அதற்கு இடம் கொடுக்க வேண்டும். அவர்கள் அரசியலில் நுழைவது நமக்குத்தான் நல்லது.

ஜே.வி.பியில் ஆயுதம் ஏந்திப் போராடியவர்கள் உள்ளனர். அதேபோல், தமிழ் தேசிய கூட்டமைப்பிலும் உள்ளனர். அது நல்ல விடயம். அப்போதுதான் ஆயுதக் கலாசாரம் ஒழிந்து ஜனநாயகம் மலரும். அதேபோல், முன்னாள் புலிகளும் உள்வாங்கப்பட வேண்டும்.

**கே: சுமந்திரனைக் கொலை செய்வதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டதாக கூறப்படுகிறது. அப்படியென்றால் இன்னும் புலிகள் உள்ளனரா?**

**ப:** இது பொய். வெறும் கட்டுக் கதை. சுமந்திரனால் இப்போது வடகிற்குச் செல்ல முடியாது. மக்கள் அவரை எதிர்க்கின்றனர். அவர் வடகிற்குச் செல்வதென்றால் பாதுகாப்பு தேவை.அப்போதுதான் அங்கு செல்ல முடியும்.இதனால்தான் இந்தக் கதை உருவாக்கப்பட்டது.

இது பாரதூரமானது. புனர்வாழ்வளிக்கப்பட்ட 12,000 புலி உறுப்பினர்களையும் சந்தேகத்துடன் பார்க்கும் நிலையை இது ஏற்படுத்தியுள்ளது.உண்மையில், இவர்களுக்கு மீண்டும் ஆயுதம் எந்த வேண்டிய தேவை இல்லை.

**கே: மஹிந்தவின் ஆட்சியில் உங்களுக்கு அதிக பாதுகாப்பு வழங்கப்பட்டது. அதிக இராணுவத்துடன் குண்டு துளைக்காத வாகனமும் வழங்கப்பட்டது. இப்போதும் அதே பாதுகாப்பு உள்ளதா?**

**ப:** இருக்கின்ற பாதுகாப்பு எனக்குப் போதும்.

**கே: உங்களுக்கு உயிரச்சுறுத்தல் இல்லையென்று நீங்கள் நினைக்கினீர்களா?**

**ப:** இருகின்றது. நான்தான் புலிகளின் கொலைப் பட்டியலில் முதலிடத்தில் இருக்கின்றேன். இருந்தாலும் எனக்கு பயமில்லை. யுத்த காலத்தில் என்னைத் துளைக்காத தோட்டாக்கள் இல்லை. எனது தற்போதைய தேவை எல்லாம் தமிழர்களுக்கு நல்ல தலைமைத்துவத்தை வழங்க வேண்டும் என்பதுதான்.

சிங்கள தலைவர்களுடன் சிநேகமுறையில் பேசி தமிழர்களின் பிரச்சினைகளைத் தீர்க்கும் ஆற்றல் என்னிடம் உண்டு. அரசியல் அனுபவம் எனக்கு உண்டு. 10 வருடங்கள் நாடாளுமன்றில் இருந்திருக்கிறேன். புதிய கட்சி ஒன்றை நவீனமுறையில் கொண்டு செல்லும் ஆற்றல் என்னிடம் உண்டு.

எனக்கு சர்வதேச மட்டத்திலும் தொடர்புகள் உண்டு. என்னைப்போல் பல அனுபவமும் திறமையும் உள்ள ஒருவர் கூட தமிழ் தேசிய கூட்டமைப்புக்குள் இல்லை.

**கே: உங்களது மனைவியும் பிள்ளையும் எங்கே இருக்கின்றனர்?**

**ப:** உயிர் அச்சுறுத்தல் இருப்பதால் அது பற்றிக் கூற விரும்பவில்லை.

**கே:அடுத்த நாடாளுமன்றத் தேர்தலில் நீங்கள் எங்கே போட்டியிடுவீர்கள்?**

**ப:** மட்டக்களப்பில்தான். இருந்தும், அப்போதைய சூழ்நிலைக்கு ஏற்ப முடிவெடுப்பேன், என்றார்.

(முற்றும்)

# 19 ஆண்டுகளுக்கு பின் பாக். இல் மக்கள் தொகை கணக்கெடுப்பு

## தவறான தகவலளித்தால் 6 மாத சிறை; 50 ஆயிரம் அபராதம்: பொதுமக்களுக்கு அரசு எச்சரிக்கை



பாகிஸ்தானில் வாழும் மக்கள் தொகையின் எண்ணிக்கை மற்றும் அவர்களின் வாழ்க்கை நிலை தொடர்பான தேசிய கணக்கெடுப்பு நாளை (15ஆம் திகதி) ஆரம்பமாகி இருகட்டங்களாக நடைபெறவிருக்கின்றது. இந்த பணியில் சுமார் 2 இலட்சம் இராணுவ வீரர்களும் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

பாகிஸ்தானில் 1998ஆம் ஆண்டு கடைசியாக நாடு தழுவிய ரீதியில் மக்கள் தொகை கணக்கெடுப்பு நடத்தப்பட்டது. அன்றைய நிலவரப்படி, 18 கோடி மக்கள் அங்கு வாழ்வதாக கண்டறியப்பட்டது.

அதன் பின்னர், இராணுவ ஆட்சி, ஜனநாயக ஆட்சி மீண்டும் ஜனநாயக ஆட்சி என்று மாறிமாறி அமைந்ததனால் ஐந்தாண்டுகளுக்கு ஒருமுறை நடத்தப்பட வேண்டிய மக்கள் தொகை கணக்கெடுப்பு கடந்த 19 ஆண்டுகளாக நடத்தப்படவில்லை.

இந்நிலையில், நாளை 15ஆம் திகதி தொடங்கி ஏப்ரல் 15ஆம் திகதி வரையிலும், ஏப்ரல் 25ஆம் திகதி தொடங்கி மே 25 வரையிலும் அங்கு நாடு தழுவிய அளவில் மக்கள் தொகை கணக்கெடுப்பு நடத்த உத்தரவிடப்பட்டுள்ளது. இதற்காக 185 கோடி ரூபா ஒதுக்கீடு செய்ய அரசு உத்தரவிட்டுள்ளது.

இந்த பணிக்கு ஒரு இலட்சத்து 18 ஆயிரத்து 918 அரசுப் பணியாளர்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். இவர்களுக்கு உதவியாகவும், துணையாகவும் சுமார் 2 இலட்சம் இராணுவ வீரர்கள் ஈடுபடுத்தப்படுவார்கள் என பாகிஸ்தான் தகவல் ஒளிபரப்புத்துறை அமைச்சகத்தின் செய்தி தொடர்பாளர் மர்ரியும் அவுரங்கசிப் தெரிவித்துள்ளார்.

இந்த கணக்கெடுப்பின்போது, தவறான தகவல்களை அளிக்கும் பொதுமக்களுக்கு ஆறுமாத சிறைவாசம் மற்றும் 50 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்படும் எனவும் அவர் எச்சரித்துள்ளார்.

சுதந்திரத்துக்கு பின்னர் நமது நாட்டில் 15 முறை மக்கள் தொகை கணக்கெடுப்பு நடைபெற்றுள்ளது. கடைசியாக, 2010 - 2011 ஆம் ஆண்டுக்கு இடையில் நடைபெற்ற கணக்கெடுப்பின்படி, இந்தியாவில் 121 கோடியே ஒரு இலட்சத்து 93 ஆயிரத்து 422 மக்கள் வசித்து வருவதாக கண்டறியப்பட்டது.

இந்நிலையில், பிரிட்டிஷ் ஆதிக்கத்தில் இருந்து 14-8-1947 அன்று விடுதலை பெற்ற பாகிஸ்தானில் நடத்தப்படும் ஆறாவது மக்கள் தொகை கணக்கெடுப்பு இது என்பது குறிப்பிடத்தக்கது.

# சிரிய குழந்தைகளுக்கு 2016 மோசமான ஆண்டு

## 652 குழந்தைகள் பலி: ஐ.நா. அறிக்கை



சிரியா போரில் சிக்கியுள்ள குழந்தைகளுக்கு, 2016 ஆம் ஆண்டு இதுவரை இல்லாத அளவில் மிக மோசமானதாக அமைந்துள்ளது என ஐ.நா சபையால் வெளியிடப்பட்ட தகவல்கள் தெரிவிக்கின்றன.

சிரியா போரில் 652இற்கும் மேற்பட்ட குழந்தைகள் உயிரிழந்துள்ளதாகவும், அதில் 255 குழந்தைகள் பாடசாலைகளிலும் அதற்கு அருகாமையில் இடம்பெற்ற தாக்குதல்களில் உயிரிழந்துள்ளதாகவும் ஐ.நாவின் குழந்தைகளுக்கான அமைப்பான யுனிசெப் தெரிவித்துள்ளது. மேலும் 647இற்கும் மேற்பட்ட குழந்தைகள் தாக்குதல்களின் போது படுகாயமடைந்துள்ளனர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

மேலும் பிற நூற்றுக்கணக்கான குழந்தைகள் நோயில் உயிரிழந்துள்ளனர் எனவும் ஆனால், போதிய மருத்துவ வசதிகள் இருந்திருந்தால் அவற்றைத் தடுத்திருக்க முடியும் எனவும் தெரிவிக்கின்றனர்.

சமீப காலங்களில், அதிகமான உயிர்களை காவுகொண்ட சிரிய உள்நாட்டு போரின் 6ஆவது ஆண்டு தினத்தின் சில தினங்களுக்கு முன்னர் இந்த அறிக்கை வெளியாகியுள்ளது.

# உலகச் செய்திகள்

## டிரம்பின் கொள்கையை மீறிய மகள் இவாங்கா



அமெரிக்க தயாரிப்பு பொருட்களையே வாங்குவோம் என்பதை தனது முக்கிய கொள்கையாக முழங்கிய அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் டிரம்பின் மகள் இவங்கா டிரம்ப், சீனாவிலிருந்து 53 டொன் அளவிலான சீனத் தயாரிப்பு பொருட்களை இறக்குமதி செய்துள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதியாக சமீபத்தில் பொறுப்பேற்ற டொனால்ட் டிரம்ப், தனது தேர்தல் பிரசாரத்தின் போது அமெரிக்கத் தயாரிப்பு பொருட்களையே அமெரிக்கர்கள் வாங்க வேண்டும் என முழங்கினார். அவரது வெற்றிக்கு இந்த முழக்கமும் ஒரு காரணமாக இருந்தது.

கொள்கை கோட்பாடு எல்லாம் மக்களுக்கு மட்டும்தான் குடும்பத்தினருக்கு கிடையாது என்கிற மரபின் படி டிரம்பின் மகள் இவாங்கா சீனாவிலிருந்து 53 டொன் அளவில் தன்னுடைய நிறுவனத்திற்கு தேவையான பொருட்களை இறக்குமதி செய்துள்ளார். இவை அனைத்தும் சீனத் தயாரிப்பு பொருட்கள் ஆகும்.

இவாங்கா டிரம்ப் அமெரிக்காவில் பெஷன் நிறுவனங்களை நடத்தி வருகின்றார். இதற்கான பொருட்களைத்தான் சீனாவிலிருந்து சுமார் எட்டு கென்டைனர்களில் இறக்குமதி செய்திருக்கிறார். மேலும், டிரம்ப் குடும்பத்தினர் நடத்தும் தொழில்களுக்கு தேவையான பல பொருட்கள் சீனா மற்றும் ஹொங்கொங் ஆகிய நாடுகளில் இருந்துதான் இறக்குமதி செய்யப்படுகிறது எனவும் தகவல் வெளியாகியுள்ளது.

ஆனால், அமெரிக்க நிறுவனங்கள் அமெரிக்கர்களுக்கு வழங்கும் வேலை வாய்ப்புகளை சீனா திருடி வருகிறது என டிரம்ப் தனது பிரசாரத்தின் போது தொடர்ந்து குற்றம்சாட்டி வந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## நாயின் தாயன்பு



அமெரிக்காவில் ஒகியோ மாகாணத்தில் தாயினால் ஒதுக்கப்பட்ட 3 புலிக்குட்டிகளை ஒரு நாய் பராமரிக்கும் அதிசய சம்பவம் நடந்துள்ளது.

அமெரிக்காவில் ஒகியோ மாகாணத்தில் உள்ள சின் சினாட்டியில் மிருகக் காட்சிசாலையிலுள்ள ஒரு மலேசிய புலி கடந்த மாதம் 3 குட்டிகளை ஈன்றது.

அதற்கு சிரா, படாரி, இஸ்சி என பெயரிட்டனர். இவை மூன்றும் பெண் குட்டிகளாகும். ஆனால், தனது குட்டிகளை தாய்ப்புலி ஏற்கவில்லை. வெறுத்து ஒதுக்கியது.

தாய் அன்புக்காக புலிக்குட்டிகள் ஏங்கின. எனவே புலிக்குட்டிகளை மிருக காட்சிசாலை ஊழியர் தனது வீட்டுக்கு தூக்கி சென்று புட்டிப் பால் கொடுத்து வளர்த்தார்.

அவரது வீட்டில் வளரும் 6 வயது அவுஸ்திரேலிய ஷெப்பர்ட் நாய் வளர்க்கிறார். பிளாக்கி என பெயரிடப்பட்ட அந்த ஆண் நாய் 3 புலிக்குட்டிகளையும் அன்புடன் பராமரித்து வருகிறது.

அந்த புலிக்குட்டிகளை தனது குட்டிகள் போன்று அன்புடன் அரவணைத்து பராமரித்து வருகிறது. இதனால் அன்பில் திளைத்திருக்கும் புலிக்குட்டிகள் நாயின் மீது ஏறி அமர்ந்து விளையாடி மகிழ்கின்றன. இதை பொதுமக்கள் ஆச்சரியத்துடன் பார்த்து செல்கின்றனர்.

## பொருளாதார நெருக்கடியில் சவூதி:

# டிரம்ப்பை சந்திக்க சவூதி பட்டத்து இளவரசர் அமெரிக்கா விரைவு



அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் டிரம்ப்பை சந்தித்து பொருளாதார நெருக்கடியிலிருந்து சவூதி அரேபியாவை விடுவிப்பது தொடர்பாக பேச்சு நடத்த சவூதியின் பட்டத்து இளவரசர் முஹம்மது-பின் சல்மான் நேற்று வொஷிங்டன் நகருக்கு புறப்பட்டு சென்றார்.

பொருளாதார நெருக்கடியால் தள்ளாட்டம் போட்டுவரும் சவூதி அரேபியாவை சரிவில் இருந்து மீட்கும் அரசின் புதிய பொருளாதார புனரமைப்பு திட்டத்துக்கு அந்நாட்டின் அமைச்சரவை கடந்த ஆண்டு ஏப்ரல் மாதம் ஒப்புதலளித்தது.

சர்வதேச சந்தையில் பெட்ரோலின் விலை தொடர்ந்து கடும்சரிவைச் சந்தித்து வருவதால் எண்ணெய் வளத்தை மட்டுமே நம்பியுள்ள சவூதி அரேபியா உள்ளிட்ட வளைகுடா நாடுகள் சமீபகாலமாக பொருளாதார மந்தநிலையை சந்தித்து வருகிறது.

இதற்கிடையில், சவூதி அரேபியாவில் வாழும் மக்களின் மின்சாரத்தேவை நாளுக்குநாள் அதிகரித்துக் கொண்டே வருகிறது. இந்த தேவையை நிறைவு செய்ய மசகு எண்ணெயை எரித்து மின்சாரம் தயாரிக்கப்படுவதால் அவ்வகையிலும் அந்நாடு பெரும் இழப்பை சந்தித்து வருகிறது.

இந்நிலையை மாற்ற, பல்வேறு பொருளாதார சிக்கனம் மற்றும் சீர்திருத்த நடவடிக்கைகளை எடுப்பது தொடர்பாக சவூதி மன்னர் முஹம்மது பின் சல்மான் தலைமையிலான நிபுணர்கள் குழு விரிவாக ஆலோசனை நடத்தியது. இதன் விளைவாக, அமைச்சரவையின் செலவினங்களில் ஒருபகுதியை குறைத்துக் கொள்ள முடிவு செய்யப்பட்டது.

கடந்த ஆண்டு டிசம்பர் மாதம் வெளியான தேசிய பட்ஜெட்டில் பல ஆண்டுகளுக்கு பின்னர் மின்சார கட்டணம் மற்றும் பெற்றோல் விலை உயர்த்தப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.

மேலும், வெளிநாட்டில் கடன் வாங்கும் நிலைக்கு சவூதி அரேபியா தள்ளப்பட்டுள்ளது. பல்வேறு சர்வதேச வங்கிகளில் இருந்து ரூ.60 ஆயிரம் கோடி கடன் கேட்டு அந்நாடு விண்ணப்பித்துள்ளது. கடனை வாங்கினால் தான் நாட்டை நடத்திச்செல்ல முடியும் என்ற நிலை ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில், பொருளாதார நெருக்கடியை சமாளிக்க சவுதி அரசுக்கு சொந்தமான அரம்கோ எண்ணெய் நிறுவனத்தின் பங்குகளை விற்க சவூதி பட்டத்து இளவரசரும், அந்நாட்டின் பாதுகாப்புத் துறை அமைச்சருமான முஹம்மது பின் சல்மான் கடந்த ஆண்டில் முடிவு செய்தார்.

ஜப்பானில் சவூதி மன்னர் சல்மான்

இந்நிலையில், சவூதி மன்னர் சல்மான் பின் அப்துல் அஜீஸ் தற்போது ஜப்பான், சீனா உள்ளிட்ட ஆசிய நாடுகளில் சுற்றுப் பயணம் செய்து அந்நாட்டின் பொருளாதாரச் சரிவை சமநிலைப்படுத்த பேச்சு நடத்தி வருகிறார். சவூதி இளவரசர்கள் 25 பேர் உட்பட சுமார் ஆயிரம் உயரதிகாரிகள் கொண்ட பெரிய குழுவும் அவருடன் சென்றுள்ளது.

இதைதொடர்ந்து, அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் டிரம்ப்பை சந்தித்து பொருளாதார நெருக்கடியிலிருந்து சவூதியை விடுவிப்பது தொடர்பாக பேச்சு நடத்த சவூதி பட்டத்து இளவரசர் முஹம்மது-பின் சல்மான் நேற்று வொஷிங்டன் நகருக்கு புறப்பட்டு சென்றார்.

அங்கு ஓரிரு நாட்கள் ஓய்வெடுக்கும் சவூதி இளவரசர் வரும் அமெரிக்க உயரதிகாரிகள், பல்வேறு துறைகளை சேர்ந்த அமெரிக்க அமைச்சகள் மற்றும் ஜனாதிபதி டிரம்ப்பை சந்தித்து தங்கள் நாட்டின் தொழில் முதலீடுகளை அதிகரிப்பது, அமெரிக்கா - சவூதி அரேபியா இடையிலான பல்வேறு தொடர்புகளை மேம்படுத்துவது ஆகியவை குறித்து விரிவாக ஆலோசனை நடத்துவார் என சவூதி அரசு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்காவுக்கு புறப்பட்டுச் செல்வதற்கு முன்னதாக, ரியாத் நகரில் நேற்றுமுன்தினம் சிட்டி குரூப் நிறுவனத்தின் தலைமை செயல் அதிகாரி மைக்கேல் கோர்பாட் இளவரசர் முஹம்மது-பின் சல்மானை சந்தித்து சவூதியில் முதலீட்டு வாய்ப்புகளை அதிகரிப்பது தொடர்பாக முக்கிய பேச்சுவார்த்தை நடத்தியதாகவும் அந்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பிரேசில் ஜனாதிபதி மாளிகையில் 'பேய்' நடமாட்டம்?

## பீதியில் ஜனாதிபதி வெளியேறினார்



பிரேசில் ஜனாதிபதி மாளிகையில் பேய் பீதியால் அங்கிருந்து ஜனாதிபதி மைக்கேல் டெமர் வெளியேறியிருப்பது அங்குள்ள அரசியல்வாதிகள் இடையே பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

பிரேசிலின் ஜனாதிபதியாக மைக்கேல் டெமர்(73) பதவி வகிக்கிறார். இவருக்கு முன்பு ஜனாதிபதி பதவி வகித்த டில்மா ரூசோப் ஊழல் வழக்கில் பதவி நீக்கம் செய்யப்பட்டார்.

எனவே அவருக்கு பதிலாக துணை ஜனாதிபதியாக இருந்த மைக்கேல் டெமர் ஜனாதிபதியாக நியமிக்கப்பட்டார். அதை தொடர்ந்து அவர் தலைநகர் பிரேசிலியாவில் 'அல்வோரதா அரண்மனை' எனப்படும் ஜனாதிபதி மாளிகையில் தங்கினார். அவருடன் மனைவி மர்சிலா (33) மற்றும் 7 வயது மகன் மைகேல் ஷின்போ ஆகியோரும் தங்கினர். இந்நிலையில், அங்கு அவருக்கு ஒரு வித்தியாசமான அனுபவம் ஏற்பட்டது.

இரவில் அவரால் நிம்மதியாக தூங்க முடியவில்லை. அதே போன்ற நிலைமைதான் அவருடைய மனைவி மர்சிலாவுக்கும், மகனுக்கும் ஏற்பட்டது. எனவே அங்கு பேய் நடமாட்டம் இருப்பதாக பீதியடைந்தார். ஆகவே அவர் ஒரு மந்திரவாதியை அழைத்து வந்து விசேஷ பூஜை நடத்தினார். இருந்தும் சகஜமான நிலை ஏற்படவில்லை.

எனவே, பீதியடைந்த அவர் ஜனாதிபதி மாளிகையிலிருந்து குடும்பத்துடன் வெளியேறினார். இதற்கு முன்பு தாம் துணை ஜனாதிபதியாக இருந்தபோது தங்கியிருந்த வீட்டில் குடிபுகுந்தார்.

ஜனாதிபதி மாளிகை மிகவும் ஆடம்பரமானது. பிரேசில் கட்டட வடிவமைப்பாளர் ஆஸ்கர் நியம்யரால் கனவு மாளிகையாக உருவாக்கப்பட்டது. அங்கு மிகப்பெரிய நீச்சல் குளம், கால்பந்து மைதானம், மருத்துவ மையம், மிகப்பெரிய வராந்தா போன்றவை உள்ளன, இருந்தும் பேய் பீதியால் அங்கிருந்து ஜனாதிபதி மைக்கேல் டெமர் வெளியேறியிருப்பது அங்குள்ள அரசியல்வாதிகள் இடையே பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

# மீனவர் படுகொலையை கண்டித்து இலங்கை தூதரகம் முற்றுகை

## சீமான் உட்பட 300 பேர் கைது



இராமேஸ்வரம் மீனவர் பிரிட்ஜோ இலங்கை கடற்படையால் சுட்டுக்கொல்லப்பட்டதற்கு கண்டனம் தெரிவித்து நாம் தமிழர் கட்சியினர் நுங்கம்பாக்கத்திலுள்ள இலங்கை தூதரகத்தை முற்றுகையிட்டு போராட்டம் நடத்தினர்.

நாம் தமிழர் கட்சி தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் தலைமையில் நடந்த இந்த போராட்டத்தில் கட்சியின் நிர்வாகிகள் அன்பு தென்னரசன், ராவணன், சிவக்குமார், செந்தில்குமார் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். போராட்டத்தில் இலங்கையை கண்டித்து கோஷங்கள் எழுப்பப்பட்டன. மத்தியிலுள்ள பா.ஜனதா அரசு தமிழக மீனவர் விவகாரத்தில் மௌனம் காப்பதாகவும், உடனடியாக மீனவர் பிரச்சினைக்கு தீர்வு காண வேண்டும் என்ற பதாகைகளையும் நாம் தமிழர் கட்சியினர் கையில் ஏந்தி இருந்தனர்.

போராட்டத்தில் ஈடுபட்ட சீமான் உள்ளிட்ட 300 பேர் கைது செய்யப்பட்டனர். இப்போராட்டம் குறித்து சீமான் அளித்த பேட்டி வருமாறு:-

தமிழக மீனவர் சுட்டுக் கொல்லப்பட்டது எதிர் பாராமல் நடந்த நிகழ்வு அல்ல. தமிழக மீனவர்கள் இது வரை 840 பேர் சுட்டுக் கொல்லப்பட்டு இருப்பதாக எம்.பி.க்கள் பாராளுமன்றத்திலேயே பதிவு செய்துள்ளனர். சிறிய நாடான இலங்கை எந்தவித பயமுமின்றி தமிழக மீனவர்களை சுட்டுக் கொல்வது தொடர்கிறது.

எல்லைத்தாண்டிய பயங்கரவாதம் என்பது இலங்கை கடற்படையினருக்கும் பொருந்தும். கச்சத்தீவு வரை எல்லைத் தாண்டி வந்து தமிழக மீனவர்களை இலங்கை கடற்படையினர் சுட்டுக் கொல்கிறார்கள்.

தற்போது மீனவர்களின் போராட்டத்தை முடிவுக்கு கொண்டு வர முயற்சி மேற்கொள்ளும் மத்திய அரசு மீனவர் பிரச்சினைகளை தீர்ப்பதற்கு எந்த முயற்சியும் மேற்கொள்ளவில்லை.

தமிழக மீனவர்களின் 138 படகுகள் இலங்கை கடற்படையால் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது. அதனை மீட்டு கொடுக்கவும் மத்திய அரசு நடவடிக்கை எடுக்கவில்லை. இது கண்டனத்திற்குரியது. மீனவர் பிரச்சினைக்கு உரிய தீர்வு காண கச்சத்தீவை உடனடியாக மீட்க வேண்டும். அப்போதுதான் தமிழக மீனவர்கள் நலன் பாதுகாக்கப்படும். - இவ்வாறு சீமான் தெரிவித்தார்.

## கிண்ணியாவில்...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

அதிகரித்தவண்ணமுள்ள நிலையில் கிண்ணியா வைத்தியசாலையின், இயலுமை, கொல்லளவு, தரம் அதனை முகங்கொடுக்கும் நிலையில் இல்லை. அங்கு உபகரணப்பற்றாக்குறை, இடப்பற்றாக்குறை வைத்தியர்கள், வைத்திய நிபுணர்கள் பற்றாக்குறை பாரியளவில் காணப்படுகின்றது.

மேலும் களத்தில் வேலை செய்யும் தன்னார்வ பணியாளர்கள் பணியிலிருந்து விலகிச்செல்லும் நிலமை காணப்படுகின்றது. அவர்களது குழந்தைகள், சிலவேளை அவர்களே டெங்கினால் பாதிக்கப்பட்ட நிலை உருவாகியுள்ளது. இந்த நிலைமை பாரிய சிக்கலை ஏற்படுத்த வாய்ப்புள்ளது. மேலும் சேவையில் இருக்கும் மாவட்ட வைத்திய அதிகாரி, சுகாதார வைத்திய அதிகாரி ஆகியோரின் பிள்ளைகளும் டெங்கினால் பாதிக்கப்பட்ட நிலையில்தான் இவர்களும் தியாகத்துடன் சேவை புரிகின்றனர். இதனால் அவர்களும் மன அழுத்தம் காரணமாக இளைத்த நிலையை அடைய வாய்ப்புள்ளது.

அதே போல சமூக நிறுவனங்கள் ஒழுங்குபடுத்தப்படாத நிலையில் களத்தில் வேலை செய்வதும் பாரிய குறைபாடாகவுள்ளது.

இப்போது 10மரணங்கள் சர்பவித்துள்ள நிலையில் இது பிரகடணப்படுத்தம்படாவிட்டாலும் அனர்த்த நிலைதான் (Disaster situation). ஆனாலும் இது இதுவரை அரசினால் அனர்த்தமென பிரகடனப்படுத்தப்படாதிருப்பது பரிகார, சிகிச்சை வேலைகளை மந்த கதியில் நடைபெற வைத்துள்ளது. எனவே இது உடனடியாக 'அனர்த்தம்' எனப்பிரகடனப்படுத்தப்படல் வேண்டும்.

ஏனெனில் அணர்த்த நிலையை வைத்துக்கொண்டு சாதாரண நிலை போன்று வேலை செய்வது அணர்த்தத்தின் அடுத்த விளைவான நெருக்கடி நிலையை (Crisis situation) இலகுவில் தோற்றுத்துவிடும்.

நெருக்கடி நிலையென்பது ஒட்டுமொத்த சமூகமும் குழப்ப நிலையில் இருப்பதாகும் (Collective stress situation). மேலும் இது, சமூகத்தில் அனேகர் வாழ்வதற்கான நிபந்தனைகளை சுற்றயலில் பெற்றுக் கொள்ள முடியாத நிலை எனவும் வரையறுக்கப்படுவதுண்டு.

மரணங்களும் அதிகரிக்க, அதிகரிக்க இந்த நிலைமையும் நீடிக்க, கலவர நிலையில் மக்கள் பின்வரும் குணாதிசயங்களை வெளிக்காட்ட ஆரம்பிப்பார்கள்.

1. எரிச்சல் உணர்வு 2. பதட்டம் 3. அதிர்ச்சி 4. உதவியற்ற நிலை 5. எதிலும் அக்கரையின்மை 6. மன அழுத்தம் 7. அச்சவுணர்வு / பீதி 8. நம்பிக்கையீனம் 9. கோபம் 10.பயம் 11. எதிர்ப்புணர்வு

இவ்வாறான ஒரு நிலைமை உருவாகுவது பாரிய சிக்கல்களை உருவாக்கிவிடும். இது ஆபத்தான நிலையாகும். இளைஞர்களதும் பொது மக்களதும் தற்போதைய அசைவுகளை உற்றுநோக்கும்போது ஊர் அந்த நிலையை அடைந்துவிட்டதா என எண்ணத் தோன்றுகிறது.

நான் இதனை எழுதும்போது கூட இளைஞர்களின் ஆக்ரோஷமான அழைப்பு ஒன்றை முக நூலில் காணக்கிடைத்தது. சிலர் ஊரைவிட்டு இடம்பெயர்வதை காண முடிகிறது. நாளைய மரணம் நானா அல்லது எனது பிள்ளையா என எண்ணத்தோன்றுகிறது.

மற்றுமொரு முக்கிய விடயம்தான் வதந்திகளின் பரவுகை. இது டெங்குவல்ல , இது வேறொரு நோய் திட்டமிட்டு கிண்ணியாவில் பரப்பப்பட்டுள்ளது. எனும் மனோநிலை மிக வேகமாக பரவி வருகிறது.

இந்நிலையை நீடிக்க விடக்கூடாது. உடனடியாக அனர்த்த நிலை பிரகடனம் செய்யப்படல் வேண்டும். அரசின் அனைத்து கவனமும் சக்தியும், கிண்ணியாவில் குவிக்கப்படல் வேண்டும். இல்லையெனின் மக்கள் கிளர்ந்தெழுவார்கள். வைத்தியசாலையில் கை வைப்பார்கள் வைத்தியர்களை தாக்க முனைவார்கள். இது நீண்டு சென்று சமூக தலைமை, அரசியல் வாதிகள் என தாக்குதல்கள் விரிவாகும் .

இதன் உடனடி விளைவாக வைத்தியர்கள் களத்திலிருந்து அகன்று செல்வார்கள். வைத்தியசாலைகள் இஸ்தம்பிதமடையும்; தலைமைகள் கைவிரிப்பர், வைர்தியர்கள் கைவிரிப்பர்.

இவ்வாறு ஈற்றில் பாரிய சமூக அழிவை இது கொண்டுவந்துவிடும்.

எனவேதான் இதில் பிரதமர், சுகாதார அமைச்சர், கிழக்கு மாகாண முதலமைச்சர் எமது அரசியல்வாதிகள் உடன் செயற்பட்டு அனர்த்த நிலையை பிரகடனப்படுத்தி உடனடியாக ஆவன செய்தல் வேண்டும்.

## சைடம்...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

மாணவர் சிலரும் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சைட்டம் தனியார் வைத்திய கல்லூரிக்கு வைத்திய பட்டம் வழங்குவதற்கு தடையில்லை என்று நீதிமன்றினால் தீர்ப்பு வெளியிடப்பட்டதிலிருந்து சைட்டம் குறித்த பரபரப்பு அரசியல் வட்டாரத்தில் தொடர்ந்த வண்ணமே காணப்படுகின்றது.

அந்தவகையில், பல்கலைக் கழக மாணவர்கள் வீதியில் இறங்கி ஆர்ப்பாட்டம் மூலமாகவும் ஜே.வி.பியினர் உள்ளிட்ட சில அரசியல்வாதிகள் பாராளுமன்றிலும் கருத்துக்கள் மூலமாகவும சைட்டத்துக்கு எதிராக கருத்துக்களை வலியுறுத்திவரும் நிலையிலேயே நேற்றைய தினமும் பல்கலைக்கழக மாணவர்களால் ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.

இவர்கள் சைட்டத்துக்கு எதிரான பதாதைகள் மற்றும் கோஷங்களுடன் ஊர்வலமாக வந்த மாணவர்கள் திடீரென பொலிஸாரின் அறிவுறுத்தலையும் மீறி காலிமுகத்திடலுக்கு முன்னாள் அமைந்துள்ள ஜனாதிபதி செயலகத்தை முற்றுகையிட முற்பட்டனர். இதன்காரணமாக மாணவர்கள் மீது பொலிஸாரினால் தடியடி நடத்தப்பட்டதுடன் நீர்த்தாரைப் பிரயோகமும் மேற்கொள்ளப்பட்டது.

மேலும், இவ்வாறான இந்த ஆர்ப்பாட்டமானது நீண்ட நேரத்துக்கும் நீடித்தமையால் மருதானை, பொரளை, கோட்டை, லோட்டஸ் ஆகிய பிரதான வீதிகளில் கடுமையான போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

## வெள்ளை சீனி...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

பணிப்புரை விடுத்துள்ளதாக ஹஸித திலகரத்ன மேலும் தெரிவித்தார்.

கோழி இறைச்சி சந்தையில் போதிய அளவு இருப்பதாலும் வெள்ளைச்சீனியின் கட்டுப்பாட்டு விலையை நீக்கப்படுமென்ற வரவு செலவுத்திட்டத்தின் முன் மொழிவுகளுக்கு அமைவாகவும் அரசாங்கம் இந்த நடவடிக்கையை எடுத்துள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

## கைருல்...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

ஜனாஸா நல்லடக்கம் செய்யப்பட்டது.

5 பிள்ளைகளின் தந்தையான அஷ்ஷெய்க் எம்.ஐ.கைருல் பஷர் நேற்றுமுன்தினம் 60 ஆவது வயதில் காலமானார்.

ஜனாஸாவின் இறுதிக் கிரியைகளில் அரசியல் பிரமுகர்கள், அரபுக் கலாசாலைகளின் பிரமுகர்கள், கலாசாலை மாணவர்கள், நளீமிய்யாவின் பழைய மாணவர்கள், ஊர் மக்கள் உட்பட பெருந்திரலானோர் கலந்து கொண்டிருந்தனர்.

## இடம்பெயர்ந்த...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

வைக்கப்பட்டுள்ள ஜீ.சி.ஈ.உயர்தர பரீட்சை பெறுபேறுகளை உடனடியாக வெளியிடுமாறு பிரதம நீதியரசர் பிரசாத் டெப் உத்தரவிட்டுள்ளார்.

சிரேஷ்ட சட்டத்தரணி எம்.நிஸாம் காரியப்பர் ஊடாக குறித்த மாணவி உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருந்த மனு நேற்று திங்கட்கிழமை விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோதே பிரதம நீதியரசர் இவ்வுத்தரவைப் பிறப்பித்துள்ளார்.

சிரேஷ்ட சட்டத்தரணி எம்.நிஸாம் காரியப்பர் இம்மனு மீதான வாதத்தின்போது குறிப்பிடுகையில்;

இம்மாணவி மன்னார் மாவட்டத்தில் பிறந்து, அங்கிருந்து இடம்பெயர்ந்த நிலையில் அனுராதபுரம் மாவட்டத்தில் தரம் ஐந்து வரை கல்வி கற்றுள்ளதுடன் பின்னர் கொழும்பு மாவட்டத்தில் கல்வியைத் தொடர்ந்து, அங்கேயே ஜீ.சி.ஈ.சாதாரண தரப் பரீட்சையை எழுதியிருக்கிறார்.

பின்னர் இம்மாணவியின் பெற்றோர் மன்னாரில் மீளக்குடியேறியதனால் இவர் மன்னாரில் ஜீ.சி.ஈ.உயர்தர படிப்பை மேற்கொள்ள முயற்சித்த போதிலும் அங்கு வசதியீனம் காரணமாக அனுராதபுரம் மாவட்டத்திலுள்ள பாடசாலையொன்றில் சேர்ந்து கல்வி கற்றுள்ளார்.

இதன் நிமித்தமே இம்மாணவி கடந்த 2016ஆம் ஆண்டு அனுராதபுரம் மாவட்டத்தில் இருந்து ஜீ.சி.ஈ.உயர்தர பரீட்சைக்கு தோற்றியிருக்கிறார். ஆகையினால் பிரிதொரு மாவட்டத்தில் பரீட்சைக்கு தோன்றினார் எனத் தெரிவித்து, இவரது பரீட்சைப் பெறுபேறுகள் இடைநிறுத்தி வைக்கப்பட்டிருப்பதானது அநீதி என்பதுடன் இவரது அடிப்படை உரிமையை மீறுகின்ற செயலுமாகும் என சுட்டிக்காட்டியிருந்தார்.

இவ்வாதத்தை செவிமடுத்த பிரதம நீதியரசர் பிரசாத் டெப் குறித்த மாணவியின் ஜீ.சி.ஈ.உயர்தர பரீட்சை பெறுபேறுகளை உடனடியாக வெளியிட்டு, அவரது பாடசாலைக்கு அனுப்பி வைக்குமாறு பரீட்சைகள் ஆணையாளருக்கு உத்தரவிட்டதுடன் இம்மாணவிக்கு எந்த மாவட்டத்தில் இருந்து பல்கலைக்கழக அனுமதியை வழங்க வேண்டும் என தீர்மானித்துக் கொள்ளுமாறும் அறிவித்தார்.

## சபாநாயகர்...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

அதேநேரம், சலுகைகள் தருவதாகக் கூறி கைது செய்யப்படும் புலனாய்வாளர்களிடம் பொலிஸார் பொய்யான வாக்குமூலங்களைப் பெற்றுக்கொள்கின்றனர் எனவும் அவர் குற்றச்சாட்டொன்றை முன்வைத்தார்.

தமது கட்சித் தலைமயகத்தில் நேற்றைய தினம் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார். இது தொடர்பில் மேலும் தெரிவிக்கையில்,

யானைக்காலில் நசுங்குண்ட தவளையின் நிலைமையிலேயே தற்போது எமது இராணுவம் காணப்படுகின்றது. யார் பெரியவர் என்று ஜனாதிபதி- பிரதமருக்கு இடையில் இடம்பெறும் பனிப்போரில் இராணுவமே அதிகமாகப் பாதிக்கப்படுகின்றது.

மார்ச் 3 ஆம் திகதி வடக்கில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றிய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, எக்காரணம் கொண்டும் புலனாய்வாளர்களுக்கு பிரச்சினைகள் ஏற்பட அனுமதிக்க மாட்டேன் எனவும் இராணுவத்தை கேள்விக்குட்படுத்தப்போவதில்லை எனவும் கூறி அவர் கொழும்புக்கு வரும் முன்னரே, புலனாய்வுத் துறை அதிகாரிகளாக கொமாண்டோ ரணசிங்க, உதயகுமார ஆகியோர் குற்றப்புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டனர்.

கப்பம் கோரி, தமிழ் மக்களைக் கடத்திக் காணாமற் செய்ய வைத்தனர் எனும் குற்றத்தின் பேரிலேயே கைது செய்யப்பட்டுள்ளனர். உண்மையில், ஒருவரை கப்பம் பெறும் நோக்கில் கடத்தி, காணாமற்போகச் செய்திருந்தால் நிச்சயமாக எவராக இருப்பினும் தண்டனைப் பெற்றே ஆகவேண்டும்;.

ஆனால், இவர்களோ மஹிந்த அரசில் கைது செய்யப்பட்ட இராணுவத்தினர் வழங்கிய சாட்சியின் அடிப்படையிலேயே கைது செய்யப்பட்டுள்ளனர். அதாவது, கடந்த காலத்தில் கைது செய்யப்பட்டவர்களிடம் வெளிநாட்டில் முழுப் பாதுகாப்புடன் வசிப்பதற்கு தேவையான சகல வசதிகளையும் நாம் செய்துத் தருகிறோம். அதற்கு நாம் சொல்வதை மட்டும் நீங்கள் செய்ய வேண்டும் என்று பொலிஸாரில் வலியுறுத்தப்பட்டே இவ்வாறு சாட்சியங்கள் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளன. அவர்களும் வருடக்கணக்கில் விளக்கமறியலில் இருப்பதால் வேறு வழியின்றி இவ்வாறானவற்றுக்கு ஒத்துழைப்பு வழங்குகிறார்கள். மேலும் கைது செய்யப்படுபவர்களிடம், முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோட்டாபய ராஜபக்ஷ, அட்மிரல் ஜெனரல் கரண்ணாகொட ஆகியோரின் கட்டளைக்கு இணங்கவே தமிழர்களைக் கடத்தியதாக வாக்குமூலம் அளிக்க வேண்டும் என்றும் குற்றப்புலனாய்வுப் பிரிவினரால் அழுத்தம் விடுக்கப்படுகின்றது என்று தெரியவந்துள்ளது. இது இராணுவத்தையே கேள்விக்குட்படுத்தும் ஒரு செயற்பாடாகும்.

இவ்வாறு மார்ச் 3 ஆம் திகதி கைது செய்யப்பட்ட ரணசிங்க என்பவர், 2001 ஆம் ஆண்டில் கந்தளாயில் வைத்து புலிகளின் தாக்குதலில் தப்பித்த ஒரு சிறந்த வீரராவார். இவருடன் சென்ற 17 பேரும் பலியானபோதும் இவர் மட்டும் தான் அத்தாக்குதலில் பலத்த காயங்களுடன் தப்பித்தார்.

இதனால், இவர் ஒரு கண்ணையும் காதையும் இழந்ததோடு, தற்போதும் அத்தாக்குதலின் பிரதிபலனாக திடீர் திடீரென மயக்கமுறுகிறார். இப்படியான ஒருவரைத் தான் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு கீழ் இயங்கும் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இவர்கள் மட்டுமன்றி, இவ்வாரத்துக்குள்ளேயே லுத்தினன் கொமாண்டோ பிரசாத் ஹெட்டியாராச்சியையும் கே.ஜி.என்.ஜி. விக்கிரமசூரிய என்பவரையும் கைது செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக குற்றப்புலனாய்வுத் தரப்பில் மனசாட்சியுள்ள ஒருசிலரால் எமக்கு தகவல் வழங்கப்பட்டுள்ளது. ரவிராஜ் கொலை வழக்கில் நிரபராதி என்று அண்மையில் விடுதலை செய்யப்பட்டவரே பிரசாத். இப்படியானவர்களை கைது செய்வது மிகவும் மோசமான செயற்பாடு என்பதால் ஜனாதிபதி இதுவிடயம் தொடர்பில் உடனடியாக சிந்தித்து செயற்பட வேண்டும்.

அத்தோடு, கடந்த வாரம் பாராளுமன்றில் இடம்பெற்ற சம்பவமானது சபாநாயகர் கருஜயசூரிய மீதிருந்த நம்பிக்கையை முற்றாக இல்லாதொழிக்கும்வகையிலேயே அமைந்திருந்தது. சபாநாயகர் என்றாலே அரசுக்கன்றி எதிர்க்கட்சிகளின் பாதுகாவலராகவே இருப்பார். கடந்த காலங்களில் சமல்ராஜபக்ஷ சபாநாயகராக செயற்பட்டபோதும் அவர் எதிர்க்கட்சிகளின் நலன்களுக்கே முன்னுரிமை கொடுத்தார்.

ஆனால், இவரோ சபைநடவடிக்கைகளைக் குழப்பும், தொடர்ந்தும் பேச விடாது கூச்சலெலுப்பும் அரசின் உறுப்பினர்கள் தொடர்பில் எந்தவித நடவடிக்கையையும் மேற்கொள்ளாது இலங்கையில் சிரேஷ்ட அரசியல்வாதியாக தினேஷ் குணவர்த்தவை ஒருவாரத்துக்கு பாராளுமன்றுக்கு வருகைத் தரக்கூடாது என அறிவித்துள்ளார்.

இது ஒருங்கிணைந்த எதிரக்கட்சிகளின் உரிமையை பறிக்கும் பாராதூரமான ஒரு செயற்பாடாகும். ஒருங்கிணைந்த எதிரணி உறுப்பினர்கள் 51 பேர் சார்பிலும் பேச இருந்த தினேஷை வெளியில் அனுப்பி, இடைக்காலத் தலைவர் தெரிவுக்கும் சபாநாயகர் தடையாக இருக்கிறார்.

எனவே, இப்படியான பக்கச்சார்ப்புடன் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு சார்பாக தொடர்ந்தும் செயற்படும் இவர் உடனடியாக தமது பதவியை இராஜினாமா செய்துக் கொள்ள வேண்டும் என்று நாம் வலியுறுத்துகிறோம். இது தான் அவரின் இத்தனை வருடகால கௌரவத்துக்கும் அழகானது என்றார்.

## பார்வை...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

நேற்று கொழும்பு சுகாதாரப் பணிமனையில் இடம் பெற்ற ஊடக சந்திப்பிலே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்தும் கூறுகையில்,

இதுவரைக்கும் உலகளாவிய ரீதியில் 4.2 மில்லியன் மக்கள் குளுக்கோமா நோயினால் பாதிக்கப்பட்டுள்ளார்கள். இலங்கையிலும் 06 வீதமான மக்கள் இக்குறைபாட்டால் பாதிக்கப்பட்டுள்ளனர். அது அண்ணளவாக 250,000 இலட்சம் பேராகும். கடந்த ஆண்டுகளுடன் ஒப்பிடுகையில் இந்நோயினை தடுத்துக்கொள்ள முடியுமான நாடாக இலங்கை அடையாளப்படுத்தப்பட்டுள்ளது.

கண் பார்வைக் குறைபாடுகளில் கண் நீர் அழுத்த நோயால் கண்ணில் பார்வை நரம்புகள் பாதிக்கப்படுகின்றன. சரியான நேரத்தில் சிகிச்சை அளிக்கத் தவறினால், கண்பார்வைக்கு பாதிக்கும் அபாயம் உள்ளது. பெருமளவு கண் பார்வை பாதிப்பு ஏற்பட்ட பின்னரே இந்நோயின் அபாயம் தெரியவருகிறது. அத்தோடு ஆரம்ப அறிகுறிகளும் தென்படுவதில்லை.

மேலும் 40 வயதுக்கு மேற்பட்டவர்கள், கண்ணில் பல்வேறு குறைபாடுகள் உள்ளவர்கள், பரம்பரையாக கண் அழுத்த நோய் உள்ளவர்களின் உறவினர்களுக்கு இது வரக்கூடிய சாத்தியம் உண்டு. குளுக்கோமாவினால் ஏற்படும் கண் பார்வை பாதிப்பை சிகிச்சையால் சரிபடுத்த இயலாது. ஆனால் மேற்கொண்டு பாதிப்பு ஏற்படாமல் தடுக்க முடியும்.

அதன்படி இவ்வாண்டும் மார்ச் 12 லிருந்து 18 ஆம் திகதி வரை ஒருவார காலத்தை உலக கண் நீர் அழுத்த நோய் வாரமாக கடைப்பிடிக்கிறது. உலக அளவில் பார்வை இழப்பிற்கு இரண்டாவது முக்கிய காரணமான கண் நீர் அழுத்த நோய் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவது இதன் முக்கிய நோக்கமாகும்.

கொழும்பு தேசிய கண் வைத்தியசாலையினால் ஒழுங்கு செய்யப்படவுள்ள இந்நடைபவனி 16 ஆம் திகதி காலை 8.30 மணிக்கு விஹாரமகாதேவி பூங்காவில் ஆரம்பமாகி தேசிய கண் வைத்தியசாலை வரை இடம்பெறும். இந்நடைபவனியில் பொதுமக்கள், நோயாளர்கள், அனைவரும் கலந்துகொள்ள முடியும்.

அதேபோல் 17ஆம் திகதி காலை 8.00 மணி தொடக்கம் 1.00 மணிவரை இலங்கையில் சகல தேசிய வைத்தியசாலைகளிலும் அனைவரும் குறிப்பாக 40 வயதைத் தாண்டிய ஆண் பெண் இருபாலாரும் இலவசமாக கண்பரிசோதனையை மேற்கொள்ள முடியும். 2020 ஆம் ஆண்டு குளுகோமா என்ற நோயை முழுமையா இல்லாதொழிப்பதற்கு ஒவ்வொரு வருடமும் அதற்கான விசேட வேலைத்திட்டங்களை அரசு மக்களுக்கு செயற்படுத்தி வருகின்றது. ஆரம்பநிலையிலே இந்நோயிற்கான பரிசோதனைகளை மேற்கொள்வதன்மூலம் குளுகோமா நோயிலிருந்து வரும் முன் பாதுகாத்துக்கொள்ள முடியும் என்றார்.

## வைத்திய...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

சத்திர சிகிச்சை விசேட வைத்திய நிபுணர் பேராசிரியர் அர்ஜுன அலுவிஹாரை சட்டத்தரணி ஊடாக கண்டி மஜிஸ்ரேட் பதில் நீதவான் மஹிந்த லியனகே முன்னிலையில் ஆஜரான போது இரண்டு இலட்சம் ரூபா சரீரப் பிணையில் விடுதலை செய்யுமாறு இன்று உத்தரவு பிறப்பித்தார்.

மீண்டும் மார்ச் மாதம் 21 ஆம் திகதி நீதி மன்றத்திற்கு சமூகமளிக்க வேண்டும் எனவும் பதில் நீதவான் வைத்திய அதிகாரிக்கு உத்தரவு விடுத்துள்ளார்.

மரணம் அடைந்த பெண்மணியின் மரணம் தொடர்பாக பிரேதப் பரிசோதனை நடத்த கண்டி பிரதான வைத்தியசாலையின் நீதி மன்ற வைத்திய அதிகாரியின் மூலம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அத்துடன் மரணத்திற்கான உறுதியான காரணம் கண்டு பிடிக்கப்பட வில்லை என்கின்ற நீதி மன்ற வைத்திய அறிக்கையின் மூலமாக அவர் தொடர்பாக கவனம் செலுத்துவதற்கு நீதிவான் மரணம் தொடர்பாக இறந்த தீர்ப்பினை வழங்குவதற்கு சரீரத்தின் பகுதியை இரசாயப் பரிசோதனை செய்து அறிக்கையைப் பெற்றுத் தர வேண்டும் என பொலிஸாருக்கு உத்தரவு பிறப்பித்தார்.

மூல வியாதி காரணமாக அதற்கு சிகிச்சைப் பெறச் சென்ற பெண்மணி பேராசிரியர் அர்ஜுன அலுவிஹாரையின் கீழ் வைத்தியசாலைக்கு அனுமதிக்கப்பட்டார். பெண்மணிக்கு மயக்க ஊசி ஏற்றிய பிற்பாடு இந்த மரணம் சம்பவித்துள்ளது

இந்தப் பெண்மணி சதுஹும்பொல பிரதேசத்தைச் சேர்ந்த பாத்திமா அஸ்மா என்பவராவார், இவர் மூன்று பிள்ளைகளின் தாயுமாவார். இவரது ஜனாஸா (13) இன்று நல்லடக்கம் செய்யப்பட்டது.

## முன்னாள்...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

பெற்று வந்த நிலையில், அவர் உயிரிழந்துள்ளார்.

நுவரெலியா தொகுதியில் தேர்தலில் வெற்றி பெற்று கடந்த 1977 ஆம் ஆண்டு பாராளுமன்றத்தில் ஐக்கிய தேசிய கட்சியை பிரதிநிதித்துவப்படுத்திய அவர், மகளிர் அரசியல் பிரமுகர்களின் சிரேஷ்ட உறுப்பினர் ஆனார்.

இவர், முன்னாள் ஜனாதிபதி ரணசிங்க பிரமதாசவின் அரசாங்கத்தின் போது சுகாதார அமைச்சராக செயற்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

40 வருடங்களுக்கு மேலாக ஐக்கிய தேசியக் கட்சிக்காக அரசியலில் ஈடுபட்ட அவர் கட்சியின் முக்கிய பதவிகளையும் வகித்துள்ளார்.

இந்தநிலையில் மக்களின் அஞ்சலிக்காக நேற்று அவரது தேகம் வலப்பனையில் உள்ள அவரது இல்லத்தில் வைக்கப்பட்டதோடு, நேற்று மாலை மத்திய மாகாண சபைக்கு கொண்டுவரப்பட்டது.

இறுதிக் கிரியைகளை எதிர்வரும் வியாழக்கிழமை வலப்பனை நில்தண்டாஹின்ன பொது மைதானத்தில் நடைபெறவுள்ளது.

## 25,000 ரூபா...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

கொள்ளுமாறும் அரச ஹஜ் குழுவின் தலைவர் கலாநிதி ஸியாத் எம்.தாஹா தெரிவித்தார்.

2017ஆம் ஆண்டு ஹஜ் ஏற்பாடுகள் குறித்து கேட்டபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

2017ஆம் ஆண்டு ஹஜ் கடமைகளுக்கு விண்ணப்பித்திருந்தவர்களில் இறுதி குழுவைத் தெரிவுசெய்வதற்கு கடிதங்கள் கிடைத்தவர்கள் வங்கியில் 25,000 செலுத்திய பற்றுச் சீட்டை முஸ்லிம் சமய கலாசார திணைக்களத்தில் சமர்ப்பித்து, உறுதிசெய்யப்பட்ட பற்றுச்சீட்டைப் பெற்றுக் கொள்ளுமாறும் அவர் தெரிவித்தார்.

இதுதொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது,

இம்முறை மேலதிக ஹஜ் கோட்டாக்கள் கிடைக்கும் வாய்ப்பும் அதிகமாக உள்ளது. எனினும் இதுவரையில் மக்கா ஹஜ் அமைச்சிலிருந்து அழைப்பிதழ் கிடைக்கவில்லை. இம்மாத இறுதியில் ஹஜ் முகவர் நிலையங்களுக்கான நேர்முகத் தேர்வுகளையும் மேற்கொள்ள தீர்மானித்துள்ளோம்- என்றார்.

## கிண்ணியாவில்...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

பாதிப்புக்களை நீக்குவதற்கு உடன் நடவடிக்கை எடுக்குமாறு அமைச்சர் ராஜித சேனாரத்னவிடம் அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தலைவரும் அமைச்சருமான ரிஷாட் பதியுதீன் அவசர வேண்டுகோள் ஒன்றை விடுத்தார்.

உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டு இலண்டனுக்கு சென்றுள்ள அமைச்சர் ரிஷாட் கிண்ணியா நிலவரங்கள் குறித்து அமைச்சர் ராஜிதவிடம் விளக்கினார்.

திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அப்துல்லாஹ் மஹ்ரூப், கிண்ணியா நகரசபை முன்னாள் தலைவர் டாக்டர் ஹில்மி ஆகியோர் அமைச்சரின் கவனத்திற்கு இவ்விடயத்தை கொண்டுவந்ததை அடுத்தே அமைச்சர் ரிஷாட் பதியுதீன் இந்த துரித நடவடிக்கையை எடுத்தார்.

கிண்ணியாப் பிரதேசத்திற்கு கொழும்பிலிருந்து பிரத்தியேக மருத்துவ குழுவொன்றையும், தொழிநுட்பவியலாளர் குழுவொன்றையும் அனுப்பி தீவிரமடைந்து வரும் டெங்கு பரவுகையை கட்டுப்படுத்துவதற்கு ஆவன நடவடிக்கையை எடுக்குமாறும் கேட்டுள்ளார்.

## காத்தான்குடியில்...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

இடம் பெற்ற மோதல் சம்பவம் தொடர்பில் இதுவரையில் 10 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக காத்தான்குடி பொலிசார் தெரிவித்தனர்.

இதில் கைது செய்யப்பட்ட 8 பேர் எதிர் வரும் 24 ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளதுடன் ஏனைய இருவரும் இன்று வரை (விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

காத்தான்குடியில் கடந்த (10) வெள்ளிக்கிழமை மாலை இடம் பெற்ற இரண்டு குழுக்களுக்கிடையிலான மோதல் சம்பவம் தொடர்பில் சம்பவ இடத்தில் இருவர் கைது செய்யப்பட்டனர். இவர்கள் இருவரையும்(11) சனிக்கிழமை மாலை மட்டக்களப்பு நீதவான் நீதிமன்ற மேலதிக நீதவான் எம்.ஐ.றிஸ்வி முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்ட போது இவ்விருவரையும் 24.3.2017 வரை விளக்க மறியலில் வைக்குமாறு உத்தரவிட்டிருந்தார்.

## முஸ்லிம் தேசிய...

(07 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

செய்யப்பட்டு முடிவெடுக்கப்பட வேண்டியவை. சிலவேளை தேர்தல் கால சூழ்நிலையில் அவ்வப்போது கட்சித்தலைமை அரசியல் பீடத்துடன் ஆலோசனை செய்து கட்சிகளுடன் தேர்தல் கூட்டொன்றை உருவாக்கலாம். அது தேசிய ரீதியிலும், பிராந்திய ரீதியிலும், வட்டார ரீதியிலான தேர்தல் கூட்டாகவும் கூட இருக்க முடியும். தேர்தல் கூட்டுக்கள் கட்சியின் நடவடிக்கையை பாரிய அளவில் பாதிக்கப்போவதில்லை என்பதே எனது கருத்தாகும்.

மு.கா தலைவரின் மகுடிக்கு ஆடிய உயர்பீடப் பிரமுகர்கள், இப்போது வேறுபாதையில் பயணிக்க முயற்சிக்கும் போது அவர்களுடன் மக்கள் காங்கிரஸ் புதிய கூட்டை வைக்க வேண்டிய எந்த அவசியமும் கிடையாது என்பதே எனது கருத்தாகும். அதுவும் அமைச்சர் ரிஷாட்டை வேண்டுமென்றே திட்டமிட்டு மு காவிலிருந்து வெளியேற்றுவதற்கு லீடர் உடன் சேர்ந்து ஒத்தூதியவர்களுடன் உடனடிக்கூட்டு என்பது எந்த வகையில் சாத்தியமாகும்?

அமைச்சர் ரிஷாட்டை கட்சியிலிருந்து வெளியேற்றிய காலத்தில் அவரது உண்மையான நிலைப்பாட்டை எடுத்துரைத்து யதார்த்தத்தை பத்திரிகைகளில் வெளிக்கொணர்ந்தமைக்காக முஸ்லிம் காங்கிரஸ்காரர்களாலும், சக ஊடகவியலாளர்களாலும் பத்திரிகையாளராகிய நானும் நோகடிக்கப்பட்டிருக்கின்றேன் என்பதை மனவருத்தத்துடன் இங்கு சுட்டிக்காட்டியே ஆக வேண்டும். உண்மைக்கு அழிவில்லை என்பது இப்போது அக்கட்சிக்காரர்களின் வாயினாலேயே வெளிவந்து கொண்டிருக்கும் தகவல்கள் வெட்ட வெளிச்சமாக்கி வருகின்றது.

மு கா தலைவர் ஹக்கீமின் செயற்பாடுகளை சரி கண்டுதட்டி கேட்காது பேசா மடந்தையாக இருந்தவர்கள் தற்போது திருந்தியிருக்கலாம். சமுதாயத்தின் மீது அவர்களுக்கு புதிய பற்றும் ஏற்பட்டிருக்கலாம். எனினும் அவர்களின் அவசரத்திற்கு மக்கள் காங்கிரஸ் பகடைக்காய்களாக மாறக்கூடாது. (இதுவும் எனது சொந்தக் கருத்தே)

ஆண்டிகள் கூடி கட்டிய மடமாக முஸ்லிம் தேசியக் கூட்டமைப்பை உருவாக்குவதன் மூலம் முஸ்லிம் சமூகத்திற்கு எந்தப் பயனும் கிடைக்கப் போவதில்லை.

உதாரணமாக முஸ்லிம் காங்கிரஸின் பிரதித் தலைவரும் தற்போதைய முதலமைச்சருமான ஹாபீஸ் நசீர் அஹமட் ஹக்கீமுடன் முரண்பட்டு முஸ்லிம் காங்கிரஸிலிருந்து வெளியேறி முஸ்லிம் கட்சிகள் சிலவற்றை ஒன்றிணைத்து (ஹாபீஸ் நசீர் அஹமட்டை தலைவராகக் கொண்ட ஜனநாயக ஐக்கிய முன்னணி(து.ஆ), ரசூல் தலைமையிலான முஸ்லிம் கட்சி, முபாரக் மௌலவி தலைமையிலான உலமா கட்சி, மற்றும் சில உதிரிக்கட்சிகளுடன் இணைந்து உருவாக்கிய முஸ்லிம் தேசியக் கூட்டமைப்பு (எம் என் ஏ)) இற்கு நடந்த கதை போல உத்தேச கூட்டமைப்பும் அமையக் கூடாது என்பதில் முஸ்லிம் சமூகம் விழிப்பாக இருக்க வேண்டும். அத்துடன் பல கட்சிகளை உள்வாங்கி புலிகளின் நிர்ப்பந்தத்தினால் உருவாக்கப்பட்டுள்ள தமிழ் தேசியக் கூட்டமைப்பை, முஸ்லிம் தேசியக் கூட்டமைப்பு விடயத்திற்கு எவரும் ஒப்பிடவும் கூடாது. புலிகள் சர்வதேசத்தில் சில விடயங்களை சாதிப்பதற்காக தமிழரசுக்கட்சியையும் உள்வாங்கி போராட்டத்தில் பங்கேற்ற டெலோ, புளொட், ஈ பி ஆர் எல் எப், ஆகியவற்றையும் அகில இலங்கை தமிழ் காங்கிரஸையும் இணைத்துக் கொண்டு ஒரு பலமான அணியாக தமிழ் தேசியக்கூட்டமைப்பை உருவாக்கின. ஆனால் முஸ்லிம் தேசியக் கூட்டமைப்புக்குள் முஸ்லிம்களின் ஆதரவைக் கணிசமான அளவைக்கொண்டுள்ள மு காவைத் தவிர்த்து ஏனைய கட்சிகளை உள்வாங்கி எதனைத்தான் சாதிக்க முடியும்.(இதுவும் சிந்தித்து பார்க்க வேண்டிய விடயமே)

என்னைப் பொறுத்தவரையில் கடந்த கால அனுபவங்களின் அடிப்படையில் முஸ்லிம் தலைவர்கள் பிரிந்து அரசியல் நடத்துவதே சமூகத்திற்கு ஆரோக்கியமானது, ஏனெனில் முஸ்லிம் சமூக உரிமைகளையும் அபிவிருத்தியையும் கொண்ட ஒரே நேர்கோட்டில் பயணிக்கும் நமது சமூகம் பிரிந்து அரசியல் செய்வதனாலேயே அமைச்சரவையில் பல அமைச்சர்களைப் பெற்றுக்கொள்ள முடிகிறது. பல்வேறு விடயங்களை அதன் மூலம் சாதித்தும் இருக்கின்றது. உதாரணமாக கடந்த காலங்களில் ஒரே அமைச்சரவையிலே முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ஹக்கீம், தேசிய காங்கிரஸ் தலைவர் அதாவுல்லா, மக்கள் காங்கிரஸ் தலைவர் ரிஷாட் பதியுதீன், ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் சிரேஷ்ட தலைவர் ஏ எச் எம் பௌசி, மு கா தவிசாளர் பஷீர் ஆகியோர் அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர்களாக பணி புரிந்தமையை இங்கு நினைவூட்ட விரும்புகிறேன். அதே போன்று நல்லாட்சியிலும் இந்த நிலை தொடர்கின்றது. (இதுவும் எனது சொந்தக் கருத்தே).

எனவே முஸ்லிம் தேசியக் கூட்டமைப்பு ஆண்டிகள் கூடிக்கட்டிய மடமாக இருக்கக் கூடாது என்பதையே மீண்டும் வலியுறுத்த விரும்புகின்றேன்.

# Sports
விளையாட்டுச் செய்திகள்

# வெற்றி தோல்வியின்றி முடிந்த நியூசிலாந்து - தென் ஆபிரிக்க முதல் டெஸ்ட்



நியூசிலாந்து - தென் ஆபிரிக்க அணிகளிடையே நடந்த முதல் டெஸ்டின் கடைசி நாள் ஆட்டம் மழை காரணமாக பாதிக்கப்பட்டதை அடுத்து, போட்டி எத்தரப்புக்கும் வெற்றி, தோல்வியின்றிசமநிலையில் முடிந்தது.

டுனெடின் பல்கலை. ஓவல் மைதானத்தில் நடந்த இப்போட்டியில் (மார்ச் 8-12), நாணய சுழற்சியில் வெற்றிபெற்று துடுப்பெடுதாடிய தென் ஆபிரிக்கா முதல் இன்னிங்சில் 308 ஓட்டங்களை குவித்தது. டீன் எல்கர் 140 ரன் விளாசினார். அடுத்து களமிறங்கிய நியூசிலாந்து முதல் இன்னிங்சில் 341 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்தது. அணித்தலைவர் வில்லியம்சன் 130 ஓட்டங்களை எடுத்திருந்தார்.

இதையடுத்து, 33 ஓட்டங்கள் பின்தங்கிய நிலையில் 2ஆவது இன்னிங்சை தொடங்கிய தென் ஆபிரிக்கா, 4ஆம் நாள் ஆட்ட முடிவில் 6 விக்கெட்டுக்கள் இழப்பிற்கு 224 ஓட்டங்களை எடுத்திருந்தது.

கை வசம் 4 விக்கெட் இருக்க, தென் ஆபிரிக்கா 191 ஓட்டங்கள் மட்டுமே முன்னிலை பெற்றிருந்த தால், கடைசி நாள் ஆட்டம் மிகுந்த எதிர்பார்ப்பை ஏற்படுத்தியிருந்தது. இந்த நிலையில், நேற்றுமுன்தின ஆட்டம் கனமழை காரணமாக ஒரு பந்து கூட வீசப்படாமல் கைவிடப் பட்டதால் போட்டி சமநிலையில் முடிந்தது.

எல்கர் ஆட்ட நாயகன் விருது பெற்றார். மொத்தம் 3 போட்டிகள் கொண்ட தொடரில் இரு அணிகளும் 0-0 என சமநிலை வகிக்க, 2ஆவது டெஸ்ட் வெலிங்டன் பேசின் ரிசர்வ் மைதானத்தில் 16ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது.

## 33 வயதில் டெஸ்ட் அறிமுகம் பெறும் வீரர்



தென்னாபிரிக்க அணிக்கெதிரான டெஸ்ட் கிரிக்கெட் தொடரில் அவ்வணியின் நட்சத்திர வீரர் ரோஸ் டெய்லர் உபாதைக்கு உள்ளாகியுள்ளதால், நியூசிலாந்து அணி நெருக்கடிகளை எதிர்நோக்கியுள்ளது. இந்நிலையில், அவருக்கு பதிலாக நீல் பூறும் அணிக்குள் உள்வாங்கப்பட்டுள்ளார்.

இதன்மூலம் தனது 33 ஆவது வயதில் நீல் பூறும் டெஸ்ட் அறிமுகத்தை மேற்கொள்ளவுள்ளதுடன், ஹமில்டனில் நடைபெறவுள்ள மூன்றாவது டெஸ்ட் போட்டியில் அவர் விளையாடலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது. நியூசிலாந்தின் உள்ளூர் முதல்தர கிரிக்கெட் சாம்பியன்ஸ்ஷிப் போட்டிகளில் நீல் பூறும் 53 என்ற சராசரியில் 424 ஓட்டங்களைக் குவித்திருந்தார். ஆறு ஆண்டு இடைவெளிக்கு பின்னர் கடந்த டிசம்பர் மாதம் பங்களாதேஷ் அணிக்கெதிராக நடைபெற்ற சர்வதேச ஒருநாள் தொடருக்கான நியூசிலாந்து அணியில் இணைக்கப்பட்டிருந்தார்.

இதேவேளை நியூசிலாந்து அணியின் வேகப்பந்துவீச்சாளர் ட்ரெண்ட் போல்ட்டும் உபாதைக்கு உள்ளாகியுள்ள நிலையில், மூன்றாவது டெஸ்ட் போட்டியில் அவரை உள்வாங்குவது தொடர்பில் தொடர்ந்தும் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. அத்துடன் வேகப் பந்துவீச்சாளர் மெட் ஹென்றி அணியில் இணைக்கப்பட்டுள்ளதுடன், ரிம் சௌதியும் அணிக்கு மீண்டும் திரும்பவுள்ளார்.

### டி.ஆர்.எஸ். சர்ச்சை விவகாரம்:

## கோஹ்லிக்கு ஆஸி. முன்னாள் வீரர் பிராட் ஹாக் ஆதரவு

அவுஸ்திரேலிய அணித் தலைவர் சுமித்தின் டி.ஆர்.எஸ். சர்ச்சை விவகாரத்தல் இந்திய அணி தலைவர் விராட் கோலி நடந்து கொண்ட விதம் சரியானதே என்று அவருக்கு அவுஸ்திரேலிய முன்னாள் சுழற்பந்து வீரர் பிராட் ஹாக் ஆதரவு தெரிவித்துள்ளார்.

அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணி இந்தியாவில் சுற்றுப் பயணம் மேற்கொண்டு விளையாடி வருகிறது. புனேயில் நடந்த முதல் டெஸ்டில் அவுஸ்திரேலியாவும், பெங்களூரில் நடந்த 2ஆவது டெஸ்டில் இந்தியாவும் வெற்றி பெற்றன.

2ஆவது டெஸ்ட் போட்டியில் இரு அணி வீரர்கள் இடையே அதிகளவில் 'சிலெட்ஜிங்' நடைபெற்றது. வீரர்களின் உசுப்பேற்றல் இந்த டெஸ்டில் உச்ச கட்டமாக இருந்தது. அதோடு டி.ஆர்.எஸ் முறையை அணித்ததலைவர் சுமித் தவறாக பயன்படுத்தியதால் இந்த விவகாரம் பூதாகரமானது.

டி.ஆர்.எஸ். முறையை கேட்கலாமா வேண்டாமா? என்பது பற்றி களத்திலிருந்த சுமித் வீரர்களின் அறையை நாடியது. விதிமுறை மீறலாம்.

இந்திய அணி தலைவர் விராட் கோலி, சுமித்தின் இந்த செயலை கடுமையாக சாடினார். நடுவரிடம் முறையிட்டார். தன்னுடைய புத்தி அந்த நேரத்தில் மழுங்கி விட்டதாகவும், தான் அப்படி செய்தது தவறு என்றும் சுமித் கூறி இருந்தார்.

சர்வதேச கிரிக்கெட் சபை (ஐ.சி.சி) வரை இந்த பிரச்சினை சென்றது. ஆனால் ஐ.சி.சி.யோ இந்த பிரச்சினையில் சுமித் மீது நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை.

இந்த விவகாரத்தில் அவுஸ்திரேலிய ஊடகங்கள் விராட் கோஹ்லியை கடுமையாக விமர்சித்தன. சமூக வலைதளத்தில் நடத்திய கருத்து கணிப்பில் விலங்குடன் கோஹ்லியின் படத்தை வைத்து கேலி செய்திருந்தது.

இந்த நிலையில் டி.ஆர்.எஸ். சர்ச்சை விவகாரத்தல் இந்திய அணி தலைவர் விராட் கோஹ்லி நடந்து கொண்ட விதம் சரியானதே என்று அவருக்கு அவுஸ்திரேலிய முன்னாள் சுழற்பந்து வீரர் பிராட் ஹாக் ஆதரவு தெரிவித்து உள்ளார்.

இது தொடர்பாக அவர் கூறியதாவது:-

விராட் கேஹ்ாலி ஆர்வமிக்க மற்றும் உணர்ச்சிமிக்க கிரிக்கெட் வீரர். தனது கடுமையான பயிற்சி மூலம் அவர் இதை பெற்றிருக்கிறார். ஆடுகளத்தில் எப்படி செயற்பட வேண்டும் என்று கருதுகிறாரோ அதன்படி நடக்க விரும்புகிறவர்.

கோஹ்லியுடன் மோதும் போது அவுஸ்திரேலியர்கள் அதற்கு அதிகமான திறமையை பெற்றிருக்க வேண்டும். இல்லையென்றால் சிலெட்ஜிங்கில் புகழ்பெற்ற அவர்கள் அதை மறந்துவிட வேண்டும்.

டி.ஆர்.எஸ். சர்ச்சையின் கோஹ்லியின் ஆக்ரோஷம் நியாயமானதே. அவர் சுமித்துடன் மோதியது எனக்கு பிடித்திருந்தது. இது ஒரு வன்முறையோ அல்லது தனிப்பட்ட மோதலோ இல்லை. அவர் வெளிப்படுத்திய விதம் சரியானதே. இது ஒரு நல்ல தொடர். நல்ல டெஸ்ட் போட்டியாகும்.

இந்த விவகாரத்தில் கோஹ்லியோ, சுமித்தோ மற்ற எந்த வீரர்கள் மீது நடவடிக்கை எடுக்காதது சரியான முடிவே. இதற்காக ஐ.சி.சி.யை பாராட்டுகிறேன். - இவ்வாறு பிராட் ஹாக் தெரிவித்துள்ளார்.



## 100ஆவது மாபெரும் கிரிக்கெட் போட்டி சிறந்த துடுப்பாட்ட வீரராக சனோஜித்



(வத்துகாமம் நிருபர்)

கண்டி திருத்துவக் கல்லூரிக்கும் கட்டுகஸ்தோட்டை புனித அந்தோனியர் கல்லூரிக்கும் இடையில் இடம்பெற்ற 100ஆவது மாபெறும் கிரிக்கெட் போட்டியில் சிறந்த துடுப்பாட்ட வீரராக திருத்துவக் கல்லூரி அணித்தலைவர் சன்முகநாதன் சனோஜித் தெரிவுசெய்யப்பட்டார்.

கண்டி திருத்துவக் கல்லூரிக்கும் கட்டுகஸ்தோட்டை புனித அந்தோனியர் கல்லூரிக்கும் இடையில் இடம் பெற்ற 100 வது மாபெரும் கிரிகட் போட்டி கடும் மழை காரணமாக வெற்றி தொல்வி இன்றி முடிடைந்தது.

கடந்த வெள்ளி, சனி தினங்களில் கண்டி பல்லேகலே சர்வதேச கிரிகட் விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்ற இப் போட்டியில் முதலாவது துடுப்பெடுத்தாடிய திருத்துவக் கல்லூரி அணி மழை காரணமாக போட்டியை நிறுத்தும் போது ஐந்து விக்கட்டுகளை இழந்து 204 ஓட்டங்களை பெற்றிருந்தது. உதவித் தலைவர் ஹசித்த போயகொட 90 ஓட்டங்களையும் அணித்லைவர் எஸ்.சன்முகநாதன் 83 ஓட்டங்களையும் பெற்றிருந்தனர்.

இரண்டாம் தினமான சனிக்கிமை மீண்டும் துடுப்பெடுத்தாடிய திருத்துவக் கல்லூரி அணி ஐந்து விக்கட்டுகளை இழந்து மொத்தம் 270 ஓட்டங்களைப் பெற்றது.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய புனித அந்தோனியார் கல்லூரி அணி கடும் மழை காரணமாக போட்டியை இடையில் நிறுத்தும் வரை ஆறு விக்கட்டுக்களை இழந்து 99 ஓட்டங்களை மட்டுமே பெற்றிருந்தது.

இப் போட்டியில் சிறந்த துடுப்பாட்டக்காரராக( சிறந்த பெட்ஸ்மன்) எஸ்.சன்முகநாதன்( திருத்துவக் கல்லூரி) தெரிவானதுடன், சிறந்த பந்து வீச்சாளராக விமுக்தி கொட்டிகாவத்தயும் (திருத்துவக் கல்லூரி) சிறந்த பந்து காப்பாளராக ( பீல்டர்) சந்தருவன் தர்மரத்னவும் (புனித அந்தோனியர் கல்லூரி) தெரிவாகினர்.

திருத்துவக் கல்லூரி சார்பாக ஹசித்த போயகொட 90 ஓட்டங்களையும் அணித்லைவர் எஸ்.சன்முகநாதன் 83 ஓட்டங்களையும் தியாக ராஜா பானுகோபன் ஆட்டமிழக்காது 40 ஓட்டங்ளையும் பெற்றதுடன் மொகமட் அலவி 57 ஓட்டங்ளைக் கொடுத்து 3 விக்கட்டுக்ளை வீழ்த்தினார்.

## த டிரவலர் கிண்ண கால்பந்தாட்ட போட்டி: கம்பளை ரெட்சனை வீழ்த்தியது கெலிஓயா எவர்சைன்



(கம்பளை நிருபர் எம்.எம்.எம். ரம்ஸீன்)

கம்பளை கால்பந்தாட்ட சங்கம் கழகங்களுக்கிடையில் நடத்திய த டிரவலர் கிண்ணத்தற்கான கால்பந்தாட்ட சுற்றுப் போட்டியின் இறுதிப் போட்டியில் கெலிஓயா எவர்சைன் கழகம் கம்பளை ரெட்சன் கழகத்தை 3-1 என்ற கோல்கள் வித்தியாசத்தில் தேற்கடித்து சம்பியனாகியது.

கம்பளை வீக்குலுவத்தை விளையாட்டரங்கில நடைபெற்ற இறுதிப்போட்டியில் சம்பியனாகிய கெலிஓயா எவர்சைன் கழகத்திற்கு ஐம்பதாயிரம் ரூபா ரொக்கப் பணமும் சம்பியன் கிண்ணமும் ரெட்சன் கழகத்திற்கு இருபத்தையாயிரம் ரூபா ரொக்கப்பணமும் வழங்கப் பட்டன.

இச்சுற்றுப் போட்டியின் அரை இறுதிப் போட்டியில் கெலிஓயா எவர்சைன் கழகம் பேராதனை பல்கலைக்கழக அணியைத் தோற்கடித்ததன் மூலமும் கம்பளை ரெட்சன் கழகம் கிரிஸ்டல் பெலஸ் கழகத்தை தோற்கடித்ததன் மூலமும் இறுதிப் போட்டிக்கு தெரிவு செய்யப் பட்டிருந்தன என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

கம்பளை கால்பந்தாட்ட சங்கம் கழகங்களுக்கிடையில் லீக் அடிப்படையில் நடாத்திய இச்சுற்றுப் போட்டியில் கெலிஓயா எப்.சி. கழகம், நசனல் யுனைடட் கழகம், கிரிஸ்டல் பெலஸ் கழகம், ரெட் லைன் கழகம், யங் பிரண்ட்ஸ் கழகம், கிறீன் லைன் கழகம், ரெட் சன் கழகம், பேராதனை பல்கலைக்கழக அணி என்பன பங்குபற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

## பஞ்சாப் அணிக்கு மெக்ஸ்வெல் தலைவர்



இந்தியாவில் எதிர்வரும் ஏப்ரல் மாதம் 5ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள இம்முறை ஐ.பி.எல் தொடரில், கடந்த சில ஆண்டுகளாக சோபிக்க தவறிய கிங்ஸ் வெலவன் பஞ்சாப் அணி, இம்முறை மாற்ற காண வேண்டுமென எண்ணிய அணி நிர்வாகம், அவுஸ்ரேலிய அணியின் அதிரடி துடுப்பாட்ட வீரரான கிளென் மேக்ஸ்வெலை அணித்தலைவராக நியமித்துள்ளது.

கடந்த ஐ.பி.எல். தொடரின் போது தென்னாபிரிக்கா அணியின் மிரட்டல் வீரர் டேவிட் மில்லர் அணித்தலைவராக செயற்பட்ட போதும், அவரது தலைமைத்தும் அணியின் நிர்வாகத்தை திருப்திபடுத்தவில்லை. இதனால், இம்முறை அணிநிர்வாகம் அணிதலைவரை அதிரடியாக மாற்றியுள்ளது.

இம்முறை கிங்ஸ் வெலவன் பஞ்சாப் அணியில், அதிரடி துடுப்பாட்ட வீரர்களான மெக்ஸ்வெல், டேவிட் மில்லர், முரளி விஜய், ஷோன் மார்ஷ், ஆசிம் அம்லா ஆகிய வீரர்களும், பந்துவீச்சில் ஜொலிக்க மார்க்கஸ் ஸ்டோனிஸ், மோஹித் சர்மா ஆகியோரும் உள்ளனர். இம்முறை புதுப்பொலிவுடன் களம் காணவுள்ள கிங்ஸ் வெலவன் பஞ்சாப் அணி, இம்முறையாவது தங்களது ரசிகர்களை திருப்தி படுத்துமா? என பொறுத்திருந்து பார்ப்போம்.













கொழும்பு-12 வாழைத் தோட்டம் அல்-ஹிக்மா கல்லூரியின் வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டி பாடசாலையின் அதிபர் கே.எம்.எம். நாளிர் தலைமையில் மாளிகாவத்தை பி.டி. சிறிசேன விளையாட்டு மைதானத்தில் அண்மையில் இடம் பெற்றது.

இந்நிகழ்விற்கு பிரதம அதிதியாக மாளிகாவத்தை பொலிஸ் நிலையத்தின் பொறுப்பதிகாரி பி.என்.ஏக்கநாயக்கவும் கௌரவ அதிதிகளாக பிரீத் குளோபல் மற்றும் அத்கம் வேல்ட் தனியார் நிறுவனங்களின் தலைவர் சிஹாப் ஸரீம், லங்கா அக்றோ புறோசசிங் தனியார் நிறுவனத்தின் பொது முகாமையாளர் எம்.எஸ்.எம்.ஷாமில், டயமண்ட் பெஸ்ட் பூட் தனியார் நிறுவனத்தின் ஏ.எஸ்.எம்.நாபாஸ் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டிருந்தனர்.

இதன்போது போட்டி நிகழ்வுகளில் தமது திறமைகளை வெளிப்படுத்தி வெற்றி பெற்ற மாணவ, மாணவிகளுக்கு சான்றிதழ்கள், நினைவுச் சின்னங்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டதுடன் சபா இல்லம் அதி கூடிய புள்ளிகளைப் பெற்று வெற்றிக் கேடயத்தை தட்டிக்கொண்டமை குறிப்பிடத்தக்கது. (ஏ.எஸ்.எம்.ஜாவித்)

Printed and Published by Freelanka Media Ltd. #156, Hospital Road, Kalubowila, Dehiwala. on 14TH MARCH 2017